



# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32+VIII | சுடர் 31 | கதிர் 279 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 15, புதன்கிழமை 31.08.2016


# பன்னாட்டு நீதி கேட்டு நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 31

பன்னாட்டு காணாமற்போனோர் தினமான நேற்று 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு பன்னாட்டு நீதிப்பொறிமுறைகளே அவசியம்' என்பதனை வலியுறுத்தி காணாமற்போனவர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்புக்களால் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளில் மாபெரும் ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி பன்னாட்டு காணாமற்போனோர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. பன்னாட்டு மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் அமைப்பு மற்றும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் என்பன இணைந்து முதன் முதலாக 1981ஆம் ஆண்டு >> 27ஆம் பக்கம்



நல்லூர் முருகப்பெருமான் நேற்று சப்பை ரதத்தில் வீதியுலா வந்தபோது...

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.31

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு இடம்பெறுகிறது.

காலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சண்முகப் பெருமான் 8.00 மணிக்கு தேரில் வலம் வருவார் என அறிவிக்கப்பட்டது. நல்லூர்க் கந்தனின் தேர்க் காட்சியை >> 29ஆம் பக்கம்

## வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேறிய மண்டபத்தை பாதுகாக்கவேண்டும்

### வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 31

தனித் தமிழீழம்தான் தீர்வு என வட்டுக்கோட்டை தீர்மானம் எடுக்கப்பட்ட பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தின் கந்தையா மண்டபம் உறுதியாக உள்ளதால், அதனை இடிக்காது பாரம்பரியத்தையும், எங்கள் வரலாற்று >> 28ஆம் பக்கம்

## கொழும்புக்கு இன்று வருகிறார் பான் கீ மூன்

கொழும்பு, ஓக. 31

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீமூன் இன்று கொழும்புக்கு வருவதை முன்னிட்டு தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள அமைப்புகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டங்களைகொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கவுள்ளன.

இதனால் கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலக வளாகம்உள்ளிட்டதலைநகரின் முக்கிய பகுதிகள் >> 29ஆம் பக்கம்

## விக்கியை சந்திப்பார் பான் கீ மூன்

கொழும்பு, ஓக. 31

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வரும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ – மூனை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் வடக்கு மாகாண அமைச்சர்களும் நாளைமறு தினம் வெள்ளிக் கிழமை சந்திப்பர் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நாளைமறுதினம் இரா.சம்பந்தன் >> 28ஆம் பக்கம்

## தாலியிலும் பிரபாகரன்



யாழ்ப்பாணம், ஓக.31

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவத்தைத் தாலியில் செதுக்கி திருமண வைபவம் ஒன்று நடைபெற்றதாக சமூகவலைத்தளங்களில் செய்தி பரவியது.

புலம்பெயர் நாடு ஒன்றில் இடம்பெற்ற திருமண வைபவத்திலேயே இந்தத் தாலி பயன்படுத்தப்பட்டது. தமிழர்களின் அடையாளமாகவே, விடுதலைப் புலிகளின் தலைவரை தாலியில் இணைத்துள்ளதாக பலராலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. (வ–ரி)

## முன்னாள் போராளி கைதா? கடத்தலா?

### குழப்பத்தில் உறவினர்கள்

கிளிநொச்சி, ஓக. 31

கிளிநொச்சி – தொண்டமான் நகர் பகுதியில் முன்னாள் போராளி ஒருவர் வெள்ளைவானில் வந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்டார் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர். அவரை அழைத்துச் செல்வது தொடர்பில்எந்தவிவரமும்தெரிவிக்கவில்லை என்பதால், முன்னாள் போராளி கைதுசெய்யப்பட்டாரா? அல்லது கடத்தப்பட்டாரா? என்ற குழப்பத்தில் உள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

முறிகண்டி அறிவியல் நகர் பகுதியைச் சேர்ந்த மனோகரசீலன் நிசாந்தன் >> 29ஆம் பக்கம்

## வலி.வடக்குக் காணிகள் ஆக்கிரமிப்புக் குறித்து ஜனாதிபதிக்குத் தெரியாதாம்

### இப்படிக் கூறுகிறார் சுவாமிநாதன்

கொழும்பு, ஓக. 31

வலிகாமம்வடக்கில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள 11 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள காணிகள் விடுவிக்கப்படாது என்றும், அதற்குப் பதிலாக இழப்பீடு வழங்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்தவொரு >> 29ஆம் பக்கம்

## முள்ளிவாய்க்காலில் நாளை கடற்படைக்கு காணி அளவீடு

முல்லைத்தீவு, ஓக. 31

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் கடற்படைத் தளம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர்களான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் இருவரும், சீனக் குடிமகன் ஒருவரும் தங்களுடைய காணியை கடற்படையினருக்கு வழங்கச் சம்மதித்தனர். இதனாலேயே அந்தக்காணிகள் நாளை கடற்படையினருக்காக >> 28ஆம் பக்கம்

## யாழ். நகர நகைக் கடையில் திருட்டு

யாழ்., ஓக. 31

யாழ். நகரின் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் நேற்று முன்தினமிரவு கதவு உடைக்கப்பட்டு 8 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கஸ்தூரியார் வீதியில் உள்ள இருநகைக் கடைகள் உடைக் >> 28ஆம் பக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலருக்கு சைவத் தமிழர் மனு

## கலாசார அடையாளங்களின் அழிப்புக் குறித்து

யாழ்ப்பாணம், ஓக. 31

சைவத் தமிழர்களின் மரபுரிமை அடையாளங்கள் திட்டமிட்ட ரீதியில் தொடர்ச்சியாகச் சிதைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கலாசார அடையாள அழிப்புக்கு எதிராக சைவத் தமிழர்களால் கையெழுத்திடப்பட்ட மனு ஒன்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஐ.நா. செயலர் பான் கீ-மூன் இன்று இலங்கை வரும் நிலையில் இந்த மனுவை அவரிடம் நேரடியாகக் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக நல்லூரில் கையெழுத்துக்களைத் திரட்டும் முயற்சியில் சைவ மகா சபையும் இணை அமைப்புக்களும் ஈடுபட்டுள்ளன.

வேற்று மதச் சின்னங்களை நிறுவுவதன் ஊடாகச் சைவத் தமிழ் மரபுரிமை அடையாளங்களை அழிக்க முற்படுகின்றனர். இதனைத் தடுக்கக் கோரும் கையெழுத்திடலுக்குப் பூரண ஒத்துழைப்புத் தந்து எமது அடையாளங்களைப் பாதுகாக்கச் சர்வதேச ஆதரவைக் கோருவோம் என்று அகில இலங்கை சைவ மகா சபை கேட்டுள்ளது. (த-4)



யாழ்.மாவட்டச் சாரணர் சங்கத்தின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில் கனேடிய அரசின் அனுசரணையுடன் முத்திரை வெளியீட்டு விழா யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் பாடசாலை அதிபர் தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. நூற்றாண்டைக் குறிக்கும் முத்திரையை சர்வதேச சாரணிய இணைப்பாளர் இ.ராஜ்குமார் வெளியிட முதற்பிரதியை வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் பெற்றுக்கொண்டார். (த-ரி)

## உடைமைகளில் அவதானம் செலுத்துங்கள் பக்தர்களே

யாழ்ப்பாணம், ஓக 31

நல்லூர் கந்தசுவாமி தேர், தீர்த்த திருவிழாக்களின்போது பக்தர்கள் தமது உடைமைகளில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். அத்துடன் ஆலயச் சுற்றாடலில் பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கமராக்கள் மூலம் சகல நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் தேர், தீர்த்தத் திருவிழாக்களில் பக்தர்களின் நெரிசல் அதிகரித்துக் காணப்படும். இந்த நிலையில் பக்தர்கள் தமது உடைமைகளில் அவதானம் செலுத்தவேண்டும்.

கண்காணிப்புக் கமராக்கள் மூலம் சகல நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் உற்சவகால பணிமனைகளில் பக்தர்கள் தமக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் முறைப்பாடு செய்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# டெங்குத் தொற்றைத் தடுக்க பாடசாலைச் சுற்றாடலை உடன் துப்புரவு செய்யுங்கள்

## பெற்றோர், பழைய மாணவர் சங்கங்களிடம் சுகாதாரத் திணைக்களத்தினர் கோரிக்கை

தென்மராட்சி, ஓக. 31

மூன்றாம் தவணைக்காகப் பாடசாலைகள், முன்பள்ளிகள் ஆரம்பிக்க முன்னர் அவற்றின் சுற்றாடலைப் பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்படன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து டெங்கு பரவாமல் தடுக்குமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் நேற்று அறிவித்துள்ளனர்.

பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. அண்மையில் பிரதேசத்தில் பெய்த மழை மற்றும் ஒரு மாத காலமாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையால் அவற்றின் வளாகம் மற்றும் முன் பகுதிகள் குப்பைகளும் புற்களும் வளர்ந்து காணப்படுகின்றன.

மழை காலம் அண்மித்துள்ளதால் மாணவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். எனவே பாடசாலை மற்றும் முன்பள்ளிகளைத் துப்புரவாக வைத்திருக்கச் சிரமதானங்களை பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் மேற்கொண்டு டெங்கு பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் கோரியுள்ளனர். (த-9)

# கண்காணிப்புக் கமரா மூலம் கண்டுபிடிக்கப்படும் சிறார்கள்

## நல்லூர் ஆலயச் சுற்றாடலில்

யாழ்ப்பாணம்,ஓக.31

நல்லூர் கந்தசுவாமி கோயில் சுற்றாடலில் அமைக்கப்பட்ட கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் பெற்றோர்களினால் தவறவிடப்பட்ட 25 க்கும் மேற்பட்ட சிறார்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

தவறவிடப்பட்ட சிறுவர்களைப் பெற்றோர்கள் தேடி அலைந்து திரிந்தனர். மாநகர உற்சவ காலப் பணிமனையிலும் முறைப்பாடுகள் செய்தனர்.

ஆலயச் சுற்றாடலில் அமைக்கப்பட்ட கண்காணிப்புக் கமராக்களில் சிறுவர்கள் தவறிய தமது பெற்றோர்களைத் தேடி அலையும் காட்சிகள் பதிவாகியிருந்தன. மாநகர உற்சவகாலப் பணிமனையினர் விரைந்து செயற்பட்டுச் சிறுவர்களை மீட்டுப் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு இதுவரை 25 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் திருவிழாக் காலத்தில் தவறவிடப்பட்டு கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (த-17)

# தம்பதியிடம் கொள்ளை; மூவர் கைதாகி மறியலில்

சாவகச்சேரி, ஓக. 31

வரணிப் பகுதியில் வயோதிபத் தம்பதியைத் தாக்கி அவர்களது வீட்டிலிருந்து பணம் மற்றும் தங்க நகைகள் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்குப் பணித்தார்.

கடந்த 23 ஆம் திகதி வரணி, இயற்றாலைப் பகுதியில் மதியம் ஒரு மணியளவில் காரில் வந்த நால்வர் அந்தப் பகுதியில் உள்ள வீட்டுக்குச் சென்று அங்குள்ள வயோதிபத் தம்பதியிடம் பணம் மற்றும் தங்க நகைகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தம்பதியினர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு திருட்டுடன் தொடர்புடைய நபர், வாகனச் சாரதி, திருடிய நகைகளைக் கொள்வனவு செய்த வர்த்தகர் ஆகிய மூவரையும் கைது செய்தனர்.

இவர்களை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது மூவரையும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் வாகனச் சாரதி, திருட்டுடன் தொடர்புடைய நபர் ஆகியோரை அடையாள அணி வகுப்பில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்குப் பணித்தார்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் யாழ்.நகரில் வைத்துத் தப்பியுள்ளனர். அவ்வாறு தப்பியோடியவர்களில் ஒருவர் பின்னர் கைது செய்யப்பட்டதாகவும் மற்றொருவர் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4-9)

# 20மாதங்களின்பின்னர் தோண்டப்பட்ட சடலம்

## உயிரிழப்பில் சந்தேகம் வெளியிடப்பட்டதால்

20 மாதங்களின் முன்னர் பெண் ஒருவர் உயிரிழந்ததில் சந்தேகம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதால் அவரது சடலம் அச்சுவேலியில் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டுப் பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மல்லாகம் நீதிவான் முன்னிலையில் சடலம் நேற்றுத் தோண்டப்பட்டது.

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து அச்சுவேலி மேற்கு அச்சு நகர் பகுதியில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயான திருமதி தேவராசா மனோரம்மா (வயது-41) 2014 ஆண்டு டிசெம்பர் 7ஆம் திகதி உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பாகப் பிரான்சில் வசிக்கும் பெண்ணின் கணவன் பெ.தேவராசாவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் டிசெம்பர் 10 ஆம் திகதி நண்பகல் வீடு திரும்பினார். முன்கூட்டியே செய்திருந்த ஏற்பாட்டின் பிரகாரம் 10ஆம் திகதி மாலை இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



வெளிநாட்டில் இருந்து திரும்பிய கணவன் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பாகச் சந்தேகம் தெரிவித்ததோடு, இறுதிச் சடங்குகளைப் பிற்போடுமாறு கூறிய போதிலும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் சடலம் அச்சுவேலி மேற்கு தோப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்புக்கான காரணம் தெளிவுபடுத்தப்படாமையாலும் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் வழங்கிய தகவல்களாலும் மனைவியின் இறப்பில் சந்தேகம் கொண்ட கணவன், மல்லாகம் நீதிவான் மன்றத்தில் தனது சட்டத்தரணி ஊடாக மனுத் தாக்கல் செய்து மீள் உடற் கூற்றுப் பரிசோதனை, ஆய்வு கள் செய்யவேண்டும் எனக் கோரி இருந்தார்.

தோண்டி எடுக்கப்பட்ட சடலம் மீள் உடற்கூற்றுப் பரிசோதனை, ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.(த-4-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு தங்கம் கடத்தியவர் சிக்கினார்

**பிந்திய செய்தி**

பருத்தித்துறையிலிருந்து கடல் வழியாக இந்தியாவுக்கு தங்கம் கடத்தியவரை நேற்றிரவு காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், அவரிடமிருந்து 4 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது. 'பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற் றிரவு 10 மணி யளவில் சந்தேகத் துக்கிடமாக பயணித்த படகு ஒன்றை சோதனை யிட்டபோது, அதில் தங்கம் மறைத்து வைத்திருந்தமை தெரியவந்தது. அது தொடர்பில் படகை செலுத்திச் சென்றவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு அதனை கடத்துவதாகத் தெரிவித்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அந்த படகு ஓட்டியைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்த தங்கம் மற்றும் அவர் பயணித்த படகும் கைப்பற்றப்பட்டன. என்று கடற்படையினர் தெரிவித்தனர். (வ-26)

**தவறிவிட்டது**

கடந்த 17.08.2016 ஆம் திகதி பலாலி திலீபன் ஒழுங்கைக்கும் கோண்டாவில் டிப்போக்கும் இடையே எனது பூஜைப்பொருள்கள் கொண்ட கைப்பையை தவறவிட்டு விட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 021 300 1740
நவரத்தினம் சுந்தரலிங்க குருக்கள்
(J 4213) (14.17.18)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 30.08.2016 | 2024 | நீலம் |

மகரம் 14 39 57 61

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி ரூ 3,066,560 /-

நியத்த ஜய

| | |
|---|---|
| வெற்றி எண் | 492 |
| திகதி | 30.08.2016 |
| வர்ணம் | மஞ்சள் |

09 39 54 65 D

ரூ 12,512,680/=

2016.09.02

கோடீபதி

041

2016.08.30

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 92,721,240/-

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்

J 36 46 65 66

Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 011 4 824 824

**A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!**

21வது ஆண்டில் காலடிபதித்துள்ள IIS ல் நவீன தொழில்நுட்ப அறிமுகங்களுடன் கூடிய கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன......

பிரிவு I: 05.09.2016 காலை 10.00மணி

கற்கை நெறிகள்

- Certificate in Microsoft Office
- Certificate in Desktop Publishing
- Certificate in Web Designing
- Certificate in Auto CAD
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Hardware Technology
- Certificate in Computerized Accounting
- Certificate in Multimedia

Institute of Informatics Studies
200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
071 777 3444 / 021 4900 900

IIS உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி

இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் முருகன் கோயில் பின் வீதியும் சங்கிலியன் வீதியும் இணையும் சந்தியில் மாபெரும் இசை நிகழ்ச்சி



சத்தியபிரகாஷ்

அனுசியா (VSSJ4)

நவீன் (Season 5)

மிமிக்கிரி மூர்த்தி

(Tamil One TV)

நன்கொடை நுழைவுச்சீட்டுக்கள்
300/= / 500/= / VIP
அரங்க நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

ஏற்பாட்டுக்குழு
Ceylon Art Creation
077 550 4910
077 480 3020

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

இல.84, ஜீம்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்துக்கு ஒரு வருட காலத்துக்குச் சுத்தப் படுத்தல் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

வியாபாரப் பெயர்கள் சட்டம் இல.4/1990 இனால் ஒன்றிணைக் கப்பட்ட வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 149) இன்படி பதிவு செய்த அல்லது வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றுடன் இணைக்கப்பட்டமைக்கான சான்றிதழ் (பகுதி 20 இன் பிரகாரம்) உள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங் களை 13.09.2016 நண்பகல் 12 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதி வாளர் நிர்வாகக் கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மீள ளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= ஐ நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் உறையிலிடப்பட்டு அவ்வுறையின் மேல் மூலையில் சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு என அடையாளமிடப்பட்டு 15.09.2016ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல.57, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம். அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலைமனுக்கள் 15.09.2016ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கள் விலைமனுக்கள் திறக்கப்படும் இடமான சபா மண்டபத்துக்கு சமுகமளிக்கலாம்.

சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம் பளத்துக்குக் குறையாத சம்பளம் ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் சேவை வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத் துக்கு வழங்கப்பட வேண்டும்.

**பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

**- பதிவாளர் -**

Begin your Career in
INTERNATIONAL DIPLOMA
After A/L's



Dual Certification
Pearson (UK) + ESOFT

assured by PEARSON

IT + ENGLISH

Diploma in Information Technology
Duration : 4 Months
Course Fee : Rs. 26,500
-Ms Office, Hardware & Networking
-Graphics & Animation
-Web Designing
-Software Engineering
-Programming (Java, C#.net) and many more

Diploma in English
Duration : 4 Months
Course Fee : Rs. 19,500
-Grammar
-Spoken
-Comprehension
-Role Plays and more

பதிவுகளை புரட்டாதி 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்
சேமிப்பு Rs. 16,375

Dual Diploma Usual Price Rs. 46,000
Dual Diploma With Discount Rs. 29,625

25% off for the 1st Diploma
50% off for the 2nd Diploma

Other international Diplomas

- DiSE Diploma in Software Engineering
- DiBM Diploma in Business Management
- DiCA Diploma in Computerized Accounting
- DiBE Diploma in Business English
- DiWE Diploma in Web Engineering
- DiHN Diploma in Hardware & Networking
- DiM Diploma in Multimedia
- DiAE Diploma in Academic English

ESOFT Branded T-Shirt FREE for Every 1st Diploma Registration
8GB Pendrive FREE for Every 2nd Diploma Registration

NEW BATCHES
05.SEP.2016
07.SEP.2016 @ 9:00am

London Metropolitan University, Pearson, Microsoft IT Academy Program Member, Oracle Academy, Intel

ESOFT — Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142
www.esoft.lk
The Sri Lanka's Largest Higher Education Network

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சுக அனுபவம் V

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், யாழ்.இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்துவரும் தெய்வீக சுக அனுபவம் V நிகழ்வின் **பயிற்சிப்பட்டறை இன்று (31.08.2016) புதன்கிழமையும், நடன நிகழ்வு 2016.09.01, 2016.09.02** ஆம் திகதிகளிலும்இடம்பெறவுள்ளன.இந்நிகழ்வில் தென்னிந்தியப் பிரபல **நாட்டியக் கலைஞர் ஸ்ரீமதி ராதிகா சுராஜித் அவர்களும் அவருடன் இணைந்த குழுவும் வழங்கும் பரதநாட்டிய அளிக்கைகள்** மற்றும் **வவுனியா நிருத்திய நிகேதன நடனக்கல்லூரியினர் வழங்கும் நிருத்தியாஞ்சலியும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் நடன ஆர்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொள்ளு**மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பயிற்சிப்பட்டறை மற்றும் ஆற்றுகையின் விவரம் வருமாறு:

| திகதி | நிகழ்வு | இடம் | காலம் |
|---|---|---|---|
| 31.08.2016 | பயிற்சிப்பட்டறை | யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபம் | மாலை 03.00 |
| 01.09.2016 | கலை நிகழ்வு | சங்கிலியன் தோப்பு, நல்லூர் | மாலை 06.00 |
| 02.09.2016 | கலை நிகழ்வு | தேவா கலாசார மண்டபம், நெடுந்தீவு | மாலை 05.00 |

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.

**இரவீந்திரன் - செயலாளர்**

## சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்- பெறுகைகளுக்கான அழைப்பு
## பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை - 2016 / 2017

1. வட மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைகள் குழுத் தலைவர் மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள், சான்றுபெற்ற பாடசாலை, பாதுகாப்பு இல்லங்கள், சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் ஆகியவற்றுக்கு தேவையான பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை ஆகிய சேவைகளுக்கான சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விவரம் | எண்ணிக்கை | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|---|
| 01. | NP/30/02/02/SS/2016 | பாதுகாப்பு சேவை - 2016/2017 | 23 | 20,000.00 |
| 02. | NP/30/02/02/CS/2016 | சுத்திகரிப்பு சேவை - 2016/2017 | 18 | 20,000.00 |

2. பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை ஆகிய சேவைகளுக்கான விலைக்கேள்விதாரர்கள் இலங்கைப் பிரைஜைகளாகவோ அல்லது வலுவான வியாபார பதிவுச்சான்றிதழைக் கொண்டிருக்கின்ற நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும்.
3. பொருத்தமான கேள்வி வைப்பு பணம் ஆவணம் பெறுகைகளுடன் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.
4. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள சேவையாளர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் இத் (021-222-4782) திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் ' Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கமுடியாத ரூபா 1000.00 காசாக செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **02.09.2016 தொடக்கம் 13.09.2016** வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை (12:30 தொடக்கம் 13:00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் 15.09.2016ஆம் திகதி15.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்திலுள்ள ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். **விலைக் கேள்விகள் அனைத்தும் 15.09.2016 ஆம் திகதி 15:00 மணிக்கு திறக்கப்படும்.**
7. **"சேவையின் விவரம் ............ பெறுகை இல............"** போன்ற விவரம் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
8. எழுத்துமூலம் அனுமதியளிக்கப்பட்ட விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்,**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி -021 205 7102, தொலைநகல் - 021 205 7103**

## ரவுடிகளால் தாக்கப்பட்டவர் நேற்றுச் சாவு

கிளிநொச்சி, உதயநகர் கிழக்கில் கடந்த 22ஆம் திகதி ஐந்து பேர் கொண்ட குழுவினரின் தாக்குதலுக்குள்ளான நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்தார் எனதெரிவிக்கப்பட்டது. கடந்த 22ஆம்திகதி ஐந்து பேர் அடங்கிய குழுவினர் உதயநகர் கிழக்கைச்சேர்ந்த அருணாசலம் கதிரமலை (வயது-42) என்பவரைக்கடுமையாக தாக்கினர். தாக்குதலுக்குள்ளானவர் மறுநாள்கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிசைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றிஉயிரிழந்தார். சந்தேகத்தின் அடிப்படையில் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒருவர் தேடப்படுகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-101)

### வேலையாள் தேவை

**நெல்லியடியில் உள்ள பிரபல புடைவைக் கடை ஒன்றுக்கு அனுபவம் உள்ள, அனுபவம் இல்லாத ஆண், பெண் இருபாலாரும் உடனடியாக வேலைக்குத் தேவை.**

**077 844 8045**

### வேலைவாய்ப்பு

கம்பஹா மாவட்டம் பியகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்திலுள்ள பிரபல ஆடை உற்பத்தித் தொழிற்சாலையில் இயந்திர இயக்குனர் பதவி வெற்றிடங்கள் மாதாந்த வருமானம் 32, 000 இற்கு மேல். மாதம் சராசரி 20 நாள்கள் வேலை. (EPF,ETF) உண்டு.

**077 342 4844**

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த 22 பாவக்கிரகமுடைய லக்கினத்தில் செவ்வாயும் அனுசநட்சத்திரமும் உடைய சொந்த தொழிலிலுள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

**தொடர்பு: 077 822 2446**

### விஷேட பல் வைத்திய சேவை

- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### ஜோதிடம்

மிகவும் துல்லியமான முறையில் ஜாதகம் பார்த்து பலன் சொல்லப்படும்.

**தொடர்பு.0765690902**

### ஊர்க்கோழிகள் விற்பனைக்கு

**ஊர்ச் சேவல்கள், வான்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.**

**077 245 3673**

### பெயர் மாற்றம்

கணேசு சீதா ஆகிய நான் எனது பெயரை கணேசு கீதா(KEETHA) என பெயர் மாற்றம் செய்துள்ளேன். இனி வரும் காலங்களில் கீதா எனும் பெயரையே சகலதேவைகளுக்கும் ஆவணங்களுக்கும் பயன்படுத்துவேன் என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

க.கீதா
KEETHA

### வேலையாள்கள் தேவை

எமது ஸ்ரூடியோவுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தமது சுயவிவரக்கோவையுடன் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

**பேபி போட்டோ**
**இல.243, பலாலிறோட், கந்தர்மடம்.**

### வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில், A9 வீதியில்.பழைய வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள "நியூ சன்ஸ் செறமிக் பிறைவேற் லிமிட்டெட்" நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை, (Sales Man), O/L, A/L படித்த ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 0212283872**
**0729532598**

# ES Printers

GiftZ
உங்கள் உறவினர்களுக்கு அன்பளிப்பு பொருள்களை எம் இணையத்தளம் ஊடாக அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com
info@esgiftz.com



Poster/ Notice/ Lable/ Wedding Card
Bag Print / Award/ Frame Item/
Batch/ Vehicle Brand / T-Shirt / Cap /
ID Card / Key Tag / Book Mark /
Pen Print / Book Printing /
Woodent Print

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 492 7471 / 021 492 7472 esprintersjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

# DMI COMPUTER EDUCATION

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

## After A\L 2016 IT & English Diploma



- Dip.in Information Technology — DITEC
- Diploma in Office Automation — DOA
- Dip. in Pre-Press Desktop Publicating — DTP
- Diploma in Pc Applications — DPCA
- Adv. Dip. in Hardware & Networking — ADHN
- Dip. in Video Production & Multimedia — DVPM
- Dip.in Web Designing & Development — DWD
- Dip. in Computerized Accounting — DCA


Auto CAD, JAVA, C++, PHP, Maya

75% OFF

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2/9/2016 (Fri)- 9.30 am.
5/9/2016 (Mon)- 9.30 am.

☑ Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து ... Microsoft Specialist சான்றிதழ்கள்

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

Experts in English Training

சிறந்த வேலைவாய்ப்பிற்கு.....
உள்நாட்டு / வெளிநாட்டு உயர் கல்விக்கு...

**Spoken English**

GET Enrolled .....
& Feel the Difference.

புதிய பிரிவுகள் ஆரம்பம் Time - 10.30 am.
2/9/2016 (Fri) 5/9/2016 (Mon)


யாழில் பல்கலைக்கழக, தொழில் புரிவோர், தொழில் தேடுவோர் 5000க்கும் மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட ஆங்கிலப்பாடநெறி

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி | M.M.V. வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, (மத்திய கல்லூரி முன்பாக) |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## அண்ணாமலையான் ஸ்ரீராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்

# ASR Wedding Halls




திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் உட்பட சகலவிதமான வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.**

புதுப்பொலிவுடன் புதிய பைவர் மணவறையில் உங்கள் உறவுகளின் திருமணங்களை நடத்திட முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

**ஒக்ரோபர் 28,31 ஆகிய முகூர்த்த திகதிகளில் இடங்கள் இருப்பதால் இப்போதே உங்கள் பதிவுக்கு முந்துங்கள்.**

**எமது திருமண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணைந்த அனைவருக்கும் நல்லூர்க் கந்தனின் அருள் கிடைக்க வாழ்த்துகின்றோம்.**






Annamalaiyan
Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd

**இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 373 4116, 021 222 1355**
asrhall@hotmail.com
Find us on : Facebook.com/jaffnaasrenterprises

## அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் உயர்தரத்திலான பிரதியாக்கச்சேவைகள்.

# SYENTHETIC ALBUM PRINT



- Glossy Print
- Embossing Print
- Metralic Print (Gold,Silver,Ping,Green, Ocian Blue)
- Transparant Clear Sheet Printing
- Glossy,Velvet,Silkmat Hollographic Laminating

DIGITAL Offset Printing

- Banner Printing
- Plate,Mug Printing
- Glass,Crystal,Duro Box Framing
- HD Video & Photo
- Digital Door working



# MOORTHY

digital imaging service

**021 222 1358**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா

*"பக்தியோடு கைகூப்பி வணங்கு வோர்க்கு பக்குவமாய் வரமளிக்கும் வரத்தலம் கற்பக விநாயகரே கலங்கு கிறோம் நாமிங்கு இன்று*
*விரைந்து தேரேறியே விலக்கிடுவாய் விக்கினங்கள்"*

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி. வடக்குப் பிரதேசத்தில் தெல்லிப்பழை சந்தியிலிருந்து மேற்கே செல்லும் பண்டத்தரிப்பு வீதியில் அளவெட்டி வீதியும் அம்பனைச் சந்தியும் சந்திக்கும் இடத்திலிருந்து சிறிது தூரத்தில் அமைந்துள்ள ஆலயமே வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம். இந்த விநாயகர் சோழவள நாட்டின் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று வரலாறு. அவர் தனக்கிருந்த குதிரை முகம் குன்ம நோய் காரணமாக தலயாத்திரையும் தீர்த்த யாத்திரையும் மேற்கொண்டு இலங்கை வந்து குமாரத்தி பள்ளத்தில் அமைந்திருந்த முருகனை வழிபட்டமையால் அவனருளால் குதிரை முகம் மாறப்பெற்றாள். இந்த அற்புதமே குமாரத்தி பள்ள கந்தப்பெருமான் மாவிட்ட (குதிரை முகம் நீங்கப் பெற்றதால்) கந்தனாக வரலாற்றுப் புகழ்பெற்று மக்களுக்கு தன்னை மனதார அன்புடன் வழிபடுவோர்களுக்கு வரமருளும் கந்தனாவான்.

குதிரை முகம் மாறப்பெற்றும் அரசியின் குன்ம நோய் தீராதபடியால் கீரிமலையில் சென்று நகுலகிரியில் தீர்த்தமாடினார். அப்படியிருந்தும் அவரது நோய் முற்றாக மாறாத படியால் அவர் மனம் வருந்தினார் எனவும் அவரின் கனவில் அவர் பிள்ளையாரை வணங்கினால் நோய் முற்றாக மாறிவிடும் என்ற நிலைப்பாடு தோன்றியதால் இளவரசி மாவிட்டபுரத்துக்கும் கீரிமலைக்கும் இடைக்கிராமமான கொல்லங்கலட்டியில் ஒரு பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுப் பின்னர் இரண்டாவது பிள்ளையாரைப் பண்ணாலை வரத்தலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றி தொடர்ந்து ஏழு பிள்ளையார்களைப்பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றி முற்றாக நோய் நீங்கப் பெற்றார் என்பது வரலாறு.

பிரதிஷ்டை செய்யப்பட்ட வரத்தலம் கற்பக விநாயகர் அங்கு வசித்து வந்த கற்பக நாயகியின் கனவில் தோன்றி தன்னை வழிபாடாற்றும்பணியை நிறைவேற்றியதால் அவருக்கு வரத்தலம் கற்பக விநாயகர் என்ற பெயராயிற்று.

இன்று வரத்தலம் கற்பக விநாயகர் தேரேறி வந்து தீராதவினை தீர்த்து தன் பக்தர்களை மட்டுமன்றி பல்லுயிர்களையும் பண்பாட்டு விழுமியங்களுடனும் அவர்களது கலை, கலாசாரங்களுடனும் வாழ்வதற்கு வழிகாட்டுவாராக!

*தெல்லியூர்த்தேவி*

# செல்வச் சந்நிதி ஆலயத் திருவிழாவுக்கு கலாசார உடையுடன் வருமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.31

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அங்கு வழிபடச் செல்வோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றியே அங்கு செல்லவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

திருவிழா பற்றிய ஏற்பாட்டுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதில் எடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ரி.ஜெயசீலன் தெரிவித்ததாவது:

ஆலயத்துக்கு வரும் பக்த அடியார்கள் கலாசார உடையுடனும் ஒழுக்கசீலர்களாகவும் வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

மகோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்துவரும் திருடர்களின் நடமாட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பக்த அடியார்கள் தங்க ஆபரணங்கள் அணிவதை இயன்றளவு தவிர்க்கவேண்டும்.

இந்த வருடம் வலிகாமப் பகுதியில் இருந்து அச்சுவேலிப்பாதை ஊடாக வரும் பக்த அடியார்களுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைக்கான தரிப்பிடம் பிரதான பாலத்துக்கு அண்மையில் தொண்டமானாறுப் பகுதியில் அமைக்கப்படும்.

மகோற்சவ காலத்தை முன்னிட்டு புதிய நபர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டால், உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்படவேண்டும்.

மகோற்சவ காலத்தில் பச்சை குத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய சூழலில் உள்ள மடங்களில் ஒலி பெருக்கிப் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய சூழலில் சிகரெட், மதுபானம், புகைத்தல் பொருள்களின் பாவனை, போதை வஸ்துப் பொருள்களின் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

தம் சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு பருத்தித்துறைப் பிரதேச செயலகம், பொலிஸ்நிலையம், விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம், வல்வெட்டித்துறை நகரசபை என்பவற்றின் உற்சவ காலப் பணிமனைகள் கோயில் வளாகத்தில் இயங்கும் - என்று அறிவிக்கப்பட்டது. (ற-4)

# நல்லூரில் தெய்வீக நிகழ்வுகள்

நல்லூர் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழ லில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் நடைபெறுகின்றன.

இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள 24 ஆம் நாள் திருவிழாவான தேர்த் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஐந்தொழில் தத்துவம் எனும் தலைப்பில் சைவப் புலவர் க.கமலநாதனின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும். (ற-ரி)

## தவறான முடிவு எடுத்த சிறுமி சாவு

பண்ணாகத்தில் 17 வயதுச் சிறுமி தவறான முடிவு எடுத்துத் தனக்குத் தானே தீ மூட்டி உயிரிழந்தார். பெண் ஒருவரின் கொடுமை மற்றும் அவதூறு வார்த் தையினால்தான் சிறுமி தவறான முடிவுக்குச் சென்றதாக விசாரணையில் குற்றஞ்சாட்டப் பட்டது.

அந்தச் சிறுமி உள்ளிட்ட சிறுமியின் சகோதரர்கள் 3 பேருக்கும் பெற்றோர் இல்லை. நோய்வாய்ப்பட்ட பேர்த்தியாரே இயன்றளவு கூலி வேலை செய்து இரவில் மட்டுமே சமைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு அவர்கள் வறுமையில் உள்ளனர் என்பதும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தில் மனோகரன். சுலக்சனா (வயது – 17) என்பவரே உயிரிழந்தார். இந்தச் சிறுமியின் தாயார் 4 வருடங்களின் முன்பு உயிரிழந்துவிட்டார். தந்தையார் மறு திருமணம் செய்து சென்றுவிட்டார். அநாதரவாகிவிட்ட பிள்ளைகளைப் பேர்த்தியார் (சிறார்களின் அம்மம்மா) பாதுகாத்து வருகிறார். அந்தச் சிறுமியுடைய நண்பியின் தாயார் அவரை கடந்த 20 ஆம் திகதி ஏசி அடித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனால் அன்று மாலையில் தனக்குத் தானே எண்ணெய் ஊற்றி தீ மூட்டியுள்ளார். அவர் மீட்கப்பட்டு சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மறுநாள் காலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது கடந்த 28 ஆம் திகதி சிறுமி உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (வ-4,101)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வி
**சஞ்சுகா இராசகுமார்**

மலர்வு 05.10.2009
உதிர்வு 31.08.2014

சஞ்சு உன்னைப் படைத்த கடவுள்
எங்களிடமிருந்து பறித்து
ஆண்டுகள் இரண்டு கண்ணிமைக்கும் நேரத்தில்
மறைந்ததுவே!
உன்னை நினைக்க எம்முதிரம்
கண்ணீராய் உதிர்கிறது -
ஆண்டுகள் பல சென்றாலும்
உம் நினைவு எம்மனதை விட்டகலாது

உம் நினைவால் துயருறும்
அப்பா– இராசகுமார்,
அம்மா – மைதினி,
அண்ணா – அறுகன், அம்மம்மா,
அப்பம்மா, தாத்தா, சித்தப்பா,
சித்தி, மாமாமார், அத்தைமார்,
அக்காமார்கள்.

வைரவர் கோயிலடி,
கைதடி – நுணாவில், சாவகச்சேரி.
077 394 5889

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
24 . 04 . 1930



மறைவு
01 . 08 . 2016

**அமரர் அன்னப்பிள்ளை சின்னராஜா**

கடந்த 01.08.2016 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அன்னப்பிள்ளை சின்னராஜா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.08.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும் தொலைத் தொடர்பு சாதனம் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலை தூரங்களில் இருந்து அன்னாரைத் தேடி வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"மிதிலை"
டச்சு றோட், உடுவில், சுன்னாகம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(ஃ 4063)(12.18.)

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவுகளில்......



திருமதி
**நாகமுத்து (பிள்ளையம்மா) பொன்னையா**

திதி: 31.08.2016

மண்ணில் 12 . 03 . 1934
விண்ணில் 11 . 09 . 2015

ஆண்டொன்று சென்றாலும் அம்மா
ஆறவில்லை எம் துயர்
உங்கள் நினைவுகள் தினம் தினம்
எம்மை வாட்டுது அம்மா
நினைத்து நினைத்து ஏங்கும் எம்மனதில்
நிலையாக வாழ்கிறீர்கள் அம்மா!

பேராலைப் பிள்ளையார்
கோயிலடி, பளை.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவராக பணியாற்றிய எனக்கு ஊழல் செய்யும் அவசியமில்லை

## வடக்கு சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

வவுனியா, ஓக. 31

கௌரவமான மருத்துவர் பணியை விட்டு மக்களுக்குப் பணியாற்ற அரசியலுக்கு வந்த எனக்கு அரசியல் மூலம் எந்த தனிப்பட்ட தேவையையும் பூர்த்தி செய்யவேண்டிய அவசியம் இல்லை. அதற்காக நான் அரசியலுக்கு வரவும் இல்லை. அமைச்சர்களை விசாரிப்பதற்கு குழு அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எனக்கு எந்த விதமான அச்சமும் இல்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர்.ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது மேற்கொள்ளப்பட உள்ள வெளியக விசாரணைகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாண சபை தமிழர் வரலாற்றில் முதன் முறையாக ஸ்தாபிக்கப்பட்ட சட்டரீதியான சபையாகும். பல சிரமங்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் மாகாண சபை உருவாக்கப்பட்டு 3 வருடங்கள் பூர்த்தியாகவில்லை. இந்தநிலையில் மாகாண அமைச்சர்களை விசாரிக்க விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டமானதாகும்.

குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு என்ன குற்றம் செய்தார்கள் என்ற விவரங்களைத் தெரியப்படுத்தாமல் அவர்களுக்கெதிராக வெளியக விசாரணை நடத்துவதற்குக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில் எனக்கு எந்தவிதமான அச்சமும் இல்லை. அரச உள்ளக விசாரணைப்பொறி முறைகள் மாகாணத்தில் உள்ளபோதும் அதை விடுத்து வெளியக விசாரணைக்குழு நியமிக்கப்பட்டமை வருத்தமளிக்கின்றது.

தொழில்ரீதியாக மருத்துவராகப் பூரண திருப்தியுடன் மக்களுக்காகக் கடந்த 20 வருடங்களாகச் சேவை செய்துள்ளேன். வடக்கில் ஏற்பட்ட இயற்கை, செயற்கை பேரவலங்களின்போது நானாக முன்வந்து அரச கட்டுபாடற்ற பிரதேசங்களில் சவால்களுக்கு மத்தியில் பணியாற்றியுள்ளேன். நான் ஒருபோதும் அரசியலுக்கு வருவேனென்று சிந்தித்ததே இல்லை. காலத்தின் தேவைகருதி அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டேன். அரசியலுக்கு வருவதற்கு முன்னமே எனது தொழிலில் கிடைக்கும் வருமானத்தில் எனது குடும்ப தேவைகளைப் பூர்த்தி செய்து வசதிவாய்ப்புகளுடன் வாழ்க்கை நடத்தியவன். கௌரவமான மருத்துவர் பணியை விட்டு மக்களுக்குப் பணியாற்ற அரசியலுக்கு வந்த எனக்கு அரசியல்மூலம் எந்த தனிப்பட்ட தேவையையும் பூர்த்தி செய்யவேண்டிய அவசியம் இல்லை. அதற்காக நான் அரசியலுக்கு வரவும் இல்லை. எனினும் சிலரின் கபடநோக்கங்கள் நிறைவேறுவதற்காக அமைச்சர்கள் மீது வீண்பழி சுமத்தியுள்ளனர்.

எனக்கு வழங்கப்பட்ட அமைச்சைப் பொறுத்தவரை துறைசார்ந்தவன் என்ற வகையில் நாட்டின் ஏனைய மாகாணங்களின் சுகாதாரத் துறைக்கே முன்மாதிரியான பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகின்றோம். இலவச நோயாளர் காவு வண்டிச்சேவை, முள்ளந்தண்டு வடம்பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நிலையம், கணினிமயப்படுத்தப்பட்ட தரவு வங்கி, மாகாண சுகாதார சேவைக்கான ஐந்தாண்டுத் திட்டம் இப்படி பல புதிய விடயங்கள் நாட்டின் வேறு எந்த மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தப்படாத திட்டங்கள் நாம் ஆரம்பித்துள்ளோம். வெறும் சட்டத்தில் மட்டுமுள்ள அதிகாரத்தை நடைமுறைப்படுத்துமுகமாக பல நியதிச் சட்டங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. மக்களின் தேவைக்கும், மாகாண சபையின் இயலுமைக்கும் பெரும் இடைவெளியுள்ளது. இதற்குக் காரணம் அமைச்சர் அல்ல. சட்டத்திலுள்ள பிரச்சினை. அரசியல் முதிர்ச்சியுள்ள யாவருக்கும் இது புரியும். நல்ல காரியங்களை பாராட்டாதவர்கள் மற்றவர்கள் மீது குறைகளை சொல்லும் தங்கள் பழக்கத்தை மாற்ற முயல வேண்டும் - என்றுள்ளது.

(ற-21)



வொய்ஸ் ஒப் இமேஜ் என்ற தனியார் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஒளிப்படக் கண்காட்சி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் வரை நல்லூரில் நடைபெற்றது. அதில் குறித்த நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களின் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. தொழில்நுட்ப கருவியினூடாக சமூகப் பார்வையை இளைஞர் மத்தியில் ஏற்படுத்துவதற்காக இந்தப் பயிற்சி நெறி வழங்கப்பட்டது என வொய்ஸ் ஒப் இமேஜ் நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ற-ரி4)




சுமார் 20 வருடத்துக்கு மேலாகக் கிண்ணியாவில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிப்பி அகழ்வு மற்றும் அரைக்கும் தொழிலுக்கு கிண்ணியா பிரதேச செயலகத்தால் கடந்த ஒருமாத காலமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. 300க்கு மேற்பட்ட தொழில் செய்யும் குடும்பங்கள் அதனால் பாதிக்கப்பட்டுள்ளன. அதற்கான அனுமதியைக் வழங்குமாறு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் கிண்ணியா பிரதேச செயலகம் முன்பாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ற-40)

# பூநகரி, பளையில் மர முந்திரிகைச் செய்கை

## 250 ஏக்கரில் மேற்கொள்ள நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.31

பூநகரி, பளைப் பகுதிகளில் 250 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்படவுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

இதுகுறித்து தெரிவிக்கப்பட் டதாவது-

வருமானம் தரக் கூடிய பயிர்ச் செய்கைகளில் ஒன்றாகக் காணப்படும் மர முந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பூநகரி, பளைப் பகுதிகளில் மர முந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மானிய முறையில் மர முந்திரிகைக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை குறிப்பிட்ட பகுதிகளில் இராணுவத்தினர் மர முந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (ற-4)

கோவிந்த நாம சங்கீர்த்தனம் - கோவிந்தா ! கோவிந்தா



கைதடி நுணாவில் சந்தி வழிப்பாதையில்
மட்டுவில் தெற்கு சாவகச்சேரி
அருள்மிகு உத்தம கண்ணன் திருக்கோயில்
பஞ்ச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம்

கிரியை ஆரம்பம் :- இன்று (31.08.2016) புதன்கிழமை
எண்ணெய்க்காப்பு :- 03.09.2016 சனிக்கிழமை
கும்பாபிஷேகம் :- 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை
(7.04 மணிமுதல் 8.58 மணிவரை)

கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை



மட்டுவில் தெற்கு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத மஹா விஷ்ணு தேவஸ்தான பஞ்ச குண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக பெருவிழா நிகழ்வில் அயல் கிராம இஷ்ட தெய்வ பகவான் அடியார்களே, வருடாந்த உற்சவ உபயகாரர்களே, தென்மராட்சி மற்றும் ஈழத் திருநாட்டின் தெய்வீக பக்தர்களே! எண்ணெய்க் காப்பிட்டு, திருப்பாசுரம் பாடி, நாம சங்கீர்த்தனம் ஓதி, பொதுக்கிரியைகளில் கலந்தும் பக்தி சிரத்தையுடன் மங்கலகரமான விழா அமைய தங்கள் அனைவரையும் ஆசாரசீலராக அருள் பொழிந்திட கண்ணபிரான் அழைக்கின்றார்.

மனித நேயத்துடன் அன்பும், அறிவும், தெய்வீக உணர்வும் பெருகி மண்ணில் நல்ல வண்ணம் கண்ணன் அருளால் நீடூழி வாழ்ந்திட வைகுண்ட வாஸன் திருப்பாதம் பணிந்து அருள் வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

குறிப்பு:- பேராசான்களின் பேருரையும் இடம்பெறும்.

கும்பாபிஷேக தின வழிபாட்டின் நிறைவில் விஷ்ணுவின் திருப்பாதம் பதிக்கப்பெற்ற சடகோபத்தினை (சடாரி) அடியார்கள் அனைவரதும் சிரசில் ஸ்தாபித்து ஆசி வழங்கப்படும்.

பிரதிஷ்டா பிரதமகுரு- வேதாகம கிரியா கலாஜோதி
பிரம்மஸ்ரீ தியாக - கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் - ஆசிரியர் (MA)
கல்வயல் - சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு வடக்கில் ஆர்ப்பாட்டங்கள்


கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக


முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்னால்



மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாக





வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக


யாழ்.மாவட்டச் செயலகம் முன்னால்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இராணுவத்தால் முட்டுக்கட்டை

## இது நல்லிணக்கம் அல்ல என்கிறார் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக.31

முல்லைத்தீவில் மீள்குடியமர்வு இடம்பெற்று ஏழு ஆண்டுகள் கடந்துள்ளபோதும் எமது மக்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இராணுவம் தொடர்ந்து முட்டுக்கட்டையாக இருப்பது நல்லிணக்கம் அல்ல.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

வட்டுவாகலில் பொது மக்களுடைய காணிகளைக் கடற்படைக்கு வழங்க அளவீடு செய்யும் செயற்பாடு நல்லாட்சிக்கு விரோதமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதியில் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி மீண்டும் கடற்படையினரின் தேவைக்காக 617 ஏக்கர் பொது மக்களின் காணியைச் சுவீகரிப்பதற்காக காணி அளவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களது உரிமைகளை வலிந்து பறிக்கும் செயற்பாடாகும். வட்டுவாகல் பகுதியில் கடற்படையினரின் தேவைகளுக்காக கடந்த 3 ஆம் திகதி காணி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்து தமது காணிகளை விடுவிக்கக் கோரினர். இருப்பினும் இன்று மீண்டும் காணி அளவீடு இடம்பெறவுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

படையினரின் தேவைகளுக்காக எமது மக்களின் காணிகளை தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுவதால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. மக் களின் காணிகளை மீளவும் அளவிட்டு சுவீகரிக்கும் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும். எமது மக்களின் காணிகளை மேலும் மேலும் இராணுவத்தினருக்கும் கடற்படையினருக்கும் வழங்க நாம் இடங்கொடுக்கமாட்டோம் - என்றார். (ற-101)

# காரைநகர் பிரதேச செயலகப் பிரிவு விவசாயிகளுக்கு உதவித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 31

காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பத்து வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கப்பட்டதாவது-

தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு 45 கொய்யாக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன. மாகாண அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒன்பது திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பத்து விவசாயிகளுக்கு விளைச்சலை அதிகரிக்கக் கூடிய நல்லின விதை நெல் வழங்கப்பட்டுள்ளது. 25பயனாளிகளுக்கு பேரின முறையிலான நெற்செய்கைக்காக விதை நெல் வழங்கப்படவுள்ளது. எள்ளுச் செய்கையை ஊக்குவிப்பதற்காக 50 பயனாளிகளுக்கு 3 கிலோ எள்ளு வழங்கப்பட்டுள்ளது. தேனீ வளர்ப்புத் திட்டத்தை உக்குவிக்கும் பொருட்டு 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அது தொடர்பான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. மாதுளைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு ஒரு பயனாளி தெரிவு செய்யப்பட்டு 110 கன்றுகளும், அதற்கான சொட்டு நீர்ப்பாசன சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. சோளம் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக பத்து விவசாய குடும்பங்களுக்கு 750கிராம் சோளம் வழங்கப்பட்டுள்ளது. கொடித் தோடையை ஊக்குவிப்பதற்காக இரு பயனாளிகளுக்கு 100 கொடித்தோடைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

காளான் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக இரண்டு பயனாளிகளுக்குத் தற்பொழுது காளான் பயிர் செய்கை கட்டமைப்புக் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. விவசாய வனவியல் ஸ்தாபிக்கும் திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு உள்ளூரில் பயன்தரக் கூடிய மரக்கன்றுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் வாரம் வழங்கி வைக்கப்படவுள்ளன- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி7)

# உப அலுவலக பொது நூலகம் புதிய இடத்தில்

வலி.மேற்கு சுழிபுரம் உப அலுவலக பொது நூலகம் நாளை முதலாம் திகதி முதல் வலி.மேற்கு பிரதேச சபையின் பழைய தலைமை அலுவலக கட்டடத் தொகுதிக்கு மாற்றப்படவுள்ளது.

பழைய நூலக கட்டடத் தொகுதி சீரமைப்புக்கு உட்படுத்தப்படவுள்ளது. பழைய ஆயுள்வேத கட்டடத் தொகுதிக்குப் பதிலாக புதிய கட்டடம் அமைப்பதற்கான முன்வரைவுப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற-50)




# அந்திக்குழி வாய்க்கால் சீரமைப்பு ஒரு சிலரால் தடைப்படும் நிலை

## ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை

கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதியுதவித் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவிருந்த வலி. தென்மேற்கு அந்திக்குழி வாய்க்கால் சீரமைப்பு ஒரு சிலரின் நடவடிக்கையால் கைவிடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது-

கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதியுதவித் திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஜே/131 இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் சாவற்கட்டு கிராமத்தில் சுமார் 50வருடங்களுக்கு முன் வெட்டப்பட்ட அந்திக்குழி வாய்க்காலைச் சீரமைக்க சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்தார். வருடாவருடம் ஏற்படும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களின் நலன் கருதி 1956 ஆம் ஆண்டு யாழ். அரச அதிபராக இருந்த சிறிகாந்தாவால் சாவற்கட்டு கிராமத்தில் அந்திக் குழி வாய்க்கால் வெட்டப்பட்டது. சுமார் 2 கி.மீ நீளமான இந்த வாய்க்கால் ஆனைக்கோட்டை உயரப் புலம் ஊடாக காக்கை தீவுக் கடலைச் சென்றடைகிறது. வாய்க்கால் நீண்ட காலமாக பராமரிப்பின்றிக் கைவிடப்பட்ட நிலையிலிருப்பதால் வெள்ளம் ஓட முடியாமல் அந்தப் பகுதியில் தேங்கி நிற்கின்றது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து, கிராம உத்தியோகத்தரின் பரிந்துரைக்கமைய கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா நிதியுதவித் திட்டத்தின் கீழ் மேற்படி வாய்க்காலைச் சீரமைக்க பிரதேச செயலர் நிதி ஒதுக்கினார். ஆனால் வேலைகள் ஆரம்பிக்கும் நிலையில் அந்தப் பகுதியில் வசிக்கும் ஒரு சிலரின் வசதி கருதி இந்த வேலைத்திட்டம் கைவிடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது - என்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள அந்திக் குழிவாய்க்கால் ஒரு சில தனியார் காணிகளுக்கூடாகச் செல்கின்றது. இந்த வாய்க்காலைத் திருத்துவதற்கு ஆரம்பத்தில் அந்தப் பகுதி மக்கள் எல்லோரும் சம்மதித்து கையொப்பமிட்டனர். அதன் பின்னரே சீரமைப்புப் பணியை மேற்கொள்வதற்குக் கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தில் இந்த வாய்க்கால் உள்வாங்கப்பட்டது. தற்போது ஒருவரால் வாய்க்கால் புனரமைப்பு வேலைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் மீண்டும் குறித்த நபரிடம் பேசி சீரமைப்பு வேலைகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.- என்றார். (ற-ரி, 115)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திகள் நிறுத்தப்படாது

## சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 31

புதிய அரசு பதவியேற்றபோதும் கடந்த அரசு ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா.

நிட்டம்புவவில் அத்தனகல்லை பிரதேச சபைக்கான கட்டடத்தை நேற்றுமுன்தினம் சந்திரிகா பண்டாரநாயக்க திறந்தார்.



அங்கு அவர் தெரிவித்ததாவது– அரசியலையும், அரசையும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அது தெரியாதவர்களே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். புதிய அரசு கையேற்றதன் பின்னர் முன்னைய அரசு ஆரம்பித்து முடிக்காத பணிகளை நிறைவு செய்வது அந்த அரசின் பொறுப்பு. அதுதான் நாட்டுக்கு நன்மை பயக்கும்.

கடந்த காலத்தில் எனது அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைகள் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் நிறைவு செய்யப்பட்டு அவர்களது பெயரை வைத்தனர். நான் நட்ட நடுகல்லைக் கூட அவர்கள் பிடுங்கி எறிந்தனர். அதற்காக நாம் கூக்குரல் இடவில்லை.

கடந்த அரசால் செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை உரிய முறையில் மக்களுக்குப் பயனுள் ளதாக மாற்றுவதுதான் எந்த அரசு வந்தாலும் மேற்கொள்ள வேண்டிய பணி. அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து, அரசு முன்னெடுக்கும் சகல அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கும் வெளியிலிருந்து உரிமை கோருவது நகைப்புக்கிடமானது. அரசு எது?, அரசியல் எது? என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுவே இதற்கான காரணம் – என்றார். (ற–4)

# பல மாதங்கள் திட்டமிட்டே மொஹமட் சகீப் கொலை!

கொழும்பு, ஓக.31

வர்த்தகர் மொஹமட் சகீப் சுலைமான் பல மாதங்களாகத் திட்டமிடப்பட்டே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தரப்புக்களைச் சுட்டிக்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுலைமானைக் கொலை செய்தவர்கள் ஆதாரங்களைக் கச்சிதமாக அழித்துள்ளனர். அவர்களைக் கண்டு பிடிப்பதற்கான எந்தத் தடயமும் இதுவரை கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

கொழும்பு 4 தொடக்கம் 6 வரையும், கேகாலை தொடக்கம் மாவனெல்ல மற்றும் ஹெம்மாத்கம வரையான பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள 200க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராப் பதிவுகள் தற்போது பொலிஸாரால் ஆராயப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இதுவரை சுமார் 75 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

பிரபல வர்த்தகர் சுலைமான் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். சம்பவம் நடந்து 10 நாள்கள் கடந்துள்ளபோதும் இதுவரை கொலையாளிகள் குறித்த எந்தத் தடயமும் சிக்கவில்லை.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளில் 20 பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை நடத்துகின்றன என்று கூறப்படுகின்றது. (ற–4)

# 17 வயது மாணவன் கைது

## ஜனாதிபதியின் இணையத்தளத்தை ஊடுருவினார் என்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஓக.31

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை ஊடுருவிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் ஒருவருக்கு 17 வயது என்று தெரிவிக்கப்பட்டது.

17 வயதுடைய மாணவர் பேராதனை, கடுகன்னாவ பகுதியில் கைது செய்யப்பட்டார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை ஊடுருவியவர்கள் தம்மை மாணவர் அமைப்பு என்று அடையாளப்படுத்தினர். ஊடுருவலால் இணையத்தளம் சிறிது நேரம் செயலிழந்தது.

இது குறித்து தீவிர விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும், கணினி அவசர தயார் நிலைக் குழுவும் மேற்கொண்டன.

உள்நாட்டில் இருந்தே இணையத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்திருந்த நிலையில் குறித்த மாணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றையவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவர் மொரட்டுவவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–4)

# நான்கு பேக்கரி உரிமையாளர்கள் மீது வழக்கு

தென்மராட்சி, ஓக 31

சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்ட நான்கு பேக்கரி உரிமையாளர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் தேசிய சுகாதாரப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பகுதிகளில் உள்ள பேக்கரிகள், குளிர்பான நிலையங்கள் மீது கடந்த வாரம் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

பொது மக்களுக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த குளிர்களி வகைகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவற்றைப் பரிசோதிக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

அதன்போதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற–9)

# ஐ.தே.க. அரசில் இருந்து பிரியவேண்டும் சு.கட்சி

## வலியுறுத்துகின்றார் மகிந்த

கொழும்பு, ஓக.31

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான இணைப்பு பொருத்தமற்றது. ஐ.தே.க. அரசில் இருந்து சு.க. வெளியேற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறைத் தொகுதி அதிகார சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன இதற்கான ஏற்பாட்டைச் செய்தார்.

அதில் தலைமை விருந்தினராக பங்கேற்று உரையாற்றிய மகிந்தராஜபக்ச தெரிவித்ததாவது: ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை எமது கொள்கைக்கு முரணானது. அடிபணிந்து இருக்கமுடியாது. இதன் காரணமாகவே மாநாட்டில் பங்கேற்காமல் இருப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிலிருந்து வெளியேறி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எடுத்து வாருங்கள். தூய கட்சி எம்மிடமே இருக்கின்றது. அதன் பின்னர் மாநாடு பற்றிப் பரிசீலிக்கலாம்.

எமது அரசு முன்னெடுத்த திட்டங்களை விமர்சித்த ஐக்கிய தேசியக் கட்சி இன்று அதைக் காட்டியே முதலீடுகளைப் பெறுகின்றது – என்றார். (ற–4)

# சு.கட்சியின் மாநாட்டுக்கு பிரதமரை அழையுங்கள்

## உதய கம்மன்பில கிண்டல்

கொழும்பு, ஓக. 31

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டுக்கு முக்கிய விருந்தாளியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாட்டிற்கு முக்கிய விருந்தாளியாகப் பிரதமர் அழைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தது கூட்டு எதிர்க் கட்சி.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த தூய ஹெல உறுமயவின் தலைவரும் மகிந்த குழு நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்ததாவது– எப்படியிருந்தாலும், சு.கவின் மாநாட்டுக்கு வரவிருப்பவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தான். அதனால் பிரதமர் சொல்வதுதான் மிகவும் பொருத்தமானது – என்றார். (ற–4)

# மகிந்த தவறு செய்திருந்தால் ஆதாரத்தோடு கைது செய்க

## வாய் திறக்க மாட்டோம் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஓக.31

மகிந்தர ராஜபக்ச தவறு செய்திருந்தால் உரிய ஆதாரங்களுடன் நீதிமன்றில் சமர்ப்பித்து கைது செய்யுங்கள். அதற்கு எதிராக நாம் ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டோம்.

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சீன உதவியுடன் மகிந்த ராஜபக்ச ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக, புதிய வரைபடங்களுடன் சீனா சென்று, சீனாவால் அமைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் சீனாவுக்கே எடுத்துக் காட்டி உதவி செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நிலமை விசித்திரமானது. எந்தவொரு தவறு செய்தவரும் ஜனாதிபதியுடன் சேர்ந்தால் அவர் தூய்மைப்படுத்தப்படுகின்றார். இது சரியாக [illegible] சலவை செய்யும் நி[illegible] போன்றது – என்றார். (ற–4)

# வேட்டையாடும் தேசிய அரசின் வியூகத்துக்கு அஞ்சமாட்டோம்

## மொஹமட் முஸம்மில் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 31

பொது எதிரணியை வேட்டையாடும் தேசிய அரசின் வியூகத்துக்கு அஞ்சப்போவதில்லை.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரான மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக முஸம்மில் இருந்த காலத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் மோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்றுமுன்தினம் முற்பகல் இலஞ்ச, ஊழல் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு அவர் அழைக்கப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் நல்லாட்சிஎனக்கூறிக்கொள்ளும் அரசு திண்டாடுகின்றது. 10 இலட்சம் வேலைவாய்ப்புகள் என்ற இலக்கும் கனவாகியுள்ளது.

இவற்றைச் சுட்டிக்காட்டும் பொது எதிரணியின் குரலை நசுக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் அரசு முயற்சிக்கிறது. அதற்காக பொலிஸார் ஏவிவிடப்படுகின்றனர்.

எது எப்படியிருந்தபோதிலும், அரசின் வேட்டையைக் கண்டு அஞ்சப்போவதில்லை – என்றார்.

அதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஆள்சேர்ப்பின் போது இடம்பெற்றது என்று கூறப்படும் முறைகேடு தொடர்பில் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று சுமார் ஒன்றரை மணிநேரம் தீவிர விசாரணை நடத்தியது. (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

## வலியுறுத்துகின்றது கூட்டு எதிர்க்கட்சி

கொழும்பு, ஒக. 31
நாட்டின் முதல் பிரஜை மீது முன்வைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டு நாட்டின் புகழுக்கு இழுக்காக அமைவதால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தானாகவே பதவியிலிருந்து விலக வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி வலியுறுத்தியது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பங்காளிக் கட்சியான பிவித்துரு ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு பாகொடவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்ததாவது- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகாவலித் திட்ட அமைச்சராக இருந்தபோது லஞ்சம் பெறமுற்பட்டதாக ஆஸ்திரேலிய ஊடகமொன்றில் கடந்த வாரம் செய்தி வெளியாகியிருந்தது.

ஆஸ்திரேலிய ஊடகம் வெளியிட்ட செய்தி தற்போது நாட்டில் அதிகம் பேசப்பட வேண்டிய விடயமாகும். துரதிர்ஷ்டவசமாக அதைப்பற்றி அதிகம் கவனம் செலுத்த வேண்டிய அரச தரப்பாலேயே இந்த விடயம் மூடி மறைக்கப்பட்டுள்ளது. அதன் உண்மைத்தன்மை மக்களிடத்தில் சென்றடையவில்லை. கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ச அரசின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இன்று ஒருவரையும் குற்றவாளி என்று அடையாளப்படுத்த முடியாமல் போயுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விதி விளையாட ஆரம்பித்துள்ளது. அவர் மகிந்த அரசில் அமைச்சராக இருந்தபோது ஊழல் செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ளார் என்று கூறும் பத்திரிகையும்பேர்த்பகுதியிலிருந்தேவெளியாகின்றமை வேடிக்கையானது. 1.82 மில்லியன் டொலர் பெறுமதியிலான நிதி மோசடிச் செயற்பாடு என்பதை உலக வங்கியின் நிதி மோசடிச் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்யும் குழுவும் சுட்டிக்காட்டியுள்ளது. நான் இந்நாட்டு ஜனாதிபதியாகவிருந்து என்மீது இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தால் உடனடியாகப் பதவி விலகியிருப்பேன். காரணம் நாட்டின் முதல் பிரஜையாகவுள்ளவர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுமாயின் அது எமது நாட்டின் புகழுக்கு இழுக்காக அமையும். எவ்வாறாயினும் எமது நாட்டின் மீது பற்றுள்ள ஒரு தலைவராக அவர் இருந்திருப்பாராயின் உடனடியாக பதவி விலகியிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந்த பெரும் ஊழல் தொடர்பில் விசாரணை செய்ய நம்நாட்டில் உயிர்வாழும் முன்னாள் பிரதம நீதியரசர்கள் சகலரும் அங்கத்துவம் வகிக்கும் வகையில் ஜனாதிபதி ஆணைக்குழுவை உருவாக்கி விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். - என்றார். (ற-4)



# சு.கவின் மாநாட்டில் கூட்டு எதிர்க்கட்சி கலந்து கொள்ளாது!

கொழும்பு, ஒக. 31
**சிறிலங்கா சுதந்திர கட்சியின் மாநாட்டில் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஐந்து நாள் பயணமாக மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழு இன்று மலேசியா செல்லவுள்ளது.

அந்தக் குழுவில் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ , றோஹான் ரத்வத்த உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சிலர் இணைந்து கொண்டுள்ளனர் என்று மகிந்த ராஜபக்சவின் செயலாளர் உதித் லொக்குபண்டார தெரிவித்தார்.

மாநாட்டுக்கான அழைப்பு அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ள நிலையில் எவ்விதமான தயக்கங்களும் இன்றி அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனச் சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். சம்மேளனத்தில் கலந்துக் கொள்ளாதவர்கள் குறித்து எதிர்காலத்தில் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# எக்னலிகொட கடத்தலுடன் புலனாய்வினருக்கு தொடர்பு

## ஆதாரங்கள் உள்ளன என்கிறார் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்

கொழும்பு, ஒக. 31
**ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட இராணுவ புலனாய்வு அதிகாரிகளால் கடத்தப்பட்டதை நிரூபிப்பதற்கான ஆதாரம் தம்மிடம் உள்ளது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.**

தம்மிடம் இருந்த ஆதாரங்களுக்கான முழுமையான பொறுப்பையும் தாமே ஏற்பார் என்றும் அவர் நீதிமன்றத்தில் கூறினார்.

எக்னலிகொட காணாமல் போனமை தொடர்பான வழக்கில் தற்போது தடுப்புக் காவலில் உள்ள இரண்டு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் தாக்கல் செய்த மனுக்கள், உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் ஸ்ரீபவன், சிசிர ஆப்ரூ மற்றும் உபாலி அபயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்தத் தகவலை வெளியிட்டார்.

டபிள்யூ.ஜி.என். உபசேன மற்றும் லான்ஸ் கோப்ரல் ரூபசேன ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

எக்னலிகொட விவகாரத்தில் தமக்கு எந்தவித தொடர்புகளும் இல்லை எனவும் எந்தவொரு காரணமும் இன்றி சுமார் ஒரு வருடமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோம் என்றும் தமது மனுவில் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அவர்கள் இருவரும் தமது மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# அரச சேவை ஆள்சேர்ப்பில் மும்மொழிக்கு அதிக புள்ளி

கொழும்பு, ஒக. 31
அரச சேவையில் ஆள்களைச் சேர்த்துக் கொள்ளும் நேர்முகப்பரீட்சையின்போது மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு அதிக புள்ளிகளை வழங்கி, மூன்று மொழிகளும் தெரிந்த அரச அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது.

தேசிய நல்லிணக்கக் கலந்துரையாடல் மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் இது தொடர்பானஅமைச்சரவைப் பத்திர மொன்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார்.

நாடு முழுவதுமுள்ள 72 பிரதேச சபைகளிலும் இந்த மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அமைச்சரவையில் அமைச்சர் ஆலோசனையொன்றையும் முன்வைத்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கு இணக்கம் தெரிவித்ததுடன், இந்தக் கொள்கையை ஒட்டு மொத்த அரச வேலைக்கு ஆள்களைச் சேர்க்கும் போது நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார் என்று கூறப்பட்டுள்ளது. (த-4)

## இருபத்திநான்காம் திருவிழா (தேர்)

### தேரேறி வருகின்ற நல்லைநகர் நாயகனே!

தேர்ஏறி வரும் நல்லைநகர் நாயகனே
பார் போற்ற எம்மை வாழவைப்பாய்
நேர் நின்று போராடும் மக்களைக் காத்திடுவாய்
ஏர் கொண்டு பணியாற்றும் உழவர்களுக்கு
அருள்புரிவாய்
பேர் பெற்று திகழவே தமிழர்களுக்கு கருணை
செய்வாய்
வேர் அற்று உறவுகளைத் தேடும் உத்தமர்க்கு கடைக்கண்
காட்டுவாய்
நாள் அற்றது போல் நலிவுறும் நங்கையர்க்கு
நல்லருள் செய்வாய்
ஊர் சுற்றி உழலும் இளைஞர்க்கு
நல்வழி அருள்வாய்
நீர் அற்று நிலவும் நிலங்களை வளம்
பெறச் செய்வாய்
கூர் அற்ற அறிவு நிமிர்ந்திட
அருள்வாய்
ஏர்கொண்டு எம்மனம் உழுதே
எமக்கு நல்லருள் தருவாய்
நல்லை நகர் நாயகனே எல்லை இல்லா
இன்பம் அருளி எம்மை அணைத்திடுவாயே

நீர்வைத் தேவன்

### தேரில் ஏறி வருகிறான் நல்லைக்குமரன்

இராகம் காபி
தாளம் ஆதி

பல்லவி
தேரில் ஏறி வருகிறான் நல்லைக்குமரன்
தெருவீதி எங்கும் உருண்டோடி வருகிறான் (தேரேறி)

அனுபல்லவி
தீராத வினைகளைத் தீர்த்திடுவான் கந்தன்
திகட்டாத வாழ்வெமக்கு அளித்திடுவான் குமரன்
(தேரேறி)

சரணம்
பன்னிரு விழிகளால் பக்தர் குறைதீர்ப்பான்
தமிழ் மக்களை என்றும் பரிவுடன் காத்திடுவான்
போர்க்காலச் சூழலிலும் மக்களை மீட்டிட்டாய்
அமரர் சிறை மீட்டது போல் தமிழர் சிறையை மீட்பாயா
(தேரேறி)

திருமதி க.சண்முகப்பிரியா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
திருமணம் மற்றும் சகல வைபவங்களுக்கும் மிகப்பொருத்தமான மண்டபம்
Nk Function Hall
பலாலி வீதி, ஊரெழு.
T.P. 021 224 2422 / 077 036 6300
Email - nkfunctionhall@gmail.com
Web - www.nkfunctionhall.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கத்தை கனதியாக்க அணுகுமுறை எதுவும் உண்டா...?

● வடக்கு-- கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோதமாகவும், அதிகாரபூர்வம் அற்ற நிலையிலும் பெரும்பான்மை இனத்தவர்கள் வேண்டுமென்றே குடியேற்றப்படுகின்றனர்.

● கோபம் ஊட்டும் வகையில் வேண்டும் என்றே வடக்கிலும்-- கிழக்கிலும் பல இடங்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்படுகின்றன.

● தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்புக்களுக்கான தகுதிகளைப் பெற்றிருந்த போதிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.

மேற்போந்தவற்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ஆதாரங்களுடன் எடுத்தியம்பி உள்ளனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட்ட குழுவினர்.

வழமைபோன்று, அவை குறித்து துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் சமாளித்துள்ளார்.

வடக்கு -- கிழக்கில் இனரீதியான பதற்றத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலெழுந்த வாரியாக, உப்புசப்பு இல்லாத வகையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், முந்தைய மகிந்த அரசு போன்றே நல்லாட்சி அரசும் அண்ணன், தம்பி என்ற நிலையிலேயே செயற்படுவது வெளிச்சமாகத் தெரிகின்றது.

இப்போதைய அரசு பதவிக்கு வந்த பின்னர், வடக்கு -- கிழக்கு வாழ் தமிழ் மக்கள், கடந்து ஓர் ஆண்டில் பெறுமதியான, காத்திரமான ஆக்கபூர்வமான, நலன்களைப் பெற்றுள்ளார்கள் என்று குறிப்பிட்டுத் தொட்டுக்காட்டுவதற்கு, எந்த வகை சார்ந்த மினுக்கமும் பெரிதாகத் தெரியவில்லை.

உள்ளூர்ந்து நோக்கின், இன்னும் இரண்டு ஆண்டுகள் கழிந்தாலும், இப்போதைய நிலைமைகளே தொடரும் என்று மதிப்பிட்டுக் கணக்கிடத் தோன்றுகிறது.

உதாரணத்துக்கு, இந்த அரசின் அமைச்சரவைப் பேச்சாளர், பான் கீ - மூன் இலங்கையில் இந்த முப்பத்தேராம் திகதி காலடி எடுத்து வைப்பதற்கு முன்னதாக--

கடந்த காலங்களை விட, இங்கு ஜனநாயகம் மிகப் பலமுற்று விட்டதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் மெத்தப் புளுகி உள்ளார்.

உண்மையான நல்லிணக்கத்தை கனதியாக உண்டாக்குவதற்கான அணுமுறை எதனையும் வெளிப்படுத்தாமல், வெறும் போசைக்கையே இந்த நாட்டில் மேலுயர்ந்து நிற்கிறது.

அதனைப் பான் கீ - மூன் அவர்களால் கிரகித்துக் கொள்வதற்கு இயலாது என்று, எங்கள் தென்னிலங்கை அரச தலைவர்கள் நினைக்கிறார்களோ என்னவோ...!?

# நல்லாட்சி அரசின் முன்னால் எழுந்து நிற்கும் சவால்கள்

சேரலாதன்

நல்லாட்சி அரசு தனது ஓராண்டு நிறைவை மாத்தறையில் வெகு விமர்சையாகக் கொண்டாடியிருக்கின்றது. இதில் ஜனாதிபதியும், பிரதமரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இலங்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்ததொரு கூட்டணி அரசே நல்லாட்சி அரசு என்றபெயரில் ஆட்சியில் அமர்ந்துள்ளது. ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த தலைமையிலான, கூட்டு எதிரணியால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றது. மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதே மகிந்த தரப்பினரின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இதற்காக எதனைச் செய்யவும் அவர்கள் தயாராக உள்ளனர்.

இதேவேளை-மாத்தறைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, மகிந்த அணியினருக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் உரையாற்றியுள்ளார்.

மகிந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சியொன்றை ஆரம்பித்தால் மகிந்த தரப்பின் சாயம் வெளுக்கும் வகையில் அவர்கள் தொடர்பான பல இரகசியங்களை வெளியிடுவேன் என அவர் தெரிவித்திருக்கிறார். இனியும் பொறுக்க முடியாது என்ற நிலைக்கு ஜனாதிபதி வந்துள்ளதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இதுவரை காலமும் மகிந்த அணியினரின் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆமை வேகத்திலேயே இடம் பெற்று வந்திருந்தன. முக்கியமான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்படுவதும், பிணையில் வெளியே விடுவிக்கப்படுவதுமாகவே உள்ளனர். இது நல்லாட்சி மீது கடுமையான வெறுப்பை மக்களிடத்தில் ஏற்படுத்திவிட்டது. தற்போது இதனைப் போக்கும் வகையில் ஊழல் வாதிகளுக்கும், மோசடிக்காரர்களுக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக ஜனாதிபதி தெரிவித்துவிட்டார்.

நல்லாட்சி அரசினால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த விடயத்தில் அரசு உளச்சுத்தியுடன் செயற்பட விரும்பினாலும், இனவாதிகள் அதற்கு அனுமதிப்பதாகத் தெரியவில்லை. இனவாதம் இந்த நாட்டில் நீறு பூத்த நெருப்பாக இருக்கும் வரையில் இனங்களுக்கிடையில் அமைதியை எதிர்பார்க்க முடியாது. இனவாதிகளின் பிழைப்பு இனவாதத்தில்தான் அடங்கியிருப்பதால் அதிலிருந்து அவர்களால் மீளவேமுடியாது. அவர்கள் மீளாதவரை நாடும் உருப்பட மாட்டாது.

மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் நாட்டில் பெரும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதை மறுக்க முடியாது. மகிந்த ஆட்சியின்போது நிலவிய அச்சமான

> இலங்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்ததொரு கூட்டணி அரசே நல்லாட்சி அரசு என்ற பெயரில்ஆட்சியில் அமர்ந்துள்ளது. ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த தலைமையிலான, கூட்டு எதிரணியால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றது. மீண்டும் ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றுவே மகிந்த தரப்பினரின் பிரதான நோக்கமாகக்காணப் படுகின்றது.

சூழ்நிலை தற்போது இல்லையென்றே கூறவேண்டும். அப்போதெல்லாம் ஆள்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுவதும், காணாமற்போதலும் சாதாரண விடயங்களாகவே மாறியிருந்தன. அரசுக்கு எதிரான விமர்சனங்களைத் தெரிவித்தவர்களின் கதி அதோ கதியாகத்தான் மாறியிருந்தது. பொலிஸாரும், படையினரும் மகிந்தவின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததால் அரசின் ஏவல் வேலைகளை இம்மியும் பிசகாது ஆற்றி வந்தனர். ஆனால் இவ்வாறானதொரு மோசமான நிலையை இன்று காணமுடியவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் நீதி கேட்டுப் போராடுகின்ற அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரளவு மன நிம்மதியுடன் வாழ்வதையும் காண முடிகின்றது.

ஆனால், நல்லாட்சி அரசு சாதிக்க வேண்டிய விடயங்கள் ஏராளமாக உள்ளன. போரினால் பெரும் இடர்களைச் சந்தித்த தமிழ் மக்களின் துயர்கள் தொடர்வதையே காணமுடிகின்றது. இறந்தவர்கள், காணாமற் போனவர்கள், விசாரணையின்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் எனப் பலரதும் உறவினர்கள் நீதி கேட்டு அலைந்து கொண்டிருக்கின்றனர். கண்களில் நீர்வழிய இவர்கள் அலைந்து திரிவதைப் பார்ப்பதற்கு கல்மனம் கொண்டவர் களாலும் முடியாது. இந்த விடயத்தில் நல்லாட்சி அரசு நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும். போர் காரணமாக இடம்பெயர்ந்த பலர் இன்னமும் அகதிவாழ்வே வாழ் கின்றனர். இவர்களது வாழ் விடங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பாக ஜனாதிபதி வடபகுதிக்கு வந்தபோது இடம்பெயர்ந்தவர்களிடம் உறுதிமொழியை வழங்கியிருக்கிறார். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும். பௌத்தர்களே வசிக்காத தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் புத்த விகாரைகளை அமைக்கின்ற செயற்பாடுகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற வகையில் அத்துமீறிச் செயற்படுகின்ற தென்பகுதி மீனவர்களின் நடவடிக்கை கள் முற்றாகவே தடுக்கப்பட வேண்டும். தமிழர் பகுதியில் இடம் பெறுகின்ற அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும். தமிழர் பகுதியில் போரைக் காரணம் காட்டி மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளை உடனடியாக மீண்டும் திறந்து வைக்கப்படல் வேண்டும். இதன் மூலமாகப் பலர் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். சமீப காலமாக முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் பூதாகரமாக எழுந்து நிற்கின்றது. இதில் சாக்குப்போக்குகள் கூறாமல் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதுடன் எவராவது பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாகவே அதற்குரிய நிவாரணத்தையும் வழங்க வேண்டும்.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சிக்குள் எழுந்த தமக்கு எதிரான செயற்பாடுகளுக்கு மத்தியிலும் சிறப்பாகச் செயற்பட்டுத் தற்போதைய நிலமைக்கு உயர்ந்துள்ளார். ஜனாதிபதியும் தமது கட்சிக்குள் எழுந்துள்ள சவால்களைச் சமாளித்துப் புதிய அத்தியாயமொன்றைப் படைப்பாரென நம்பலாம்.

ஆகவே, நல்லாட்சி அரசு சிறுபான்மை மக்களை ஒதுக்கி வைக்காது, அவர்களையும் அரவணைத்துச் செல்லவேண்டும். வெறுமனே இனவாதிகளின் கடச்சல்களுக்கு அஞ்சாது துணிவுடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் இதுவொரு நல்லாட்சியெனக்கூறும்போதே உண்மையான நல்லாட்சி மலர்ந்திருப்பதாகக் கூறமுடியும். ஜனாதிபதியும், பிரதமரும் அரசின் இரண்டாவது ஆண்டு நிறைவு நாளை சகல இனத் தலைவர் களினதும் மகிழ்ச்சி ஆரவாரத் துடன் கொண்டாடும் நாளை எதிர் பார்த்து நிற்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்மேளனக் கூட்டத்துக்குப் போவதா? விடுவதா? முடிவெடுக்கத் திணறும் மகிந்த ராஜபக்ச

சிங்கள மூலம் மவ்பிம
உபுல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில் வீ.எஸ்.ரி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது சம்மேளன மாநாட்டில் மகிந்த ராஜபக்ச கலந்து கொள்வாரா என்பது குறித்து பல்வேறுபட்ட ஊகங்கள் வெளியிடப்படுகின்றன. குறித்த அந்த நாள்களில் அவர் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ள உள்ளதாகவும், கதை அடிபடுகிறது.

கட்சியின் தலைவரென்ற ரீதியில் மைத்திரிபால, முன்னாள் தலைவரான மகிந்தவுக்கு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளமை, கட்சியை ஒன்றிணைத்துப் பலப்படுத்துவதற்காக இருக்கக் கூடும்.

மகிந்த ஜனாதிபதியாகி கட்சியின் தலைவர் பதவியையும் ஏற்ற பின்னர் இடம்பெற்ற கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, முன்னாள் தலைவர் என்ற வகையில் சந்திரிகாவுக்கு அழைப்பு விடுத்ததில்லை. பலர் அது குறித்துச் சுட்டிக்காட்டியபோதிலும், மகிந்த தமது முடிவில் உறுதியாக இருந்தார். கட்சி மாநாட்டில் கட்சி ஆதரவாளர்கள் தம்மைவிட சந்திரிகாவுக்கே பெரும் மதிப்பளிப்பர் என எண்ணி மகிந்த அஞ்சியமையே அதற்குக் காரணமாகும்.

இத்தனைக்கும் 2004 ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சிக்கு ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொடுத்து, மகிந்தவைப் பிரதமராக்கி வைத்ததுடன், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகவும் சந்திரிகா நியமித்ததாலேயே 2005 ஆம் ஆண்டில் மகிந்தவால் ஜனாதிபதியாக முடிந்தது. மாறாக அந்தவிதம் ஜே.வி.பியினரின் ஆதரவுடன் சுதந்திரக் கட்சி அரசை சந்திரிகா உருவாக்காது, ரணிலை பிரதமர் என்ற ரீதியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்திருந்தால் ரணிலே தேர்தலில் வெற்றி பெற்றிருந்திருப்பார். ஆனால், மகிந்த தமது தலைமைத்துவத்துக்குச் சவால் ஏற்படுமெனக் கருதி, சந்திரிகாவுக்கு சுதந்திரக்கட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதன் காரணமாகவே சந்திரிகா, மகிந்த மீது கடும் வைராக்கியம் கொள்ள நேரிட்டது.

> ஜே.வி.பியினரின் ஆதரவுடன் சுதந்திரக்கட்சி அரசை சந்திரிகா உருவாக்காது ரணிலை பிரதமர் என்ற ரீதியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்திருந்தால் ரணிலே தேர்தலில் வெற்றி பெற்றிருந்திருப்பார். ஆனால் மகிந்த தமது தலைமைத்துவத்துக்குச் சவால் ஏற்படுமெனக் கருதி சந்திரிகாவுக்கு சுதந்திரக்கட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதன் காரணமாகவே சந்திரிகா, மகிந்த மீது கடும் வைராக்கியம் கொள்ள நேரிட்டது.

அந்த வகையில் சுதந்திரக் கட்சியை வளர்த்தெடுத்து, மகிந்தவை அரசியலில் முன்னிலை பெறவைத்த தமக்கு, சுதந்திரக்கட்சி உறுப்புரிமையைத் தடைசெய்த மகிந்த மீதான வெறுப்பாலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா மகிந்தவைத் தோற்கடிக்க முன்னின்று உழைத்தார்.

ஆனால், மைத்திரிபால, மகிந்த மீது அந்தவிதம் விரோதம் பாராட்டவில்லை. கட்சியின் தலைமைத்துவத்தை தாம் ஏற்ற பின்னர் இடம்பெற்ற சகல நிறைவேற்றுக்குழுக் கூட்டங்களுக்கும் மைத்திரிபால, மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கத் தவறவில்லை. எதிர்வரும் சம்மேளனக் கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இதன் மூலம் தாம் மகிந்தவுடன் இணைந்து செயற்படத்தயாரென மைத்திரிபால கோடி காட்டியுள்ளார். 2006 ஆம் ஆண்டின் சம்மேளனக் கூட்டத்துக்கு மகிந்த, சந்திரிகாவுக்கு அழைப்பு விடுத்திருந்திருப்பாரானால், சந்திரிகா மகிந்தவை பதவி கவிழ்க்க முயன்றிருக்கமாட்டார், ஆனால், மகிந்தவோ, சந்திரிகாவையும், பண்டார நாயக்க குடும்பத்தவர்களையும் சுதந்திரக் கட்சியிலிருந்து அப்புறப்படுத்த முயன்றார்.

அது மட்டுமன்றி தமது அரசியல் உயர்ச்சிக்கு அயராது உழைத்த மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி மற்றும் அனுர பண்டாரநாயக்க ஆகியோரை அவர்களது அமைச்சர் பதவிகளிலிருந்து வெளியேற்றினார்.

ஒரு கட்சி தேர்தலில் தோல்வியடையும் போது, கட்சிக்குள் மோதல்கள், குழப்பங்கள் ஏற்படுவது வழமையே. 2010 ஆம் ஆண்டின் தேர்தல் தோல்விக்குப் பின்னர் இடம்பெற்ற ஐ.தே.கட்சியின் சம்மேளனக் கூட்டத்தின்போது சஜித் பிரேமதாச தரப்பினரது தலைமைத்துவத்துக்கான போட்டியை ரணில் சமயோசிதமான விதத்தில் சமாளித்து வெற்றி கண்டபோதிலும், தோல்வியைத் தழுவிய சஜித் பிரேமதாச சம்மேளனக் கூட்டத்தைப் புறக்கணித்தாரில்லை. அதேபோன்று அதற்கு முன்னர் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான ரணில், கருஜயசூரிய ஆகியோருக்கு இடையிலான மோதலிலும், ரணில் வெற்றியடைய கரு ஜயசூரிய தோல்வியுற்றபோதிலும், கரு ஜயசூரிய சம்மேளனக் கூட்டத்தைப் புறக்கணித்தாரில்லை.

இன்றைய நிலையில் மகிந்தவும் அதேபோன்று சுதந்திரக் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் பங்கேற்க முயல வேண்டும். ஐ.தே.கட்சியில் இடம்பெற்ற மேற்குறிப்பிட்ட சம்பவங்களைக் கருத்தில் எடுத்து, மகிந்தவும் இன்னமும் சில நாள்களில் இடம்பெறவுள்ள சுதந்திரக் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடிவெடுப்பாரா? அது குறித்து தற்போது எதையும் எதிர்வு கூற இயலாது. எனக்கென்னமோ,தமக்குக் கிடைத்த சம்மேளனக் கூட்டத்துக்கான அழைப்பைக் கையில்வைத்துக் கொண்டு போகலாமா? விடலாமா? என மகிந்த மனம் குழம்பிச் சிந்திப்பதாகவே படுகிறது.

# வாள்வெட்டு யாழ்ப்பாணத்தோடையே நிக்கட்டும்

வாள்வெட்டு ஒரு கலாசாரமாக யாழ்ப்பாணத்தில் மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. பலரை வெட்டிக் காயப்படுத்திய சம்வங்கள் முன்னரும் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.

அதனால் குறிப்பிட்ட சில எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டதும் பத்திரிகைகளில் வந்த செய்திதான். சம்பவ இடத்தில் கொல்லப்பட்டவர்கள் போக சில வாரங்கள் வைத்தியசாலைகளிலிருந்து சிகிச்சை பெற்றுப் பின்னர் உயிரிழந்தவர்கள் குறித்தும் பத்திரிகைகளில் பார்த்திருந்தேன்.

இவை அதிகமாக யாழ்ப்பாணத்தில்தான் நடந்திருந்ததனை நான் பத்திரிககளில் பார்த்திருக்கிறேன். எங்கள் இடங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றதாகப் பத்திரிகைகளில்செய்திவந்திருக்கவில்லை. வாள்வெட்டு நடந்ததாகவோ அதனால் எவராவது கொல்லப் பட்டதாகவோ கேள்விப்பட்டதுகூட இல்லை.

ஆனால்சில நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் ஒருவர் வெட்டப்பட்டதாகச் செய்தி ஒன்றை உதயன் பத்திரிகையில் பார்த்தேன். அதிர்ச்சியடைந்தேன். முல்லைத்தீவிலா இப்படி நடக்கிறது? இந்தச் சீர்கெட்ட செயலை முல்லைத்தீவிலும் தொடரப்போகிறார்களா?

யாழ்ப்பாணத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தான் முதலில் வாள்வெட்டுப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டதாகச் செய்திகளில் பார்த்திருந்தேன். கடந்த வாரம் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற சம்பவத்துக்குக் கூட சொத்துப் பிரச்சினை தான் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

அதுவும் அவர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர். தனது சொத்துக்களை மேற்பார்வை செய்ய அவருக்கு உரிமை உள்ளது. அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் எதுவாக இருந்தாலும் பேசித் தீர்க்க வேண்டியதுதானே? எதற்காக வாள்வெட்டு அடிதடி என்று போவான். எதற்காக அடுத்தவன் சொத்துக்கு ஆசைப்படுவான் என்று கேள்வியும் நியாயமானது தான்.

ஆனால் எதுவாக இருந்தாலும் வாள்வெட்டு எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. அதனைத் தடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடக்கும்போதே என்ன கொடுமை என்றிருந்தோம். இப்போது எங்கள் இடங்களிலும் இப்படி நடப்பதை நினைக்கக் கவலையாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும்போது பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லைபோலும். சில வாரங்களுக்கு முன்னர் சங்குவேலியில் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வந்திருந்தன. அவரைக் கூட தவறுதலாக ஆள் மாறி வெட்டினவர்கள் எண்டு கூறியுள்ளார்கள். அதிலிருந்து பொலிஸாரின் நடவடிக்கையைக் காணமுடிகிறது.

அப்படியிருக்க எங்கள் இடத்தில் வாள்வெட்டு நடந்துள்ளது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் நடந்துபோலத்தான் எங்கள் இடத்திலும் நடக்கவிட்டுப் பொலிஸார் தம்பாட்டில் இருந்துவிடுவார்களோ என்று அச்சமாகவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் பெருமைக்குரிய மாவட்டம். எதனால் என்றும் எல்லாருக்கும் தெரியும். அப்படிப்பட்ட தலைவர்கள் இருந்த எமது இடத்தில் வாள்வெட்டுக்களை நடத்தவிடுவதே பாவம்.

அதனால் யாழ்ப்பாணத்தில் நடக்கும் வாள்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்தோடையே நிற்கட்டும். அதனைத் தாண்டி எமது இடத்துக்குக்கொண்டு வரவேண்டாம். வாள்வெட்டு வன்னிக்கு வரவேண்டாம். வருவதற்கு எவரும் இடமளிக்கவும் வேண்டாம். அதற்கேற்றதாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமை. திரும்பவும் சொல்கிறேன். வாள்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்தோடயே நிற்கட்டும்.

ஜே.வசி.
புதுக்குடியிருப்பு

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 300 கலைமான்கள் மின்னல் தாக்கிச் சாவு

## நோர்வேயில் வெள்ளியன்று சம்பவம்




ஒஸ்லோ, ஓக.31

நோர்வேயில் இடி மின்னல் தாக்கியதில் 300 கலைமான்கள் உயிரிழந்தமை உயிரியல் உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஐரோப்பாவின் ஹார்டேஞ்சர்வைடா மலைத் தொடர் பகுதியில், 8 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பகுதியில் வனப் பூங்கா அமைந்துள்ளது. குறித்த வனப் பூங்கா கிட்டத்தட்ட 11 ஆயிரம் கலைமான்களின் வசிப்பிடமாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட மின்னலில் ஒரே பகுதியில் 300 க்கும் அதிகமான கலை மான்கள் உயிரிழந்தன. முன்னர் இவ்வாறானதொரு தாக்கம் இடம்பெறவில்லை என உயிரியலாளர்கள் தெரிவித்தனர். முன்னதாக 2005 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் 68 பசுக்கள் மின்னல் தாக்கத்தினால் உயிரிழந்தமை அதிக எண்ணிக்கையாகக் கருதப்பட்டது. (த-ரி4)



# 9 மாதக் குழந்தையின் இதயத் துடிப்பை 15 மணிநேரம் நிறுத்தி அறுவைச் சிகிச்சை

## பிரிட்டனில் மருத்துவர்கள் சாதனை

லண்டன், ஓக.31

பிரிட்டனில் 9 மாதக் குழந்தையின் இதயத் துடிப்பை நிறுத்தி, மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாதன் பைரன் என்ற 9 மாதக் குழந்தையின் இதயத் துடிப்பு 15 மணி நேரங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு, அறுவைச் சிகிச்சை மேற் கொள் ளப்பட்டது.

நாதன் என்ற குழந்தைக்குப் பிறப்பில் இருந்து இதயத்தில் துளை காணப்பட்டுள்ளது. முதல் 6 மாத காலத்தில் சிகிச்சை ஏதும் இன்றி இருந்ததுடன், கடந்த 3 மாதங்களாக மருத் துவப் பராமரிப்பில் குழந்தை வைக்கப்பட்டது. பின்னர் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள மருத்துவர்கள் திட்டமிட்டனர்.

15 மணிநேரங்கள் மருத்துவர்களின் அவதானிப்பின் மூலம், குழந்தையின் இதயத் துடிப்பு நிறுத்தப்பட்டு, செயற்கைப் பம்பி மூலம் குருதிச் சுற்றோட்டம் இயக்கப்பட்டது. மிகவும் நுட்பமாக அறுவைச் சிகிச்சை நடைபெற்று கிட்டத்தட்ட 7 வாரங்களின் பின்னர் பெற்றோர் குழந்தையைப் பார்க்க மருத்துவர் கள்அனுமதித்தனர்.

எமது குழந்தையைப் பார்த்ததும் எமக்கு மிகவும் மகிழ்ச்சி. முன்னைய நிலையிலும் பார்க்க இப்போது குழந்தையின் நிலை மேம்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. நோயிலிருந்து காப்பாற்றப்பட்டிருப்பதை நாம் உணர்கின்றோம் எனப் பெற்றோர் தெரிவித்தனர். (த-ரி4)



# ஏமனில் 60 பேர் சாவு

## கார்க்குண்டுத் தாக்குதலில்

சனா, ஓக்.31

ஏமனில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ளனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்கதல் தெற்கு ஏமனில் அமைந்துள்ள ஏடன் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினரின் எல்லையினுள் அமைந்துள்ள அரசுப் படைகளின் பயிற்சி முகாமின் மீது இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

17 மாதங்களாகச் சவூதியின் ஆதரவுடன் போராளிகளுக்கு எதிராக ஏமனில் இடம்பெறும் போரில், இதுவரை 6 ஆயிரத்து 600 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. தகவல் வெளியிட்டுள்ளது. 2.5 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு தமது இணையத்தளத்தில் பொறுப்பேற்றுள்ளது.

இதற்கிடையே, சவூதிப் படையினரும், போராளிகளும் போரை நிறுத்துவதற்காக அமெரிக்கா விடுத்த அழைப்புக்கு இணங்கினர். முன்னதாக குவைத்தில் நடைபெற்ற பேச்சு தேல்வி அடைந்ததை அடுத்து, மீண்டும் பேச்சு முயற்சியில் ஈடுபட இரு தரப்பும் முன்வந்தன. ஷியா ஹூதிப் போராளிகளும், அரசும் இணைந்து சனா நகரில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள முன்வந்த சூழலில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. (த-ரி4)

## பெண்களின் ஆடை விவகாரம்;

# சர்ச்சையில் சிக்கிய சுற்றுலா அமைச்சர்

புதுடில்லி, ஓக.31

இந்தியாவுக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பெண்கள், இரவு நேரங்களில் குட்டைப் பாவாடையோ, அரைக்காற் சட்டையை அணிவதைத் தவிர்க்க வேண்டும் என இந்தியாவின் சுற்றலாத் துறை அமைச்சர் மகேஷ் சர்மா தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுற்றலாவுக்கு வரும் பெண்களின் பாதுகாப்பு குறித்து ஆக்ராவில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன் வெளிநாட்டுப் பெண்கள் பயணிக்கும் வாகனத்தின், வாகன இலக்கத் தகட்டைப் புகைப்படமெடுத்து உறவினர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் அவர் அறிவுரை கூறினார்.

இந்தியாவில் அண்மைக் காலமாக இடம்பெற்ற துர்நடத்தைச் சம்பவங்களால் இவ்வாறானதொரு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர் தெரிவித்ததாவது:

இந்தியக் கலாசாரம் வேறு மேற்குலக கலாசாரம் வேறு. ஆடை விடயத்தில் நாம் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. ஆனால், இரவில் வெளிச் செல்லம்போது பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் நாம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம்- என்றார். சுற்றலாத்துறை அமைச்சரின் இந்தக் கருத்துக்குப் பல்வேறு தரப்பிலும் இருந்து எதிர்க் கருத்துக்கள் கிளம்பியுள்ளன. இவ்வாறான கருத்துக்கள் பொறுப்பற்ற பதில்கள் எனச் சமூக ஆய்வாளர்கள் தெரிவித்தனர். மேலும், பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற துர்நடத்தைச் சம்பவங்களுக்குப் பெண்கள் மட்டுமே காரணம் என அவரது கருத்து அமைந்துள்ளது. ஆண்கள்தான் தவறு செய்கிறார்கள். இரவு வேளையில் பெண்கள் வெளிச் செல்வதற்கு உரிமை உண்டு. இதில் கலாசாரம் எவ்வாறு பங்கு வகிக்கும் எனப் பெண்ணியவாதிகள் மேலும் கேள்வி எழுப்பியுள்ளனர். (த-ரி4)



# அழகான ஆசிரியர்களால் மாணவர்களுக்கு அதிக புள்ளி

## ஆய்வில் வெளியானது முடிவு

வொஷிங்டன், ஓக.31

அழகான தோற்றம் கொண்ட ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களில் மாணவர்கள் அதிக புள்ளிகள் பெறுவதாக அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வில் தெரியவந்துள்ளது.

நெவெடா பல்கலைக்கழகத்தால் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில், மாணவரைக் கவரும் விதத்தில் உள்ள ஆசிரியர்களால், மாணவரை அதிக புள்ளிகள் எடுக்க வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர்களின் தோற்றம், அவர்களது அணுகுமுறை மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகளில் செல்வாக்குச் செலுத்தும் என முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் 131 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் முதலில் குரல் பதிவு ஒன்றின் மூலம் பாடம் எடுக்கப்பட்டு, பரீட்சைக்கு அமர்த்திப் புள்ளிகள் பெறப்பட்டன. பின்னர் அழகான தோற்றத்தில் சிறப்பான கற்பித்தல் நடவடிக்கை உடைய ஆசிரியையால் பாடம் கற்பிக்கப்பட்டு, பரீட்சைக்கு அமர்த்திப் புள்ளிகள் பெறப்பட்டன.



இரு புள்ளிகளும் ஆராயப்பட்டன. இதன் அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கையில் புலனைக் குவிக்கக் கூடிய வகையில் ஆசிரியர்கள் செயற்பட வேண்டும் எனும் முடிவு எட்டப்பட்டுள்ளது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





உலகின் வருடாந்த சேற்றுக்குள் மூழ்கும் போட்டி வேல்ஸில் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை 31 ஆவது சேற்றுக்குள் மூழ்கும் போட்டியில் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆழமான குழியினுள் சேறு, நீர் என்பவற்றை நிரப்பி, உடலைச் சேற்றினுள் வைத்திருந்து, குறிப்பிட்ட தூரத்தை நீந்திக் கடப் பதே இந்தப் போட்டியாகும். சேற்றினுள் குறுகிய நேரத்தில் விரைவாக நீந்துபவர் வெற்றியாளராகத் தெரிவாவார். (த-ரி4)

# வடகொரிய தலைவரை அவமதித்த இருவருக்கு சாவுத் தண்டனை



பியாங்யாங், ஓக.31

வட கொரியத் தலைவர் கிம் யோங் உன், தனக்குக் கீழ்ப்படியாத அரசியல் பிரமுகர்கள் இருவருக்குச் சாவுத் தண்டனை வழங்கியதாகத் தென்கொரிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் ஹவாங் பின்னையும், கல்வி அமைச்சில் பணிபுரிந்த அதிகாரி றி யோங் ஜின்னையும் அவர் சாவுத் தண் டனைக்கு உட்படுத்தியதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹவாங் முன்வைத்த சட்டத் திருத்தங்கள் கிம்முக்கு எதிராக இருந்தமைக்காகவும், றி யோங், கிம்முக்கு ஆதராவாகச் செயற்படுவது போன்று காண்பித்து, ஊழல் விசாரணைகளில் ஈடுபட்டமை, தலைமைத்துவத்தை அவமதித்த செயல் ஆகியவற்றுக்காகவும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

பியொங்யாங்கில் உள்ள இராணுவப் பயிற்சிமையத்தில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுத் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

> ஹவாங் முன்வைத்த சட்டத் திருத்தங்கள் கிம்முக்கு எதிராக இருந்தமைக்காகவும், றி யோங், கிம்முக்கு ஆதராவாகச் செயற்படுவது போன்று காண்பித்து ஊழல் விசாரணைகளில் ஈடுபட்டமை, தலைமைத்துவத்தை அவமதித்த செயல் ஆகியவற்றுக்காகவும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.


2011 ஆம் ஆண்டு கிம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின் னர், பல பிரமுகர்களுக்குச் சாவுத் தண்டனை வழங்கியதாகத் தகவல்கள் வெளியாகின. இந்தச் சம்பவமும் முந்திய குற்றச்சாட்டுகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது. (த-ரி4)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முருகன் என்றால் அழகன் அழகன் என்றால் முருகன் அந்த வகையிலே நல்லூரில் வீற்றிருக்கும் நல்லைக் கந்தன் அலங்காரக் கந்தன் என்று எல்லோராலும் போற்றப்படுகின்றான்.**

# சுந்தர நல்லூரில் சோதிவடிவேல் பிரகாசிக்கின்றது பார்!

திருமதி மலர்விழி கனகசபை

வரலாற்றுச் சிறப்பும்,திருவருட் பொலிவும்,அழகும்,செழிப்பும்தூய்மைஉணர்வும், ஆன்மிகச் சூழலும் நிறைந்த யாழ்ப்பாணத்து நல்லூர் எம் பதியிலே வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற முருகப்பெருமானின் துர்முகி வருச ஆண்டு மகோற்சவத்தின் சிகரமாகிய தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை மிக அமைதியாகவும், பக்தி பூர்வமாகவும் நடைபெறுகின்றது. இலங்கையைத் தாய் நாடாகக் கொண்டு உலகெங்கும் பரந்து வாழும் முருகனடியார்கள், தமிழ் சைவ அபிமானிகள் இன்று நல்லையம்பதிக்கு அணி, அணியாகத் திரள்கின்றார்கள் ஆடி அமாவாசைக்கு ஆறாம்நாள் நல்லைக் கந்தனின் ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபத்தைந்து நாள்கள் இடம்பெற்று முருகனின் திருக்கல்யாணத்துடன் இனிதே நிறைவு பெறும். கருணை வள்ளலாகிய கந்தப் பெருமான் சிவனின் சக்தியே சிவனே முருகன் முருகனே சிவன் சோதிப் பிளம்பாக மாலயன் முன் அன்று காட்சிகொடுத்த பிரம்ம சோதியே கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் உதித்தது என்று சைவசித்தாந்த பக்தி உண்மையைப் புலப்படுத்தும் கந்தபுராணச் செய்யுள் இங்கே பொருந்தி நோக்கவது ஒன்றாகும். நல்லையிலே வீற்றிருக்கும் கந்தக்கடவுள் இன்று ஆறுமுகனாக வள்ளி தெய்வானை சகிதம் தேரிலே ஆரோகணிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தக் காட்சியைக் காண கோடி கண்கள் வேண்டுமய்யா! எம் தமிழ்மக்கள் இதற்குக்கொடுத்துவைக்கவேண்டும்.

"உடம் பிடிச் செங்கைக் குமரவேள் வள்ளல் உருள் நெடுந்தேர், தடம் பிடித்தோடும் திரு நல்லை வீதிதனில், வருமால் வடம் பிடித்து ஈத்திட வம் மின் கண் தொண்டரெல்லாம் இடம் பிடித்திருப் பீர் வீடு நல்கும் இறையடிக்கே"



நல்லூர்க் கந்தன் உற்சவத்தில் தேரை வடம் பிடித்து இழுப்பதனால் பெரும் பேறாகிய வீடுபேறு கிட்டும் என்பததை நல்லை அந்தாதியிலே சோமசுந்தரப் புலவர் குறிப்பிடுகின்றார். நல்லூர் கந்தப் பெருமானின் வடக்கு வீதியில் நூற்றிஎட்டு அடி உயரமான ஒன்பது நவதளங்களுடைய குபேர வாசல் கோபுரம் கட்டப்பட்டு மிகவும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. முருகன் என்றால் அழகன், அழகன் என்றால் முருகன் அந்த வகையிலே நல்லூரில் வீற்றிருக்கும் நல்லைக் கந்தன் அலங்காரக் கந்தன் என்று எல்லோராலும் போற்றப்படுகின்றான். போர்த்து கேயர் ஆட்சிக்காலத்தில் நல்லூர் முருகன் கோயில் முற்றாக இடிக்கப்பட்டது. இந்தச் செயல் சைவ மக்களின் உள்ளத்தில் நீறு பூத்த நெருப்புப் போல் அடங்கிக் கிடந்த முருகப் பெருமானின் பக்தி உணர்வை எவராலும் அழிக்கமுடியவில்லை. ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் சிறிது மதச்சுதந்திரம் சைவர்களுக்கு வழங்கப்பட்டது. போத்துக்கேயர் ஆட்சியிலும் ஒல்லாந்தர் ஆட்சியின் முற்பகுதியிலும் சைவர்கள் மறைமுகமாகவே தங்கள் வழிபாட்டை நடத்தி வந்தனர். கோயில் அமைத்து தெய்வ உருவங்களை வழிபட முடியாத நிலையில் முருகப் பெருமானுடைய ஞானசக்தியாகிய வேலும், சிவனின் அஸ்திரமாகிய சூலமுமே வழி பாட்டுக்குரிய சின்னங்களாகத் திகழ்ந்தன. யாழ்.குடாநாட்டிலே பல முருகன் ஆலயங்களில் வேல் பிரதிஷ்டை செய்திருப்பதற்கு இது ஒரு காரணமாகும்.



தமிழ் நாட்டுக்குக் கிருபானந்தவாரியார் போல ஈழ மணித்திருநாட்டுக்கு மணிபாகவதரும் புகழ்சேர்த்தவர். அரங்கிலே பிரசங்கப் பீரங்கியாகத் திகழ்ந்து எல்லோராலும் கரகோசம் பெற்றவர். அவரின் சமாதி ஆதீனத்தின் பின்புறம் உள்ளது. துர்முகிவருச நல்லாட்சி அரசிலே நெருங்கி வரும் சமாதான முகூர்த்தம் நாட்டில் சிறந்த அமைதியையும் நிறைவான தீர்வையும் தரவேண்டும் என்பது இன்றைய பொன்னாளில் தங்கத்தேரேறி வரும் ஆறுமுகப் பெருமானை எல்லோரும் மனதார வணங்கி, அவன் புகழ்பாடி, இந்த மண்ணிலே எல்லோரும் நல்ல வண்ணம் வாழ அந்த கலியுகவரதனாகிய கந்தப் பெருமான் அருள் பாலிப்பாராக!

கட்டுரையாளர்: உதவிக் கல்விப்பணிபாளர் (அழகியல்)
தீவக கல்வி வலயம், வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த் திருவிழா

மு. ஈழத்தமிழ்மணி

நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா. அலங்காரக் கந்தன் என்று இலட்சக் கணக்கான பக்த அடியார்களால் விருப்போடும் அன்போடும் அழைக்கப்படுகின்ற அந்த ஆறுமுகப் பெருமான் அருட்சக்திகளாக விளங்குகின்ற ஸ்ரீ வள்ளி, தெய்வானையுடன் அழகிய சிறப்புமிக்க சித்திரத் தேரினிலே பொன்னகைகள் அங்கமெல்லாம் மின்னிட அலங்காரமாக ஆரோகணித்து வீதி வலம் வருகின்றான்.

தமிழ் மக்களின் தெய்வமாகப் போற்றி வழிபடுகின்ற முருகனுக்கு இலங்கையிலும், இந்தியாவிலும் பல திருத்தலங்கள் உண்டு. தமிழகத்தில் முருகனுக்கு ஆறுபடை வீடுகள் இருப்பதுபோன்று ஈழத்திலும் பல இடங்கள் உண்டு. ஈழமணித்திருநாட்டிலே கருணைக் கடலாக விளங்கும் கந்தனுக்கு இணுவையூரிலும், மாவிட்டபுரத்திலும், செல்வச்சந்நிதியிலும், வெருகலிலும், சித்தாண்டியிலும், நல்லூரிலும் சிறப்புப் பெற்ற ஆலயங்கள் அமைந்திருக்கின்றன.

நல்லூர்க் கந்தனின் அருள் என்பது எந்த வார்த்தைகளாலும் வடித்துவிட முடியாதது. கண்கொண்டு பார்க்கின்ற அலங்காரத்தையும், சொல்லுவதற்கு வார்த்தைகள் போதாது. இவை இரண்டுமே தமிழ் மக்களை ஈர்க்கின்றதொரு அற்புத சக்தியாகவே கட்டிப் போட்டுள்ளன.

அலங்காரக் கந்தன் என்றும், ஆனந்தக்கந்தன், நல்லூர்க்கந்தன் என்றும் தமிழர்களது உள்ளங்களால் மெய்சிலிர்த்துப் போற்றப்படுகின்ற பெருமானின் தேர்த்திருவிழா காண்பதற்கு யாழ். குடாநாட்டில் மட்டுமல்லாமல் பிற மாவட்டங்களில் இருந்தும் அடியார்கள் பல்லாயிரக் கணக்கனோர் நல்லூரை நோக்கி ஓடிவருவர்.

சிறப்புமிக்க நன்னாளிலே ஆறுமுகங்களோடு காட்சி தருகின்ற அற்புதத் திருவிழாவாம் தேர்த்திருவிழாவிலே தாமும் கலந்து கொள்ளவேண்டும் என்ற பக்தியின் உந்துதலினால் அதிகாலை மூன்று மணியிலிருந்து நல்லூரை நோக்கிச் சென்றிட எழுந்திடுவர். சைவத்தமிழர்களின் பெருந்திருவிழாக் காண்பதற்காக நல்லூரில் மட்டும் இலட்சக் கணக்கான பக்தர்கள் ஒன்று கூடுகின்றனர். மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கின்ற வேல் சாதாரணமான தொன்றல்ல. அருட்சக்தி மிகுந்த வேலனின் காந்தர்வ சக்தி, முருகன் தன்பால் அடியவர்களை ஈர்த்து துயர்களைபவன். அந்த ஒரு நம்பிக்கை கொண்டவர்களாக அவனது அடியவர்கள் இருப்பதனாலே தான் சகல திருவிழாக் காலங்களிலும் அவன் அருள் வேண்டிட அவனது வாசலில் திரளுகின்றனர்.

தேர்த்திருவிழாவின்போது இலட்சக் கணக்கான பக்தர்கள் ஆலய வளாகத்தில் ஒன்றுகூடுவதால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்த்து அமைதியான சூழலில் பக்தர்கள் தங்களது நேர்த்திகளை பூர்த்திசெய்து அதிகாலை மூன்று மணிமுதல் பக்திப்பரவசம் மேலிட அங்கப் பிரதிஷ்டை மற்றும் அடி அழித்தல் போன்ற தமது வேண்டுதல்களை நிறைவேற்றுவது வழமையான காரியமாகும்.

நான்கு மணியிலிருந்து பக்தர்கள் ஆலய உட்பகுதி முழுவதும் ஆறுமுகப் பெருமானின் தரிசனம் காண்பதற்குக் குவிந்திடுவர். குறிப்பாக வசந்த மண்டபத்திலிருந்து நேராகத் தெற்கு வாசல் கதவு வரை பக்தர்கள் முட்டி மோதியவாறும் தள்ளு முள்ளுப்பட்டுக்கொண்டு அமர்ந்திருப்பார்கள்.

வெளிவீதிகளில் ஆறு மணிக்கு முன்னதாக பக்தர்கள் நிரம்பி வழிந்திருப்பார்கள். உள்வீதிக்குள் நுழைய முடியாதபடி பக்தர்கள் வாசல் கதவுகளூடாக உட்செல்ல முடியாதபடி நெருக்கடி உண்டாகும்.

வசந்த மண்டபப் பூசைக்கான நேரம் 6.30 மணியை நெருங்க நெருங்க ஆறுமுகப்பெருமானின் திருமுகம் காண ஒவ்வொரு மெய்யடியார்களின் முகங்களிலும் பக்திப் பிரவாகம் கரை புரண்டு ஓடும். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வசந்த மண்டபத்தில் திரண்டு இருக்க, நதஸ்வர மேதைகள், தவில் வித்துவான்களின் மங்கள பேரிசை முழங்க, கோபுரவாசல் பகுதியை அண்மித்த ஆறு கோபுர மணிகளும் ஒன்றுசேர ஒலித்திட, பக்தர்களின் அரோகரா கோசம் வானைத்தொட்டு முழங்க தேவர்கள் பூமாரி பொழிய, வசந்த மண்டபத் திரைச் சீலைகள் விலகிச் செல்ல, ஆறுமுகப் பெருமான் கஜவல்லி மகாவல்லி சமேதராக வசந்த மண்டபத்தில் அருட்காட்சி கொடுத்து, பகக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

> **முருகப் பெருமானிடத்திலே அமைந்துள்ள கருணையும் அழகும் அவனை நம்பிவருகின்ற அனைத்துப் பக்த அடியார்களாலும் விரும்பி ஏற்கப்படுவதாகும். தன்னை விரும்பி வணங்கும் பக்தர்களைத் தன்பால் ஈர்த்து, அவர்களுக்கெல்லாம் எவ்வெவ்வாறெல்லாம் அருள் புரிய வேண்டுமென்ற கருணையுள்ளம் கொண்டவன் கலியுகவரதன்–கந்தப் பெருமான்.**

மக்கள் தாங்கள் பெற்ற பெரும் பாக்கியமாகவே ஆறுமுகப் பெருமானின் திருவருட் காட்சியைக் கருதுகின்றனர். கொடித்தம்பப் பூசை நிறைவடைந்ததும் பக்தர்கள் வெள்ளம் கரை புரண்டோடிட அரோகரா! கந்தனுக்கு முருகனுக்கு அரோகரா, நல்லூரானுக்கு அரோகரா! என்ற கோசங்கள் விண்ணதிர ஆறுமுக சுவாமி கஜவல்லி, மகாவல்லி சமேதராக வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருள்வார். அழகிய வெள்ளியிலான சிங்க பீடத்திலே ஆறுமுகப் பெருமான் உள் வீதிவலம் வந்து, பல்லாயிரக்கணக்கான அடியவர்களுக்கு அருட்காட்சி கொடுத்து அருள் மழை பொழியும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

உள் வீதியில் பக்த அடியார்கள் கட்டுப்படுத்த முடியாத நிலையிலும் நெருக்கடிக்குள்ளும், முருகப் பெருமானின் திருக்காட்சியைப் பார்த்துவிட வேண்டுமென துடிப்பார்கள். தங்களுக்கும் கந்தனின் அருட் பார்வை கிடைத்துவிட வேண்டுமென்ற பேரவாவினால் முண்டியடிப்பார்கள்.

ஆறுமுகப் பெருமான் ஆடி, ஆடி வந்து, யாகசாலையில் பூசை முடிவடைந்ததும் கோபுர வாசலை நோக்கி ஆடிஅசைந்து செல்லுகின்ற அந்த அற்புதக் காட்சிக்கு மத்தியில் தேருக்கு முன்பாகவுள்ள வீதிகளில் பக்த அடியார்களால் உடைப்பதற்காகத் தேங்காய்க் குவியலில் சேர்க்கப்பட்ட தேங்காய்களை சிதறும்படி உடைத்துக் கொண்டிருக்கும் காட்சியும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்.

தொடர்ந்து ஆலய மணிக்கோபுரத்திலுள்ள காண்டா மணிகள் திசை எட்டுத் திக்கிலும் மணிஓசையை எழுப்பிக் கொண்டிருக்க, கோபுர வாசலின் மேலாக கூடை கூடைகளாக மலர்கள் சொரிய, வெளி வீதிகளில் கூடி நிற்கின்ற பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் கரகோசம் ஒன்று சேர்ந்து வானைப் பிளக்க ஆறுமுகப் பெருமான் வெளிவீதியை வந்தடைவார்.

கூடியிருக்கின்ற பக்தர்கள் அலைமோத அழகிய தங்க இரதத்தில் கம்பீரமான ஆரோகணித்த ஆறுமுகப் பெருமானுக்கு பஞ்சராத்தி தீபங்கள் காட்டப்பட்டதும் வடக்கயிற்றை பிடிப்பதற்கு நீயோ? நானோ? வென்று முண்டியடித்துக் கொண்டு நிற்பார்கள். ஏனென்றால் தேர் வடம் பிடித்து இழுத்தால் சொர்க்கத்திலே ஓர் இடம் பிடிக்கலாம் என்று எண்ணியே பக்த அடியார்கள் வடத்தை பிடிப்பதற்காக இடித்துத் தள்ளிக் கொண்டு ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டுநிற்பது கந்தன் காட்டுகின்றதொரு மெய்மறந்த பக்தியான வேடிக்கையாகும்.

அரோகரா கோசத்துடனும், பக்த அடியார்கள் கடலைப்போல் பக்திப் பிரவாகத்துடன் பொங்கியெழ, நாதஸ்வர ஓசையுடன் தவில் வாத்தியமும் ஒன்றுசேர வடத்தின் கயிற்றை பக்தர்கள் பற்றியிழுக்க கரை புரண்டு ஓடும் பக்தர்கள் வெள்ளத்தில் அருள் ஞானக்குமரன் தேரினிலே மிதந்து வருவதுபோல் காட்சிகொடுப்பார். ஏறுமயிலேறி கூறுமடியார்கள் குறை தீர்க்கும் ஆறுமுகப் பெருமான் தங்க இரத்தில் ஆரோகணித்து வருகின்றபோது, கந்தனின் புகழ் பாடுகின்ற திருப்புகழ் தோத்திரங்கள், அருட்பாடல்களைப் பாடியபடி பல பஜனைக் கோஷ்டிகள் பின் வரிசையில் வந்த வண்ணமிருப்பார்கள். சிறுவர்கள் தொடக்கம் வயோதிபர்கள் வரையில் பல நூற்றுக் கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொண்டிருப்பர்.

*கைதான் தலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பியுள்ளம்*
*பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய*
*போற்றி யென்னும்*
*கைதான் நெகிழ விடேன் உடையா யென்*
*னைக் கொண்டு கொள்ளே.*

எனும் திருச்சதங்கச் செய்யுளுக்கிணங்க உடலெல்லாம் மெய்சிலிர்த்து ஒடுங்கி கைகளை சிரமேல் குவித்து வைத்துக், கண்களில் கண்ணீர் வழிய மன முருகி வாய் முருகா! முருகா என்று இயம்ப பக்த அடியார்கள் வணங்குகின்ற காட்சி பேரானந்தத்தைத் தோற்றுவிக்கும். வரலாற்றுச் சிறப்புகளோடு நல்லருள் பாலிக்கும் நல்லூர்க் கந்தன் தங்கத் தேரிலேறி ஆரோகணித்து வருகின்ற காட்சியானது வடபுலத்தையே அணிசெய்வது சிறப்பம்சமாகும். அந்த வகையில் ஈழமணித்திருநாடு முழுவதும் கலியுக வரதனாகிய கந்தவேல் பெருமானது அருளாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை எவர் மறுப்பர்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம் தாழ்த்தச் சென்னியும் தந்தது எதற்காக? முருகப் பெருமானை மனதாரப் பாராட்டி வணங்கி வரங்களைப் பெற வேண்டும். தேர்வீதி வலம் வருகின்றபோது, குருதியை வழிப்படுத்தி கட்டைபோடும் அடியார்கள் கந்தன் அருளால் இரதத்தின் சில்லுகளை நெறிப்படுத்த தேர்வீதி வலம் வந்து தேர் இருப்பிடத்தை வந்தடையும்.

தேர்வீதி வலம் வருகின்றபோது தேரைப்பின் தொடர்ந்து நான்கு வீதிகளிலும் நிறைகுடம், கும்பங்கள் வைக்கப்பட்டு-பூசைகளும், அர்ச்சனைகளும் இடம் பெற்றுக்கொண்டிருக்கையில்; தேரைப்பின் தொடர்ந்து பக்தர்களின் அங்கப் பிரதட்டை, அடிஅழித்தல் கர்ப்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், பாற்செம்புக் காவடி எடுத்தல் ஆகியவற்றின் மூலம் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

முருகப்பெருமானிடத்திலே அமைந்துள்ள கருணையும் அழகும் அவனை நம்பிவருகின்ற அனைத்துப் பக்த அடியார்களும் விரும்பி ஏற்கப்படுவதாகும். கந்தனும் தன்னை விரும்பி வணங்கும் பக்தர்கள் எவரையும் தன்பால் ஈர்த்து அவர்களுக்கெல்லாம் எவ்வெவ்வாறெல்லாம் அருள்புரிய வேண்டுமென்ற கருணையுள்ளம் கொண்டவன் கலியுகவரதன்-கந்தப் பெருமான்.

எந்தவொரு ஆலயத்தில் நடைபெறுகின்ற மகோற்சவத்தின்போது சிகரமாக அமைவது தேர்த் திருவிழாவாகும். தேர்த் திருவிழாவானது அழித்தலைக் குறிக்கும். அழித்தல் என்பது ஆன்மாவைப் பீடித்துள்ள ஆணவ மலங்களை அழித்து அவை திருவருள் பெறுவதற்கான தகைமைகயைப் பெற்று, வீடுபேறு அடைய வழி வகுப்பதாகும். இன்றைய நன்னாளில் நல்லைக்கந்தன் தேரேறிவந்து எம்மைப் பற்றியுள்ள ஆணவமலங்களை நீக்கி திருவருள் புரிகின்றான்.

இன்று புதன்கிழமை நடைபெறுகின்ற தேர்த்திருவிழாவில் பக்தர்களின் குறைகள் யாவற்றையும் தீர்த்து வைப்பதில் ஆர்வம் உள்ள நல்லூர்க் கந்தன் ஈழத்தமிழர்கள் பட்ட பெரும் துயர்கள் யாவும் விலகி சம உரிமையுடன் வெகு விரைவில் சமாதானத்துடன் ஒற்றுமையாய் இந்த மண்ணில் வாழவேண்டும். போரில் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் நிம்மதியும் ஏற்றமும் கிடைக்க வழியேற்பட வேண்டும். இந்த மண்ணில் நாதியற்ற இனமாக என்றைக்குமே இருக்கவே கூடாது என்று-நினைத்து வணங்குகின்ற இன்றைய நன்னாளில் தமிழ்க் கடவுளாம் கந்தப் பெருமான் திருவருள் புரிவாராக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்னர்களின் இராஜதானியில்

## நல்லூர் முருகப் பெருமான் எழுந்தருளி அருளாட்சி செய்கிறான்

சி.சக்திகிரீவன்

உலகில் எத்தனையோ மொழிகள் இருப்பினும் அவற்றில் தமிழ் மொழி தெய்வத் தமிழ் என்றும், வடமொழி தேவபாஷை என்றும் போற்றப்படும் சிறப்பைப் பெறுகின்றன.

இவ்விரு மொழிகளும் சிவபிரானுடைய இரு திருக் கண்கள் என்று அருளாளர்களாலும் அறிஞர்களாலும் போற்றி மகிழப்படுகிறது. தமிழ் மொழி சிவபிரானால் பொதியை மலையில் தோன்றியதென்பதும் இத்தகைய தமிழை அகத்தியருக்கு முருகப் பெருமான் விரித்துரைத் தார் என்பதும் அற்புதமான உண்மைகளே. இதனால் முரு கப் பெருமானைத் தமிழ்க்கடவுள், தமிழ்த் தெய்வம் என்றெல்லாம் போற்றுவதுண்டு. "முருகு" என்ற சொல் அழகு எனும் பொருளைத் தருகிறது. இதில் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் அமைந்து காணப்படுகின்றன. முருகப்பெருமான் பன்னிரு தமிழ் உயிரெழுத்துக்களைத் தன்திருக்கரங்களாகவும், பதினெட்டு மெய் எழுத்துக்களைத் தனது திருக்கண்களாகவும் ஆய்த எழுத்தை தனது ஞானவேலாகவும், கொண்டுள்ளான். ஒலிவடிவில் அப்பெருமானின் வடிவம் தமிழாகிறது என்பது தெளிவு. இதனால் அருணகிரிநாதப்பெருமான் "அருணதள பாதபத்மப அனுதினமுமே வகிக்க அரிய தமிழ் தானறிந்த பெருமாளே" என்று பாடி மகிழ்ந்துள்ளார். தமிழ் எழுத்தில் (அ) அகரமானது எல்லா எழுத்துக்களிலும் கலந்து நின்று தன் வியாபகத்தை உணர்த்துகின்றது. இறைவனும் எங்கும் எவற்றிலும் நீக்கமற நிற்கின்றான் எனும் உண்மையைச் சைவ சித்தாந்தம் மிகத் தெளிவுறக் கூறும்.

"அ" என்ற எழுத்தில் உள்ள வட்டவடிவம் பிறைவடிவம், பரவளைவு ஏனைய வளைவுகள் நிலைக்குத்துக்கோடு கிடைக் கோடு என்பன எமது கட்புலனுக்கு அகப்படுபவை. இவற்றை வைத்து உலகில் எந்த மொழியின் எழுத்துக்களையும் எழுதிவிட முடிவது கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியவை.

இத்தகைய சிறப்புள்ள தமிழ்த் தெய்வமான முருகப் பெருமானுக்கு ஆறுபடை வீடுகள் சிறப்புறக் கூறப்படுகின்றது. இவை அனைத்தும் இந்தியத் திருநாட்டிலேயே அமைந்தவை. ஈழத் திருநாட்டில் கதிர்காமம், செல்வச்சந்நிதி, உகந்தை முருகன் கோயில், மண்டூர்முருகன் கோயில், கந்தவனக்கடவை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் போன்றவை குறிப்பிடத்தக்கன.

### நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

இவ்வாலயம் சோழ மன்னர்களின் படையெடுப்பின் பின் அவ்வரசின் பிரதிநிதி அல்லது அவ்வரசின் முதல் மந்திரியான ஸ்ரீ புவனேகபாகுவினால் முதன் முதல் கட்டப்பெற்றுச் சிறப்புற ஆகம விதிகளுக்கமைவாக பூஜை காரியங்கள் இடம் பெற்றதாக இலக்கியப் படைப்புக்களில் இருந்து அறியக்கிடைக்கிறது. இப் புவனேக பாகு அந்தணராதாயினால் வேத சிவாகமத்துறையில் அதீத அக்கறையுள்ளவராக காணப்பெற்றமையும் அவ்விலக்கியங்களின் சிறப்பு. புவனேகபாகுவென வெவ்வேறு காலங்களில் மூவர் சம்பந்தப்பட்டிருப்பதும் வரலாற்றாசிரியர்களின் பிரச்சினை. அவை ஒரு புறமிருக்க.

### நல்லூர் இராஜதானி

காலத்துக்குக் காலம் அந்நியர் படையெடுப்புகளின் போதெல்லாம் தமிழர் சின்னமாகத் திகழ்ந்த சைவாலயங்கள் அழிக்கப்பெற்று நிர்மூலமாக்கப் பெற்றது. இதில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் தப்பி விடவில்லை. இந்தக் கோயிலையும் மாறி மாறி அந்நியர்கள் அழித்தே வந்தமை வரலாற்றில் காணக்கூடியதாகவும் மன்னர்கள் நல்லூரை இராஜதானியாகக் கொண்டதால் இவ்வாலயம் பல கெடுபிடிகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. இந்த நேரங்களில் அந்தணப் பெருமக்கள் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. இன்றும் நல்லூர்க் கந்த சுவாமிகோயில் அமைந்த பிரதேசம் நல்லூர் இராஜதானி என வர்த்தமானியில் பிரசுரிக்கப் பெற்று அதற்கெனத் தனிக் கிராம அலுவலர் பிரிவு அமைந்திருப்பது மிகப் பொருத்தப்பாடானதே. இது நல்லூர் இராஜதானி ஜே/107 கிராம அலுவலர் பிரிவாக இன்றும் நடைமுறையில் உள்ளது.

### அந்நியர் அழிவிலிருந்து காப்பாற்றவே மூலஸ்தானம் ஸ்தூபி அற்றிருப்பது.

அந்நியர் படை எடுப்புக்களில் சைவாலயங்களை வெளிப்படையாகத் தெரியக்கூடிய விதத்தில் விமானங்களுடனும், சிற்ப வேலைகளுடனும் அமைத்தால் அந்நியர்கள் அதனைத் தொடர்ந்தும் அழித்துவிடுவார்கள் என்று அஞ்சி இவ்வாலயம் மடாலயம் போல் மூலஸ்தானம் ஸ்தூபி அற்றிருப்பதும் சைவர்கள், தமிழர்கள் பட்ட துன்பத்தின் அடையாளமாகக் காணப்படுகின்றது.

ஆலய மூலஸ்தானத்தில் மூலவராக வேலமைந்திருப்பதும் இங்கு காணக்கூடியது. சிவாலய சம்பந்த. விடயங்களில் சுருதி யுக்தி, அனுபவம் என்பவையே பிரயோகிக்கப்பட வேண்டியவை.

### வேலின் மகத்துவம்

வேலினுள் சிவலிங்கம், சக்கரம், திரிசூலம் ஏனைய சிவ சின்னங்கள் அனைத்தும் அடக்கம். ஆகையால் இவ்வாலய பாரம்பரிய நடைமுறைகள். சிவாகம நிபுணர்களதும் கேள்விக்குட்படுத்த முடியாத அளவுக்கு மிக ஆழம் பொருந்திய தாகவே காணப்படுகின்றது "இறைவனுக்கு விதியும், விலக்கும் உரைக்க வல்லார் யாருளர்" அவனை பக்தியால் மாலைகளைத் தொடுத்து தடமிட்டு அவனை அகப்படுத்திக் கொள்ள வேண்டும். எம்மிடம் அகப்படாது ஒளிக்கின்ற கள்வினை கண்டு கொண்டு புதுமலர்களால் மாலையாகிய அவன் கால்களுக்கு தடமிட்டு சூழ்ந்தும், சுற்றியும், தொடர்ந்தும் அவனை எம் அகத்தில் அகப்படுத்தும் அற்புதம் மணிவாசகர் திருவாசகத்தில் "கண்டு கண்டின்புறத்தக்கது. இதனை ஒளிச்சோரனைக் கண்டனம் ஆர்மின், ஆர்மின் நான் மலர் பிணையலில் தாந்தனையிடுமின்

சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன் மின், பற்றுமின் என்றவர் பற்றுமுற் றெனித்தும் என்கிறார் மணிவாசகர். பக்தி நெறிக்கு விதிசொல்லி பல சோதனைகளை சந்தித்த அடியார்கள் வரலாறு இதற்கு சான்றாகின்றது.



### பூஜை காரியங்களில் நேரங்கணிப்பும் நியமங்களும்

ஆலய நித்திய, நைமித்திய பூஜைகளில் கால நியமங்கள் மிகக் கண்டிப்புடன் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அரச அலுவலகங்களில் கூட இதனைக் கண்டுவிட முடியாது அந்தந்தக் கிரியைகளுக்கு அதற்குரியவர்களும் தொண்டர்களும், போர்வீரர்கள் போல் மிகுந்த பக்தியுடன் தயார் நிலையில் நிற்பது இன்றுவரை தொடர்கின்றமை காணக்கூடியதாகவுள்ளது. முருகப் பெருமானின் காரியங்கள் அனைத்தும் மிக உயர்ந்தவை. அதற்குரிய உபசாரங்கள் நாட்டை ஆளும் அதிகாரிகளுக்கு எப்படியோ அதைவிட நூறுமடங்கு அதிகமாக இருக்கின் றனவும் பார்ப்போர் உள்ளங்களை பறித்திழுத்து விடுகிறது மூர்த்தியை அழகுற வைத்திருப்பதும் என்றும் எந்தநேரப் பூஜையிலும் தூபதீபத்துடன் நிவேதனம் இறைவனுக்குச் சமர்ப்பிப்பதும் அலங்காரங்களை அற்புதமாகச் செய்வது பெருந்திருவிழாக்களில் வெவ்வேறு வாத்திய, கீதங்கள், நாதஸ் வேதங்களுடன், எழுந்தருள ஏற்றவை முன்னைய காலங்களை காட்டிலும் தற்போது மிக அபூர்வமாக நடத்தப் பெற்றுவருவது காணக்கூடியதாகவுள்ளது. மகோற்சவ காலத்தில் ஈசான திக்கில் வேதமந்திரங்களும் திருமுறைகளும் சிறப்பாக ஓதப்படுவது இன்னோர் சிறப்பம்சமாகும்.

இவை அனைத்துக்கும் மேலாக சுவாமி மிகச்சிறப்பாக தங்கத்தால் ஆன ஆபரணங்களாலும், பூமாலைகளாலும், சுவாமியின் திருவுருவம் மறையாதபடி (திருப் பாதம்) சுவாமியை எழுந்தருளச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வாத்தியங்களையும் வேத மந்திரங்கள், திருமுறைகள், ஏனைய பக்தி தோத்திரங்கள் பூஜையில் இடம் பெறுகின்றன. சிறப்பாகப் பெருந்திருவிழாவில் ஸ்ரீருத்தம், யமகம், திரிசதி, போன்றவை, கிரமம் தவறாது பாராயணம் செய்யப்படுகிறது.

திருமுறைகளையும் ஏனைய பக்தர்களுடைய தோத்திரங்களையும் மிகச் சிறப்பாக ஓதுவதும் பல்வேறு வாத்தியங்களையும் ஒலிக்கச் செய்வது.

உபசாரங்களை இராஜாதி இராஜாவாகிய ஸ்ரீ சுப்பிரமண்யப் பிரபுவுக்கு பயபக்தியு டன் உடனுக்குடன் வழங்குவது முருகப் பெருமான் இமைப் பொழுதும் எம்மை ஆளுகிறான் என்ற உணர்வை தூண்டச் செய்கிறது. இவ்வாலய பூஜா காரியங்கள், பக்தி நெறியும், சிவாகமநெறியும் இணைக்கப்பெற்று நடைபெறுவது மிக மிகச் சிறப்பம்சமாகிறது.

### ஆலய நிர்வாகம் பக்தர்கள் நலனில் அதீத கவனம் செலுத்துகிறது

இவ்வாலயத்துக்கு வருகிற பக்தர்கள் ஆசார சீலராக வரவேண்டும் என்பதில் மிகுந்த கண்டிப்புடன் ஆலய நிர்வாகிகள் நடந்து கொள்கின்றனர். இந்த விடயத்தில் நாட்டை ஆளுகின்ற ஜனாதிபதி, பிரதமர், மந்திரிமார், ஏனைய நாட்டு இது போன்றோர் அனைவருக்கும் ஒரே கட்டுப்பாடு விதித்து அதனை நடைமுறைப்படுத்த பல்வேறு யுக்திகள் பிரயோகிக்கப்படுவது பாராட்டுக்குரியது. உள்வீதியினுள் ஆண்கள் மேலங்கியுடன் எந்தக் காரணத்தைக் கூறிக்கொண்டும் செல்லமுடியாதவாறு கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் நம்மவர்கள் சிலர் கூடக் குழப்புவதும் கவலைக்குரியது. இவற்றுக்கு நாமனைவரும் பரிபூரண ஒத்து ழைப்பு நல்கவேண்டும்.

தீர்த்தோற்சவத்தில் கடந்த காலங்களில் சில இளைஞர் களும், சில விசமிகளும், தீர்த்தக் கேணியில் இறங்கி அந் தத் தீர்த்தத்தை அள்ளி மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் கையில் வீசிவந்தனர். இதனால் தீர்த்தமாடுவதற்குத் தீர்த்தக் கேணிக்கு (வர முடியாதிருந்தது) சுவாமி எழுந்தருள முடியாதிருந்தது. 2014ஆம் ஆண்டில் இருந்து ஆலய நிர்வாகம் புதிய நுட்பமான யுக்தியைக் கையாண்டு தீர்த்தக் கரைக்கு சுவாமி எழுந்தருள ஆவன செய்துவைக்கப்பட்டுள்ளமை மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

குறிப்பாக தற்போதைய இவ்வாலய நிர்வாகஸ்தராகிய ஸ்ரீமான் இரகுநாத மாப்பாண முதலியார், குமாரதாச மாப்பாண முதலியார் தொண்ணூறு வயதிலும், மிகுந்த சுறுசுறுப்புடனும் அதீத அபூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதும் என்றும்–சிவசின்னங்களுடன் ஆசார சீலராக இவ்விடயங்களின் போதெல்லாம் சமூகமாக இருப்பதும் ஏனைய ஆலய நிர்வாகிகள் கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகவே காணப்படுகிறது. இவை அனைத்தும் நல்லூர் முருகப் பெருமானின் திருவருட் செயலன்றி வேறில்லை. இத்தகைய தனித்துவம் பற்றி இங்கு குறிப்பிடுவதன் நோக்கம் ஏனைய ஆலயங்களும் இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றுவதற்கு ஏதுவாகும் என்பதால் என்றால் மிகப் பொருத்தப்பாடாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் ஆவணி அமாவாசைத் திதியில் தீர்த்தோற்சவமும் இதற்கு முதற்தினத்தில் ரதோற்சவமும் நடைபெறுகிறது.

25 நாள் நடைபெறும் இத்திருவிழாக்களில் பல்வேறிடங்களில் இருந்து பக்தர்கள் அலை கடலெனத் திரண்டு முருகப் பெருமான் அருளுக்கு ஆட்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டையாய் வந்த முருகன்



கலைஞர் பா.பாலச்சந்திரன்

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா" என்பது போல சிவனுடைய மகன் முருகன் லேசுப்பட்டவரல்ல. சிவனுக்கு திருவிளையாடல் புராணமென ஒன்றுள்ளது. மகனான அப்பன்சுவாமியான எம்ஜயன் கந்தனும் பல திருவிலையாடல்கள் புரிந்துள்ளார். அவற்றுள் ஒன்றுதான் முட்டையென்னும் பெயருடைய கள்வனாய் வந்து, பொய்யாமொழி புலவரைக் கொண்டு, தன்னை பாடவைத்த திருவிளையாடல்.
முருகப் பக்தர் ஒருவர் தனது இஷ்ட தெய்வமான முருகனுக்கு பாமாலை ஒன்று பொய்யா மொழியை கொண்டு பாடுவிக்க விரும்பி, புலவரை அணுகினார். பொய்யாமொழிசக்தியை வழிபடுபவர். அவர் உண்மையிலேயே ஒரு சக்தி உபாசகர். சக்தியை குறிப்பாக காளியையே வழிபட்டிருக்கிறார். அவருக்கு வாக்குவன்மை இருப்பதை காட்டிக் கொடுத்தவளே வயிரபுர மாகாளிதான்.
அந்தக் காலத்தில் மதுரைச் சங்கத்தார் கோயிலுக்குச்சென்று தானும் சங்கப் புலவர்களுக்குச் சமமானவன் என்று சிலைவடிவில் இருந்த சங்கப் புலவர்களைச் சொல்லவைத்து அங்கீகாரம் பெற்றார் என்று அவருடைய செவிவழி வரலாறு சொல்லும். அத்துடன் நின்றுபோயிருந்த தமிழ்ச் சங்கத்தை பாண்டிய மன்னனின் ஆதரவோடு மீண்டும் நிறுவினார் என்றும் அந்த வரலாறு கூறும். அவருடன் மிக நெருங்கிய நட்புக் கொண்டவர். அவ்வள்ளல் இறந்த சமயத்தில் பொய்யாமொழியும் உடன் கட்டை ஏறினார். தீவிர சக்தி உபா சகராகிய பொய்யாமொழி சக்தியைத் தவிர, வேறு தெய்வங்களை வணங்க மாட்டார். அதவும் முருகனின்பேரில் ஏனோ ஓர் இளக்காரம். "கோழியைப் பாடும் வாயால் கோழிக்குஞ்சை நான் பாடுவேனோ" என்று அடிக்கடி சொல்வார் முருகனைப் பாட மறுத்துவிட்டார்.
கோழி என்பது இங்கே சக்தியைக் குறிக்கும். கோழிக்குஞ்சு என்று முருகனைக் குறிப்பிட்டார். இப்படி பொய்யாமொழியின் வாயால் சிறுமைப் படுத்தப்படுத்தப்பட்டு வந்த முருகன் தருணம் பார்த்துக் காத்திருந்தான் தருணமும் வாய்த்தது.
புலவர் ஒவ்வொரு தலங்களாகச் சென்று அம்மை அப்பனைப் பாடி பரவசப்பட்டு வந்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பாடும்போது அங்கிருந்த சிலைகள் "பொய்யாமொழி" என்று வாழ்த்தின. இதனை அறிந்த பாண்டிய மன்னன் புலவருக்கு சகல மரியாதையுடன் நிறைய பொற்காசுகளும் கொடுத்தான். அந்தப் பொன்னைத் தன் மனைவியிடம் கொடுப்பதற்காகப் போனார் புலவர். வழியில் ஒரு காட்டுப் பாதையில் முருகன் ஒரு வேடனைப் போல் வந்து வழிமறித்தான்.
"இது எனக்குச் சொந்தமான வனாந்திரம். உன்னிடம் பொற்காசுகள் இருப்பது தெரியும் அதைக்கொடு இல்லையேல் என் அம்புக்கு இரையாவாய்" என்றார். "ஐயா... நான் ஏழைப் புலவன் என் மனைவிக்காக காசுகளை கொண்டு செல்கிறேன்" எனக் கொஞ்ச.. வேடன் வழிவிட மறுக்க .. "என்னை வம்பு செய்தால் உன்னை வசை பாடி ஒழித்திடுவேன்" எனப் புலவர் சொல்ல.. " நீர் பெரிய புலவரா. எங்கே என்மீது ஒரு பாடடுப் பாடும்"என வேடன் சொல்ல.. "எதையாவது பாடித் தொலைப்போம்" என நினைத்த புலவர் "உம் பேரென்ன?" எனக் கேட்டார்.
"முட்டை" என்றான் முருகன்."முட்டை என்று ஒரு பெயரா?" எனக் கேட்டபுலவர்.. "பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே என்பேதை செல்லற்(கு) கிசைந்தனனே மின்போலும் மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம் கானவேல் முட்டைக்கும் காடு"எனப் பாடினார்.
"உம் செய்யுளில் சொற் குற்றம் இல்லை. ஆனால் பொருள் குற்றம் உண்டு" என்றான் வேடன். கோபமான புலவர் "உன் வில்லுக்கும், அம்புக்கும் அஞ்சேன். பொருள் குற்றத்தைச் சொன்னால் உமக்கு நான் என்றும் அடிமை"-என்றார்.
"அடிமையாக்கத்தானே வந்தோம்.. காய்ந்துபோன சதுரக் கள்ளிச் செடிகள் தீப்பற்றிக் காடே எரிகிறது. அந்தக் காட்டுத் தீயில் சிறு நெருப்புக்கும் தாங்காது வெந்து சாம்பலாகும் வேலமரத்துமுள்... பேதையின் காலில் எப்படித் தைக்கும்?"
"ஒரு வேடனா என் கவியில் குற்றம் கண்டது? ஐயா நீங்கள் யார்?" "இப்போது எவரைப் பற்றிப் பாடினீர்?" "முட்டையைப்பற்றி" "முட்டையிலிருந்து வருவது?" "குஞ்சு" "குஞ்சுக்குத் தாய்?"
"கோழி" "கோழியைப் பற்றி பாடும் வாயால் குஞ்சைப்பற்றி பாடமாட்டேன் என்று சொன்ன புலவர் நீதானே?" "ஆம்" "இப்போது குஞ்சைக்கூட பாடாமல் முட்டையைப் பற்றி பாடினீரே?" வெட்கமாக இல்லையா?
"ஐயா.. நீர் சாதாரணமானவர் இல்லை. எவர் என்று சொல்லுங்கள்?"
"உம் தாயின் குஞ்சு" என வேடன் வேசம் கலைத்து, முருகன் தோன்ற "முருகா .. உன் பெருமை அறியாமல் பெரும் பிழை செய்துவிட்டேன் என திருவடியில் விழுந்த புலவரைத் தொட்டுத் தூக்கி நிறுத்திய முருகன் "பொய்யாமொழியே உமது ஆணவத்தை அடக்கி ஆட்கொள்ளவே வந்தோம். யாமே முருகன்... யாமே சிவன்.. யாமே சக்தி.. யாமே விஷ்ணு.." எனப் பல உருவங்கள் காட்டிய முருகன் "யாமே சர்வமும். உருவம் பலவாகினும் யாம் ஒன்றே. இது உமது புத்திக்குப் புலப்படவில்லை. ஆயினும் உமது வைராக்கியத்தை மெச்சுகிறோம். உமது மொழி என்றும் பொய்யா மொழியாகவே இருக்கட்டும்" என அருளி மறைந்தான் முருகன்.

# தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர நல்லூர்க் கந்தன் இன்று தங்கத் தேரேறி வருகின்றான்.

திருமதி மலர்விழி கனகசபை

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகப் பெருமான் கந்தபுராணக் கலாசாரமிக்க யாழ்ப் பாணத்து மத்தியில் நல்லூரிலே வள்ளி, தெய்வானை சகிதம் வீற்றிருந்து தன்னை நாடி,ஓடி வருகின்ற பக்தர்களுக்கு வல்வினை அகற்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். அத்தகைய சிறப்புமிக்க முருகப்பெருமானுக்கு 2016 ஆம் ஆண்டு துர்முகி வருட ஆண்டு பெருந் திருவிழாவின் சிகரமான தேர்த்திருவிழா இன்று மிக இனிதான எளிதாக நடைபெறுகின்றது . ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் நல்லைக் கந்தனின் ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து, இருபத்தைந்து நாள்கள் இடம் பெற்று கந்தனின் திருக்கல்யாணத்துடன் இனிதே நிறைவு பெறும். அழகன், முருகன் ஆறுமுக சுவாமியாக வள்ளி, தெய்வானை சகிதம் தேரிலே ஆரோகணிக்கும் அற்புதக்காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இதனைக் காண ஆயிரம் கோடிக் கண்கள் வேண்டுமய்யா! எம்சைவமக்கள் கொடுத்து வைக்கவேண்டும்.
தன்னை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும் நீக்கும் நோக்கில் முருகன் இன்று அலங்காரக் கந்தனாக அழகே வடிவான அற்புதத் தங்கத் தேரிலே தேவியர்கள் சகிதம் ஆரோகணித்து அருங்காட்சி தருகின்றான்.

"அருவமும் உருவமுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தான் உதித்தனன் உலகமுய்ய"

என்ற கச்சியப்ப சிவாச்சாரியாரின் திருவாக்குக்கமைய ஆறு குழந்தைகளாக சரவணபொய்கையிலே தோன்றி, அம்பிகையான உமையவள் பரிவோடு அரவணைக்க பன்னிரண்டு கைகளுடன் ஆறுமுகப் பெருமானாக ஐயன் அவதாரம் செய்தான் என்பது பூர்வீக வரலாறு. அந்த ஆறுமுகன் இந்த நல்லூரிலே அருள்-வேல் வடிவில் எழுந்தருளி வீற்றிருந்து, தன்னை வழிபடும் அடியார்களின் துன்பம் துயர் தீர்த்து அருள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்றான். நல்லூரில் மட்டும் அடியார்களின் கூட்டம் அலைமோதுவதற்குக் காரணம் மூலஸ்தானத்தில் இருக்கின்ற வேலுக்கு ஓர் அருள் சக்தி அதாவது சொல்ல முடியாத இன்பத்தை அள்ளிச் சொரியும் காந்த சக்தி இருக்கின்றது. அழகன் என்றால் முருகன், முருகன் என்றால் அழகன். ஆரம்பத்தில் மடாலயம்போல் காட்சியளித்துக் கொண்டிருந்த இவ்வாலயத்தை ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும்,சிற்ப சாஸ்திர விதிக்கமையவும் மாற்றியமைத்து, இன்றைய நிலைக்குக் கொண்டுவர வித்திட்டவர் நல்லைநகர் நாவலரே ஆவார். ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் பக்தர்களுக்கு திருவிழாக் காலத்தில் பசி போக்க மடாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையிலே ஒரே ஒரு சைவ ஆதீனமாக விளங்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆலயத்தின் மேற்குப்புறமாக மிகக்கம்பீரமாக அமைந்துள்ளது. ஈழத்தின் தலை சிறந்த சித்தர்களான செல்லப்பா சுவாமிகளும், அவரது சீடரான யோகர் சுவாமிகளும் தடம்பதித்த புண்ணிய திருக்கோயிலாக நல்லூர் கந்தன் ஆலயமும், திருவீதியும் திகழ்கின்றது. ஒரு ரூபாவுக்கு அர்ச்சனை இடம் பெறும் ஆலயம் நல்லூர்க் கந்தன் ஆலயமாகும். இதனால் எந்த ஏழை, எளியவரும் அர்ச்சனை செய்யக் கூடியதாக உள்ளது. இது ஈழத்துக் கோயில்களில் வேறெங்கும் காண முடியாத சிறப்பெனலாம். இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள், பிரபலங்கள் மாத்திரமன்றி எந்தவொரு நாட்டின் தலைவர்கள் ஆலயத்துக்கு வருகை தந்தாலும் குறிக்கப்பட்ட நேரத்திற்கே ஆலயம் திறக்கப்படுவதுடன், பூஜை வழிபாடுகளும் வழமையாக இடம்பெறும் நேரத்துக்கே ஆரம்பமாகி நிறைவடைகின்றன. எவருக்கும் ஆலயத்தில் முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை. ஆண்கள் அனைவரும் தத்தமது மேலங்கிகளைக் கழற்றி விட்டு ஆலயத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமென்பது பொது விதி இது ஆண்கள் எவருக்கும் பொருந்தும். ஆலயத்தின் கிழக்கிலும்,தெற்கிலும் ஏற்கனவே வாசல்களும், அவற்றின் மேல் உயர்ந்த கோபுரங்களும் அமைந்து காணப்படுகின்றன. தற்போது ஆலயத்தின் வடக்குப் புறமாக இலங்கையிலே மிகவும் உயரமான குபேரவாசல் நவதன இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மிகவும் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. நாள்தோறும் இங்கு அறுகாலப் பூசைகள் இடம் பெறுகின்றன. தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும். எனவே எம்மைப்பற்றி உள்ள மும்மலங்களையும் வேரோடு அழிக்க இன்று முருகன் தங்கத் தேரேறி வருகின்றான். எனவே இந்தத் தேசத்துக்கு நல்ல தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர நல்லைக் கந்தன் தேரேறி வந்து அருள்பாலிப்பாராக!

*கட்டுரையாளர்:*
*உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கனகசபாபதி
நாகேஸ்வரன்

# எந்தை வருக ரகு நாயக வருக எனதாருயிர் வருக



# தேர்மீதே

செந்தமிழ் முருகன் நல்லைக் கந்தன் கருணை கூர் முகங்களாறும் கொண்ட கலியுகவரதன் தேரிலே திருவீதிவலம் வருகின்ற அற்புதத் திருநாள் இன்றாகும். "எந்தை வருக, ரகுநாயக வருக, மைந்தா வருக! மகனே இனி வருக! எங்கண் வருக, எனதாருயிர் வருக–புவனமேவும்" என்கிறார் முருகனால் காக்கப்பட்ட அருணகிரிநாதப்பெருமான். கோபுரத்தினுச்சியிலே தொழு நோயாராய் அங்கமெலாம் நொந்து அழுகிய உடம்பினராய் தற்கொலை செய்திறக்கவெனப் பெண் பித்தனாய்த் திரிந்து அலைந்து உழன்ற அருணகிரிநாதரைத் தமது திருக் கரத்தாலே தாங்கிய முருகக் கடவுள் நல்லையிலே இன்று தேரே றிப் பவனி வருகின்றான்.

முருகா வா! கந்தா வா! கதிர்வேலா வா! கடம்பா வா! கருணைக்கடலே வா! என்று யாழ்ப்பாணத்துச் சைவச் சீரடியாரும் உலகில் வாழும் இந்து மதத்தவரும் கும்பிட்டு உரக்கக் கூவி அழைத்த வண்ணம் இருக்கும் திருநாளிலே தேரேறி அருள்புரியத் திருவுளமிரங்கி வருகின்றான் திருக்குமரன். விரதமிருந்து வித்தகனை வரவேற்கின்றனர் சைவத்தமிழ் மங்கையர்கள். எம் உயிரைக் காத்தருள் புரியும் நல்லூர்க் கந்தன் தேரேறி வருகின்றான். துன்பம் துடைக்கும் எம் செந்தமிழ்க் குமரன் தேரேறி அருள்புரியும் திருநோக்குடன் வருகிறான். தேவகுஞ்சரி மணாளனாய் ஆறுமுகவடிவேலன் அசைந்து அசைந்து, ஆடி ஆடி வருகின்றான். கிங்கிணி நாத ஓசை எழ தேவசேனாபதி வருகின்றான் தேரிலே. பார்க்கப் பார்க்க ஒளிரும் வடிவேலுடன் தேரேறி வருகின்றான். முன்னை வினை களைந்திடத் தேரேறி வருகிறான். அசுரர் குலம் மாளத் தேரேறி வருகின்றான். எமது சிந்தாகுலம் காக்கத் தேரேறி வருகின்றான். எப்போதும் பக்கத்திலே இருந்து எம்மையே காத்தருளும் பெருநோக்கோடு தேரேறி வருகின்றான்.

ஒளிப்பிழம்பான முருகன் சூரியப் பிரகாசத்தோடு தேரிலே அமர்ந்து–ஊர்ந்து அருள் செய்ய வருகிறான். இனவாத இருளைப் பொசுக்கவெனத் தேரிலேறி வருகின்றான். கொலை உணர்வை அடியோடு வேரறுக்கும் எண்ணத்துடன் தமிழ்க்கடவுள் தேரேறி வருகிறான். உயர் கல்வியிலும் தமிழ்மொழி மூல மாணவர்கள் துணையான தெய்வமெனத் தேரேறி அருள்கின்றான். பல்கலைக்கழகத்தில் அடிவாங்கி அழுகின்ற தமிழினத்தின் துயர் தீரத் தேரேறி வருகின்றான். குகையைப் பிளந்து தேவர் சிறைமீட்ட வீரன் தேரேறி வருகின்றான். சிறையை உடைத்த கடவுளே உம் போற் தெய்வம் உலகினிலே வேறுண்டோ? நல்லைக் கந்தனே உன் செவிகள் தான் செவிடா? உன் பன்னிரு கண்களும் தான் குருடா ? முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தெய்வமே!

நீயும் தமிழினத்தைக் கருவறுக்கும் எண்ணங் கொண்டனையோ? என்ன கவிபாடினாலும் உந்தன் மனம் இரங்கவில்லை! இன்னும் என்ன சோதனையோ? முருகா! என்றாலும் நீயேன் இரங்காமல் இருக்கின்றாய்! வீதி வீதியாய் முருகா உந்தன் திருநாமம் இசைத்திசைத்துப் பாடுகிறோம். அச்செந்தமிழர் அழியத் திருவுளமோ கொண்டனையோ! நீவிரும்பும் தமிழ்ப்பாட்டை முழுவதுமாய் முடித்துவிடத் துடிக்கும் கொலை வெறியர் கொட்டமடக்காயோ? இன்னும் ஏன் தாமதமோ? ஏன் மௌனம்? ஏன் மௌனம்? எந்தை பிரானே கந்தசாமியே வேற்றூர் தான் சென்றனையோ நீ நல்லையிலே இருக்கின்றாய் என்றும் தான் நினைத்தேன். எல்லையறு பரம் பொருளே எங்கு நீர் சென்றனையோ?

அழுவதற்கும் கண்களிலே நீரில்லைக்குமரா? ஆறுதலுக் கெவருமே உலகிலில்லை உனைத்தவிர; தேடுகிறோம். நீதியை! நிம்மதியை நீ தருவாய் நல்லைநகர் நாயகரே; நாக்குளறி நாவறண்டு வல்லமையெலாம் இழந்து மடிக்கின்றோம்! நீ இதனை அறிந்திருந்தும் ஏன் முருகா? ஏன் முருகா? அடுக்கடுக்காய்த் துயர் தந்து வதைக்கின்றாய்!

சமயம், வரலாறு, சிற்பமும், சித்திரமும், புராணமும், புகழ்பாட்டும், தமிழ் மொழியில் அத்தனையும் இனியும் காப்பாற்ற எம்மால் முடியாது. முருகனே தேரோன் தெய்வமே நீயே எமக்குதவி நீடு நிம்மதியைத் தரல் வேண்டும் வேலவனே உன் கைவேல்தான் கறள்பிடித்து போனதுவோ! நல்லைநகர் நாயகனே சொல்லுமையா விண்ணப்பம்.

அறக்கடவுளும் நீரே! மறக்கடவுளும் நீரே! அவையெல்லாம் அடியோடு மறந்தனையோ! வேலவனே உயிர்த்தெழுவாய் வேலவனே! ஊமையானாய் நிற்காதே. நாமும் பிழையென்றால் எமையெல்லாம் அழித்திருவாய்! செந்தமிழ், இன்பத்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ், தீந்தமிழ், நறுந்தமிழ், செழுந்தமிழ், ஞானத் தமிழ் அழியத் திருவுளம் கொண்டாயோ சொல்லாய் முருகா சுரபூபதியே! எல்லாம் இழந்து நலம் உன் திருவடியில் சமர்ப்பணமாம். மீட்டும் ஒரு தடவை உன் செவியில் விளம்பிடவோ?

முத்தமிழால் வைதாரையும் அங்குவாழ வைப்போனே! உன் பெரும்புகழ் தான் பொய்த்ததுவோ பதிலென்ன? பதிலென்ன? இன்னும் ஏன் எம்மைச் சோதித்துத் தொலைக்கின்றாய்! பேச இனி என்ன இருக்கிறது? தமிழ்க்குமரா நேசமுடன் உயிர்காக்க வழிசொல்வாய் உன் காலால்!

"இலங்கு தரத்தமிழ் விளங்க வருதிரு
இலஞ்சி மருவிய பெருமாளே"

தமிழ் விளங்க வந்துதித்தவனே இன்னுமேன் தாமதம்? செந்தமிழ் நூல் விரித்தோனே தமிழ் மொழி அழிந்தொழியத் திருவுளமோ? எம்மால் முடியாது முருகா! நீயே–காத்தருள் புரிய எழுந்தருளி வருவாயப்பா? போதும் உன் சோதனைகள்! தீர்வுதான் வேண்டும். திருக்குமரா திருவுளம் தான் இரங்காயோ! உன் எல்லா அதிசயமும், அற்புதமும் பொய்தானோ? உனைநம்பும் மெய்யடியார் முழுவிசரர் சரிதானோ? நல்லையுறை நாயகனே நல்லவரந் தந்திடுவாய்!? புலம்புகிறோம்! செய்வதறியாது பிதற்றுகிறோம்! தேற்றாயோ.

சைவநீதி நிலைநாட்டல் எமது கடன் வேலவா? அருணகிரிக்கு அருளிய குருநாதா ஏன் ஏளனஞ் செய்வோரையும், கொலைவெறியர்களையும், இனப்படுகொலையாளர்களையும் ஏன் நீ இன்னும் எரிக்காமலிருக்கின்றாய். என்றல்லவா? ஒவ்வொரு தமிழனையும் உன்னைக் கேட்க வைத்துள்ளாய். அருணகிரியும் பொய்யோ! திருப்புகழும் பொய்யோ! உன் தண்ணறியும் தான் வெறும் பொய்யோ! சொல்லாய் முருகா சுரபூபதியே.

இன்று உன் தேரருகிலே நிகழுவது போலவே அன்று அருணகிரிநாத சுவாமிகள் பக்தர்குழாம் சூழத் திருப்புகழ் பாடிக் கொண்டு முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தணிகைமலையை வலம்வரும் போது தெய்வமே இல்லையெனும் கொள்கையுடையவர்கள் திருப்புகழையும் அடியார்களையும் அவமதித்து நிந்தித்து எள்ளி நகையாடினர். மனம் வருந்திய அருணகிரிநாதர் முருக வேளை நினைந்து "சினத்தவர் முடிக்கும்" என்னும் திருப்புகழ்ப் பாடலில் முதல் நான்கு அடிகளை யும் பாடவும் எம்பெருமான் அரு ளால் துஷ்டர்கள் அனைவரும் திடீரென நெருப்பில் எரிந்து சாம்பலானதையும், பின்னர் கருணையே உரு வான சுவாமிகள் இந்தப் பாடலின் அடுத்த நான்கடிகளைப்பாடவும், மாண்டவர்கள் மீண்டும் எழுந்தும் அடியார்களானதாகவும் கூறப்படுகிறதே. இவையெல்லாம் முழுப் பச்சைப்புழுகோ! பொய்யோ! கட்டுக்கதை தானோ! நீயே பேசவேண்டும் வேலவா?

பக்தனுக்கருளாது பேசாதிருப்பாயானால் முருகா! நீயென்ன பரம்பொருள்! தேவசேனாதிபதியே உன்மீது எமக்குள்ள அசையாத பக்தி, வைராக்கிய உணர்வுடன் கேட்கின்றேன். தொழிற்படு! தொழிற்படு! தொழிற்படு !!! முருகா! தேரிலிருந்து உனது நடைமுறைத் தொழிற்பாட்டையே நாம் நாடுகிறோம். நீயும் யாப்பியலின் நிறைவைத்தான் நம்பியிருப்பாயோ! ஏமாறும் தமிழினத்தின் ஏழ்மை ஒளித்திடத் தேரேறி வா முருகா! தெய்வயானை வள்ளியுடன் தனித்து நீ வந்தாலும் சக்தி கொலுவிருப்பாள் அம்பிகையர் வந்தாலும் அளழகுக்கே! செயல் வீரா செயற்படுக! செயற்படுக! வேகமாய் காலம் கடத்தாத தன்மை எமக்கு வேண்டும். சொல்வாயா முருகா? தேரேறும் கந்தா சொல்

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் முடிக்கும்
செகுத்தவர் உயிர்க்குஞ் – சினமாக!
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் – றறிவோம் யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முடுக்கும்
நிசிக்கருவறுக்கும் பிறவாமல் நெருப்பையும் எரிக்கும்
பொறுப்பையும் மிடிக்கும்
திறைப்புக முறைக்குஞ்–செயல்தாராய்
தனத்தன தனத்தத் திமித்திமி திமித்தித்
தகுத்தகு தகுத்தத்–தன பேரி
தடுட்டுடு டுடுட்டுடன் டெனத்துடி முழக்குத்
தனத்துடன் நடக்குங் கொடு சூரர்
சினத்தையுமுடற் சங்கரித்த மலைமுற்றுர்
சிரித்தெரிகொளுத்துங் – கதிர்வேலா
தினைக்கிரி குறப் பெண் தனத்தினில் சுகித் தென்
திருத்தணி யிருக்கும் பெருமாளே"

எனவே இனியும் அருள்புரியத் திருவுளமிரங்காதுவிடின் நீயும் வாழ்ந்து போதீரே முடிவாக, திருகோணமலைத் தின்புகழின் இறுதி அடிகளை உமது திருவடிகளிலே மீண்டும் அர்ப்பணித்து இனியும் தமிழன் அடிவாங்காத நிலையை அருளவேண்டும் என்று விண்ணப்பம் செய்கின்றேன். பரிசீலிப்பாயாக!

நிலைக்கு நான்மறை மகத்தான ழசுரர்
திரிக் கோணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்–வருவோன்
நிகழ்த்து மேம்பவ கடற்சூறையாகவே
யெடுத்த வேல் கொடு பொடித்தூள தா ஏறி
நினைத்த காரிய மனுக்கூலமே புரிபெருமாளே"

இனி உன் தேரிலிருந்து அழித்ததற் தொழிலை அழகுறச் செய்தருள்வாய் முருகா!
அதனையே உலகம் வியப்புடன் எதிர்பார்த்துள்ளது.
"எனக்கென ஒரு தரம் வா..."

கட்டுரையாளர்: தமிழ்ப் பேராசிரியர்,
மொழித்துறை, சப்ரகமுவப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவின் பெருவனப்பாம் கந்தன் தேர் காண்பார் கவலைகள் போமே!

■ கந்த தியாகராசா

**தெய்வீகக் கோயில்**

தெள்ளு தமிழ் மண்ணில் தெய்வீகக் கோயில் கொண்டவன் முருகன். எம்பெருமான் முருகன் எல்லோருக்கும் உரியன், எந்நாட்டவர்க்கும் இறைவன். முருகன் அழகை "கைபுனைந்தியற்றா கவின் பெருவனப்பு" என்பார் நக்கீரர். "பவளக் கொடி நிறம் கொள்ளும் உருவும் உருவத் தீயொத்தி முகனும் விரிகதிர் முற்றா விரிசுடரொத்தி" எனப் பரிபாடலும் பகரும். "தாமரை புரையும் காமர் சேவடி பவளத்தன்ன மேனி திகழொளி" எனக் குறுந்தொகையும் கூறும். "ஏர்க்குறு ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம் ஆர்க்குளவுல கிலம்மா அற்புதத்தோடும் பல்காற் பார்க்கினும் தெவிட்டவில்லை" எனக் கந்தபுராணம் போற் றும் வானவர்க்கும் மேலான மெய்ஞ்ஞான தெய்வத்தின் அழகுத் திருவுருவைக் கண்டு கைதொழ நாலாயிரம் கண் வேண்டி நின்றவர் அருணகிரி. வியத்தகு பேரழகு கொண்ட பெருமானின் "பன்னிருகையும் பால்பட இயற்றி" எவ்வுயிர்க்கும் அன்னை தந்தையாய் ஆதரித்தருளும் அற்புதன். வேண்டுநர் வேண்டியாங்கு எய்திட அருள்பாலிக்கும் ஆறுமுகன். எம்மிறைவன் பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வள னும் சுரந்தோடும் நல்லை மாநகரில் தேரும் முரசும் கரியும் பரியும் வாளும் வேலும் அணி யாய் இலங்க, கோன் முறைஅரசு செய்த கொற்றம் இருந்த நல்லையில் பிறவா யாக்கைப் பெரியோன் செய் புண்ணியத்தால் உருவான அறுமுகச் செவ்வேளின் அணி திகழ் கோயில் அருள் வீச்சு மிக்கதாய் பக்தர் ஈர்ப்புச்சக்தி கொண்டதாய் வடபுலத்தில் வர லாற்றுச் சிறப்பைச் செப்பி திவ்விய தலமாய்த் திகழ்கின்றது. இத்திருக்கோயில் கிழக்கு வாசல் கோபுரத்தில் துலங்கும் "ஓம் முருகா" என்னும் திருநாமம் வருவோரை வசீகரிக்கும் வரவேற்கும். ஒளிரும் வேற்படையோ வள்ளல் குமரன் புகழ் பேசும் கசிந்துருகி கைதொழவைக்கும் வடிவாய் அமைந்த மணிக் கோபுரங்கள் ஐந்தும் எழிலூட்டும் இராஜகோபுரங்கள் நான்கும் கந்தனுறை கோயில் கவினுறு கோலத்தை கட்டியங் கூறும் நெடிதுயர் மதிற்சுவரும் போதமூட்டும் பெருவீதியும் காணும் இடம் எங்கணும் கந்தமயமாய் காட்சி தரும் அலங்கார மண்டபங்களும் நீர்ச்சுனையும் பூம்பொழிலும் ஞானத்தை பரப்பும் பக்தியை உயர்த்தும் புனித ஆலயத்தில் புண்ணியம் நிறைந்திருக்கும் சைவமும் தமிழும் நிலைத்திருக்கும். பார்ப்பனச் சிட்டர்களின் பௌவியத்தை இங்கு காணலாம். நித்திய பூசைகளின் போதும் அலங்கார சொரூபத்தில் தெய்வங்களின் அழகைப் பார்க்கலாம். காலம் தவறாத ஆறுகாலப் பூசைகளிலும் கருத்தைக் கவரும் பொலிவைக் காணலாம். எல்லோரும் இறை சந்நிதியில் நிறைமாந்தரே என நினைவூட்டும், ஒருரூபாய் பணத்துக்கு ஒப்பற்ற அருளை ஓயாது வழங்கும் ஞானக் குமரன் கருணைத் திறனையும் இங்கும் காணலாம். இத்திருத்தலத்தின் பெருங்கீர்த்தியால் தமிழ் கலாசாரம் வாழ்கிறது. பாரம்பரியம் பாதுகாக்கப்படுகின்றது.

**நல்லை நகர்ச்சிறப்பு**

மன்னர் ஆண்ட மாண்பினை உடையது நல்லை மாநகர். கொற்றம் இருந்தது. கொஞ்சு தமிழ்க் கொடி பறந்தது. வண்ணமும் சுண்ணமும் தண் நறுஞ்சாந்தமும் பூவும் புகையும் மேவிய விரையும் பகர்வளர் மாளிகைகள் நிறைந்த கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும் பீடிகைத் தெருவும் பெருங்குடி வணிகரோடு மறையோரும் வாழ்ந்த வீதிகள் பெயர் விளங்கத் துலங்கின. வீழ்குடி உழவர் வாழ்ந்தனர், ஆயுள் வேதரும் காலக் கணிகரும் நிறைமொழி மாந்தரும் நிறையவே வாழ்ந்தனர். கடும் பரி கடவுநர் களிற்றின் பாகர் நெடுந்தேர் ஊருநர் கடுங்கண் மறவர் பீடு கெடு சிறப்பின் பெரியோர் வாழ்கின்ற பெருந்தெருக்களும் பழுது இல் செய்வினைப்பார் கெழுமாக்களும் குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும் வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும் அரும் பெறல் மரபினர் சிறு குறுங்கை விலைப்பிறர் வினையாளரொடு மறுவின்றி விளங்கும் நல்லை மாநகரில் பல்தொழில் புரிவாரும், ஏவலர் பலரும் வாழ பீடுடைய நன்நகரில் வேல்கை கொண்ட மறவர் கூட்டம் என்றும் நம்புவதற்கு உரியர். தம் இன்னுயிர் ஈய்ந்தும் கொடியினைக் காத்தனர். மண்ணையும் காத்தனர். மக்களையும் காத்தனர். வளம் கொழிக்கும் வளநன் நாட்டில் வீரமும் விளைந்து நின்றது வித்தையும் ஓங்கி வளர்ந்தது. தமிழ்க்குடிகளின் பாரம்பரியத்தைச் சீர்தூக்கும் செஞ்சுடர் வேல் கைக் கொண்ட செந்தமிழ்ச் செல்வனாம் கந்தவேளின் கோயில் முத்தெனத்திகழ்ந்தது. சட்டநாதர் சிவன், வீரமாகாளியம்மன் வெயிலுகந்த பிள்ளையார், அம்மை அப்பனோடு பிள்ளையாரும் உறை கைலாசநாதர் தலங்காவற் பிள்ளையார் முத்துமாரியம்மன் சிவன் எனும் தெய்வங்கள் காவல் தெய்வங்களாயின. தமிழ்க் குடிகளின் பண்பாட்டுத் தலமாக விளங்கியதோடு சைவப் பெருமக்களின் சமய ஆசாரத்தை வளர்த்தது. பக்தி பெருக்கெடுக்க சிவபூமியெனப் போற்றப்படும் ஈழ நன்நாட்டில் கந்தபுராண கலாசாரம் மேன்மை பெற்றது. நல்லூர் இராஜதானியும் கந்தவேளின் கடாட்சமும் தமிழர்க்குப் பெருமையைச் சேர்த்தது. அன்றும் இன்றும் என்றும் சரித்திரம் படைத்து நிற்கும் ஸ்ரீ கந்த சுவாமி திருக்கோயில் எல்லா ஆலயங்களுக்கும் சகல துறைகளிலும் வழிகாட்டியாகத் திகழ்கின்றது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

> நல்லைக் கந்தன்
> மகோற்சவப் பெருவிழா
> தமிழ்க்குடிகளின் திருவிழா.
> இருபத்து ஆறு தினங்களும் விழாக்
> கோலம் பூண்டு புதுப் பொலிவோடு திகழ்
> வதால் இந்திர விழாவுக்கு ஒப்பானது.
> பக்தியோடு கூடிய ஆனந்தம் எவர் மனத்தி
> லும் குடிகொள்ளும். திருக்கோயிலை
> அண்மித்த பகுதிகள் மட்டுமன்றி பிற
> ஊர்களில் உள்ளாரும் புலம் பெயர்ந்து
> வாழும் முருக பக்தர்களும்
> தூய்மைகாப்பர் நோன்பு
> அனுஷ்டிப்பர்.

**ஞானியர் கண்ட நல்லூரான்**


குழவித் திங்களணி ஈசனார் அருளிய குழந்தை முருகன் பேசுதற்கரிய ஞானப்பழம். ஞான வேலேந்தி ஞானத்திருவுருவான மறைஞானப் பிள்ளை உறை திருத்தலத்தில் ஞானச்சுடர் வியாபித்து நிற்கும் கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற சித்தர்கள் மட்டுமல்ல இன்னும் பல அருளாளர்கள் பாதம் பதித்து நல்லை வேலைத்தரிசித்து நற்கதி எய்தியவர்கள். சித்தர்கள் சுவடுபட்ட புண்ணிய திருக்கோயிலின் திருவீதியும் புனிதமானது. அதனால் தான் "கருத்தில் நினைந்துருகி கை கூப்பும் தொண்டர் வருத்தமெல்லாம் தீர்க்கும் வடிவேலன்" எனப்போற்றிய தவயோக சுவாமிகள் "திருவீதியெங்கணும் சிவலிங்கம் காட்சி தருகிறதே" எனவுணர்ந்து பேரானந்தத்தில் மூழ்கி உன்மத்தராகி நின்ற சுவாமிகள் திருவீதி மண்ணின் மகிமையை எல்லோரும் அறியும் வண்ணம் சொல்லிவைத்தார். "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என அப்பர் சுவாமிகள் கையிலைவாசனின் கைலைக் காட்சியைக் கண்டானந்தம் கொண்டதற்கு ஒப்பானதே சிவலிங்கத்தைக் கண்ணுற்ற ஞானியின் மெய்ஞானத் தெளிவும் அன்னாரின் மேன்மையும் புலனாகின்றது.

"வண்டு பண்செய்யும் வளம் பெருக நல்லூரில் மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் கொண்டு வரும் கருணாமூர்த்தி தன்னையறிய தவம் இயற்றும் மாதவரை அன்னையைப்போல ஆதரிக்கும் ஆறுமுகன்" என யோகர் சுவாமிகள் புகழ்ந்தேத்த இறுதியும் முதலும் இன்றி "குரை கடலுலகம் திக்கு மாறிலாப் புவனமண்டபம் வானவர் உயிர்கள் யாவும்" தன்னகத்தே கொண்ட வள்ளல் பிரானின் பெருமையை கொற்றமிழும் ஞானமும் அளிப்பவன் என்பதனை

"ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு நீத்தார்
ஞானம் பற்றிய குருபர யாப்பாராயுஞ் கொற்றமிழ் அருள் முருகோனே ஏற்போர் தாம் வந்து
இச்சையின் மகிழ்வொடு வாய்ப்பாய் வாழும் பொற்பரை நெடுமதில்
யாழ்ப்பாணாயன் பட்டின மருவிய பெருமாளே"

என முருகன் புகழ் பாடிய அருண கிரியாரும் நல்லூரான்

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

## மீனம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப் பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

### 2-8-2016 முதல் 1-9-2017 வரை
### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி வரை



ஏழாமிடத்தில் குருபகவான்! எதிலும் இனிமேல் முழுவெற்றி!

சமுதாயத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதிக்கும் மீன ராசி அன்பர்களே! கிரகங்களின் பூரணமான சுபத்தன்மையை கொண்டிருக்கும் குருபகவானை ராசிநாதனாகப் பெற்றவர்கள் நீங்கள். எனவே இயல்பாகவே உங்களிடம் ஒரு தெய்வீக அம்சம் குடிகொண்டிருக்கும். நேருக்கு நேர் நின்று நீங்கள் பேசினால் யாருக்கும் ஓர் அன்பு பிறக்கும்

ஆன்மிக ஈடுபாடு உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். ஆசாமிகளை விட சாமிகளை நம்புவது மேல் என்று சொல்வீர்கள். நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். தற்சமயம் பெயர்ச்சியாகப் போகும் குருபகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியை நேரடியாகப் பார்க்கப் போகிறார். இதனால் உங்களுக்கு கோடி நன்மை கிடைக்கப் போகிறது.

ஆறில் ராகு நின்று, குரு கேந்திரத்தில் இருந்தால் அஷ்டலட்சுமி யோகம் செயல்படும். அந்த அமைப்பு கோச்சாரத்தில் தற்சமயம் உங்களுக்கு உருவாகி இருக்கிறது. எட்டு லட்சுமிகளும் இந்த நேரத்தில் இல்லத்தில் வாசம் செய்து கொட்டும் பணமழையில் நனைய வேண்டுமானால் ராகுவையும், குருவையும் குருப்பெயர்ச்சியானதும் ஓரிரு மாதங்களுக்குள் கொண்டாடி மகிழ வேண்டும்.

**வந்து விட்டது குருப்பெயர்ச்சி!**

**ஆடி 18 முதல் (2.8.2016) தேடி வரப்போகிறது யோகம்!. கூடி வரப் போகின்றது லாபம்! நாடிவரப் போகின்றது நல்லவர்களின் நட்பு! ஓடி ஒளியப்** போகின்றது துரத்தி வந்த துயரங்கள். சப்தம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கப் போகும் குரு அற்புதமான பலன்களை அள்ளி வழங்கும் என்பதால் தாமதங்கள் அகலும். பெயர்ச்சியாகும் குரு 7 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். களத்திர ஸ்தானம் புனிதமடைவதால் இதுவரை வந்த வரன்களைவிட இனிவரும் வரன்கள் சிறப்பானதாகவும், மனதிற்கு பிடித்தமாகவும் இருக்கும். இதுவரை உங்களை உதா சீனப்படுத்திய உறவினர்கள் உங்களைத் தேடி வருவர். பூமி வாங்குவீர்கள், புதிய வீடு வாங்குவீர்கள். பொன், பொருள் வாங்குவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருள்களை விருப்பம் போல் வாங்கிச் சேமிப்பீர்கள். கடல் தாண்டும் முயற்சி கைகூடும். மடல் மூலம் மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். மருத்துவம் பார்த்தும் சரியில்லாமல் இருந்த உடல் நலம், இப்போது மருத்துவம் இன்றி, உணவு கட்டுப்பாட்டிலேயே சீராகும்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**

நவக்கிரகங்களில் நல்ல கிரகம் என்றும், பார்வையால் பலன்களை அள்ளி வழங்கும் கிரகம் என்றும் சொல்லப்படும் குருபகவான், ஏழாமிடத்தில் இருந்து கொண்டு 1,3,11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே உங்கள் ராசி மற்றும் சகோதர, சகாய ஸ்தானம், லாப ஸ்தானம் ஆகிய மூன்று இடங்களும் புனிதமடைகிறது. குருவின் பார்வை பதியும் இடங்களெல்லாம் நன்மையை வழங்கும். **அச்சம் இல்லாத வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பது, குருவின் பார்வை ஒன்றுதான்.**

*(தொடரும்)*

# கவின்பெருவனப்பாம் கந்தன் தேர் காண்பார் கவலைகள் போமே!

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருங்கருணைத் திறனை திருப்புகழில் போற்றியவர் "நினைத்த காரிமனுக் கூலமேபுரி பெருமாளே" எனவும் வேண்டி நின்றார்.

**தங்கரத பவனி**

நல்லைக் கந்தன் மகோற்சவப் பெருவிழா தமிழ்க்குடிகளின் திருவிழா. இருபத்து ஆறு தினங்களும் விழாக் கோலம் பூண்டு புதுப்பொலிவோடு திகழ்வதால் இந்திர விழாவுக்கு ஒப்பானது. பக்தியோடுகூடிய ஆனந்தம் எவர் மனதிலும் குடிகொள்ளும். திருக்கோயிலை அண்மித்த பகுதிகள் மட்டுமன்றி பிறஊர்களில் உள்ளாரும் புலம் பெயர்ந்து வாழும் முருக பக்தர்களும் தூய்மைகாப்பர், நோன்பு அனுஷ்டிப்பர். வீதிகள் தோறும் பந்தல்கள் தாகசாந்தி நிலையங்கள் மலிந்திருக்கும். எங்கும் தூய்மை எங்கும் புனிதம் "நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடிமையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்" எனும் ஸ்ரீ ஆண்டாளின் அருள்வாக்குக்கு ஒப்ப மங்கையர்களும் வைராக்கியமான பக்தி கொண்டு முருகனை வழிபடுவர். எம்மையெல்லாம் காத்தருள வேண்டி ஆதி சிவன் முப்புரம் எரிசெய்ய தேரில் ஆரோகணித்து சென்றமையைப் போல எங்கள் குல தெய்வம் தேரில் இவர்ந்து வருகின்றான். வினையறுக்க வீதியில் வருகின்றான்.

**விண்ணவரும் போற்றும் முருகன்**

குமரக் கடவுள் தங்கத் தேரில் ஆரோகணித்து தேவியர் இருவருடன் எழுந்தருளும் பொன்னாளில் பெருமானைத் தரிசிக்க வெள்ளமென மக்கள் திரள்வர். பார்க்கும் இடமெங்கும் மெய்யடியார் கூட்டம். விரிகதிர் முற்றா சுடர் பரப்பி கதிரவன் புலரும் பொழுதில் வசந்த மண்டபத்தில் இடம்பெறுகின்ற பூசை சொல்லுதற்கரியது. பஞ்ச மணிகளும் ஒலிக்க மங்கல வாத்தியம் முழங்க ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்யோயாதம், அஜோய முகம் எனும் ஆறுதிருவதனங்ளுக்கும் அந்தண சிவாச்சாரியர்கள் நிறைவேற்றும் சண்முகார்ச்சனை தேவலோகத்துக்கு இணையானது. இத்திருக் கோலக்காட்சி கண்ணுக்கினியது, கருத்தை கவர்வது உள்ளத்தை ஈர்ப்பது. எங்கும் பேரமைதி. எங்கும் பக்தி. அவ்வரிய காட்சியைக் காண்பார் தரிசிப்பார் புண்ணியவான்களே.

தங்க அணிகலன்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்ட ஆறுமுகனின் திருவுருபேரொளி பிரகாசிக்கும் பேரழகு மிளிரும் அருள் வீச்சு விரியும் காலைத் தென்றல் வீசிவர காலைக் கதிரோனின் இளங்கதிர்கள் பரவி வர இதமான பொழுதில் சண்முகப் பெருமான் மங்கையர் இருவரொடு கொள்ளை அழகான தங்கத் தேரில் எழுந்தருளும் காட்சியைக்கண்டு ஆனந்தம் கொண்டு கைகூப்பி மனமொன்றி வழிபடுவர். மணியின் ஒலியும் மந்திரவொலியும் நாதஸ்வர ஓசையும் தவிலின் முழக்கமும் அரோகரா கோஷமும் பஜனைப் பாடல்களும் பக்தி வெள்ளத்துள் பக்தர்களை மூழ்கவைக்கும். பரவசத்தையூட்டும். அங்கப்பிரதிஷ்டை செய்வோர் அளவிலர். அடியழித்து வழிடுவோர் அனேகர். கற்பூரச்சட்டியேந்தி நேர்த்திக் கடனை நிறைவு செய்வோர், கணக்கிலர். அழகு ரதத்தில் ஆரோகணித்து அடியவருக்கு நிறை அருளை ஈந்து வரும் அழகன் ஆறுமுகனைக் கண்டு கண்கள் குளமாக வஞ்சனை செய்யும் புலன்களையொடுக்கி விலங்கு மனத்தை விலக்கி கைதொழுது நிற்பார்க்கு ஆத்ம சக்தியுந்தும், நல்லுணர்ச்சி ஊற்றுறெடுக்கும். சினம் கொண்டு நின்றமர் செய்த சூரபன்மனுக்கு திருப்பெருவடிவும் காட்டி நல்லுணர்ச்சியையும் ஊட்டி அவனது அகந்தையைப் போக்கி போதத்தைப் புகுத்தி நின்ற வேலவனை சூழுதல் வேண்டும்.தாள்கள் தொழுதிடல் வேண்டும். "அங்கை தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும். தாலு ஆழுதல் வேண்டும்" எனத் தன்னிலை மறந்து தன்னாமம் மறந்து நிற்க வைத்த முருகனுக்கு தன்னைச் சூழ்ந்து வைத்த கண் வாங்காது பார்த்து பணிந்துருகும் பக்த கோடிகளுக்கு நல்லுணர்ச்சியை புகுத்துவது அரிதல்ல. அவன் அருள் மழையில் நனைந்து அழுதால் உன்தலை நிச்சயம் [illegible] வேண்ட முழுவதும் தருபவனும் நீயே. நானும் பொய் என் நெஞ்சும் பொய் முருகாவென என உணர்கின்றேன். நீர்க்கோல வாழ்வு என்றும் யாக்கை நிலையற்றதென்றும் காதற்ற ஊசியும் கடைவழிக்கு வருவதில்லை எனவோதியவன் நீயே அன்றோ கந்தா நின்னை அறிய வல்லார் யாருளர்.

**வேலுண்டு வினையில்லை**

வாசநறு மென் கனியும் ஒரு கனியோ மதுர மொழி வாயாற் பேசவரிய மறைஞானப் பிள்ளையப்பா நீ நீயே ஞானப்பழம் உனக்கு ஒரு பழம் வேண்டுமா. இல்லை வேயில்லை மாங்கனி வந்ததும் தந்ததும் தத்துவமேயன்றி வேறில்லை.நிலவுலகில் எதுவுமே நிலையற்றது என்பதனை எடுத்தோதவன்றோ நீ ஆண்டியானாய் புண்ணியா நின் விளையாட்டால் பழனி எனும் ஊர் கொண்டாய், பார் மெச்சும் புகழ் கொண்டாய், நீ செய்த நற்காரியம் சொல்லி வைத்த என் உபதேசம் இப்போது நெஞ்சில் பதிகிறது. மீண்டும் மீண்டும் தவறிழைத்து வாழப் பழகிக் கொண்ட பாவிகளால் ஓலையும் தூதரும் வரும் போது ஓலமிட்டு என்ன பலன். வாட்டும் துன்பங்களில் இருந்து விடுபட வழி தெரிகிறது. தவறுகள் புரிகிறது அப்பனுக்கே பாடம் சொன்ன சண்முகன் அல்லவோ.

"சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனைச் சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்" எனப்படுதுயரில் இருந்து விடுபட அருணகிரியார் சொல்லி வைத்த நன்னெறியைப் பற்றி நின்றால் தீங்கேது துயரேது. நல்வழி கண்டு கொண்டோம். நின்கழல் சரண் புகுந்தோம். இனிக்காப்பதும் கரையேற்றுவதும் நின் கடனே கந்தா. தேரில் இவர்ந்து வரும் தமிழ்த் தெய்வமே ஈசன் சேயே விடியும் பொழுதில் நின்திருகோடி நாடி வெள்ளமெனத்திரண்டு நிற்கும் பக்தர்களுக்கு நல்ல வரத்தை ஈய்ந்துவிடு. வைதாரையும் வாழவைக்கும். வள்ளலே வானம் பொய்யாது ஒழுகட்டும். வளம் செழிக் கட்டும் கோன் முறையரசு நிலைக்கட்டும் எவ்வுயிரும் குறை ஏதும் இன்றி வாழட்டும். நான்மறை வளரட்டும் அறங்கள் ஓங்கட்டும்; நிறைமொழி மாந்தார் நிறையட்டும் மேலான சைவ நீதி தேசமெல்லாம் பரவட்டும்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம் காட்டும் உண்மைகள்



சி.ப.பரமேஸ்வரி

பருத்தித்துறை யூராம் பவளக்கொடி பேராம்
பாவைதனை ஒப்பாள் பாலெடுத்து விற்பாள்
பையப்பைய நடந்து பால்குடமும் சுமந்து
சந்தைக்குப் போகும்போது தான் நினைப்பாள் மாது

என்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடலைப் பாடியபடி மேடைக்கு வருகிறாள் ஒரு பெண். பாடலில் கூறப்படுவது போன்று அவளின் கற்பனை பேராசைகளால் விரிகிறது. அவளின் மனநிலையைப் புரிந்துகொண்டு அவளை நோக்கிய படையெடுப்புத் தொடங்குகிறது. லீசிங்காரர்களும் வட்டிக்குக் கடன் கொடுக்கும் நிதி நிறுவனங்களும். மெல்ல மெல்ல அவளுக்கு தங்களது வார்த்தை ஜாலங்களைப் பொழிந்து ஒருவாறு அவளைத் தம்முடைய வலைக்குள் வீழ்த்தி விடுகிறார்கள். தன்னுடைய சிறிய முருங்கைத் தோட்டத்தை நம்பி தன்னுடைய பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கும் கணவனையும் சம்மதிக்க வைத்து லீசிங்கில் வாகனம் ஒன்றை வாங்கிக்கொள்ள வைக்கிறாள். அன்று முதல் அவளது குடும்பத்தில் தொடங்குகிறது புதிய புதிய பிரச்சினைகள்.

வாகனத்தை முற்றத்தில் நிறுத்துவதற்காக பயன்தரும் முருங்கை மரத்தை வெட்டுவதும் முற்பணம் கட்டுவதற்காக தாலிக்கொடியை அடகு வைப்பதும், வீட்டு வாசலில் லீசிங்கில் வாகனத்தைக் கொடுத்தவர்கள் வந்து நின்று ஏசுவதும், தவணைப் பணத்தை கட்டுவதற்காக நிறுவனத்தின் ஒரு சில ஊழியர்களின் வரம்பு மீறிய செயற்பாடுகளும் என ஒவ்வொரு பிரச்சினைகளும் கிளைவிட்டு முளைக்கத் தொடங்குகின்றன.

இறுதியில் தவணைப் பணம் ஒழுங்காகக் கட்டப்படவில்லை என்பதைக் காரணம் காட்டி வாகனத்தை பறித்துச் சென்றபின், பணமிழந்து, பொருளிழந்து, மானமிழந்து குடும்பம் தவறான முடிவை எடுக்குமளவில் வந்து நிற்கும் நிலை தோன்றுகிறது.

இந்தக்கதை மேடையில் ஆற்றுகை செய்யப்படும் போது, பார்வையாளர்கள் நகைச்சுவையான காட்சிகளுக்குள் தம்மை மறந்து சிரித்தாலும் ஏதோ ஓர் குற்றவுணர்வும் பயமும் அவர்களின் அடிமனதில் தோன்றுகின்றது. இன்றைய எமது வாழ்க்கைமுறையில் கடன் என்பது ஏதாவதொரு வடிவத்தில் ஒவ்வொருவரையும் இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறது என்பதை எவருமே மறுத்துவிடமுடியாது. இதற்கு அடிப்படைக் காரணம் எல்லோரது வாழ்க்கை வடிவங்களும் தேவைகளும் மாறிவிட்டதும் - கூடிவிட்டதும் என்றே கூறலாம். விலையுர்ந்த தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள், வாகனங்கள் எல்லாமே தேவைகள் என்பதற்கு அப்பால் அடுத்தவர் மதிப்பதற்கான அளவுகோல்களாகிவிட்டன. அவை இன்றைய எமது வாழ்வியலின் புதிய கறைகளாகிவிட்டன.



செயற்றிறன் அரங்க இயக்கத்தினரின் நல்லூர் நாடகத் திருவிழாவில் மேடையேற்றப்பட்ட 'இரகசியப் படுகொலைகள்' நாடகத்தில் இந்தக் கருவே ஆற்றுகை செய்யப்படது.

இலங்கையில் போர் ஓய்ந்து அமைதி திரும்பியிருக்கும் இன்றைய காலத்தில் சத்தமின்றி, குருதியின்றி, இரகசியமாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இவைபோன்ற போர்களால் பல 'இரகசியப் படுகொலை'கள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. 2009 ஆம் ஆண்டு அமைதி திரும்பியதாகச் சொல்லப்பட்ட பின்னர், போர் நடந்த பிரதேசம் எங்கும் முதலில் படையெடுத்தவர்கள் சுற்றுலாப் பயணிகளும் லீசிங் நிறுவணங்களும் – நிதிநிறுவணங்களுமே. எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையோடு நின்றவர்களுக்குத் தாங்கள் அபயம் வழங்கும் ஆபத்பாந்தவர்கள் போன்று நாடகமாடி அவர்களிடமிருந்த மிச்சம் மீதிகளையும் சுருட்டிக்கொண்டு போகும் திட்டமிட்ட செயல்களே அதிகம் அரங்கேற்றபட்டன.



பற்றிக்கொள்ள ஒரு கொழுகொம்பு கிடைக்காதா எனும் தவிப்போடு இருந்தவர்களுக்குக் கைகொடுப்பதுபோல் பாசாங்கு காட்டி கடைசியில் கையறு நிலைக்குள் தள்ளிவிடும் செயலை ஒரு கூட்டம் மிகக் கவனமாக முன்னெடுத்து வருவதை எவருமே அறியவுமில்லை; அதை உணர்ந்து விழிப்படைய விரும்பவுமில்லை. போலியான பளபளப்பான மாயத்தோற்றத்தையே எல்லோரும் விரும்புகிறார்கள்.

"தற்பொழுது நாட்டில் பொருளாதார நெருக்கடிகளாலும் நிதி நிறுவனங்களின் மோசடியான செயல்களாலும் ஏகப்பட்ட தற்கொலைகளும், விவாகரத்துக்களும், நாட்டைவிட்டுத் தப்பியோடுதல்களும், குடும்பப்பிரச்சினைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றை எங்களால் தடுக்கவோ இல்லாமல் செய்யவோ முடியாது. ஆனால் இதன் தாக்கங்களை விளைவுகளை மக்களுக்கு எடுத்துச்சொல்ல முடியும். அதிலிருந்து தப்பிக்கொள்வதற்கான விழிப்புணர்வைக் கொடுக்கமுடியும். அதனைச் செயற்றிறன் அரங்க இயக்கத்தினர் மிகப் பொறுப்புணர்வோடு செய்து வருகின்றார்கள். இப்படியான செயல்களால் எமது நாடகக் கலையும் மக்களுக்கான விழிப்புணர்வும் ஒருசேரச் சென்றடைகின்றன" என்றார் நாடகத் திருவிழாவில் கடந்த 21ஆம் திகதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் வி.பி. சிவநாதன்.

ஒரு காலத்தில் சிறுகச் சிறுகச் சேமித்துப் பெருக வாழ்ந்த எமது மக்களின் வாழ்க்கை முறை இப்பொழுது ஆசைகளால் நிரப்பப்பட்டு மற்றவர்களைப்போல் நாமும் வாழவேண்டும் எனும் வறட்டுச் சிந்தனைகளால் சின்னாபின்னமாகி உள்ளது. தேவைகளுக்கு அதிகமாக தேவைகளை வலிய உருவாக்கிக்கொண்டு புதிய புதிய பிரச்சினைகளுக்கு மத்தியில் கிடந்து உழல்கின்றனர்.

முன்பு எவரிடமும் ஒரு சின்ன உதவி பெறுவதற்கே கூச்சப்பட்டு தமது மதிப்புக்கு இழுக்கு என்று நெஞ்சு நிமிர்த்தி வாழ்ந்த இனம் இப்பொழுதெல்லாம் சலுகைகளுக்கும் உதவிகளுக்கும் எவரென்றாலும் கும்பிடுபோட முடியும் எனும் புதிய வாழ்முறைக்குப் பழகிவிட்டனர்.

இது ஓர் மோசடி, ஏமாற்று என்பதை புரிந்துகொள்ளாத மக்களையே இந்த நிறுவனங்கள் தமது இலக்காகக் கொண்டு இயங்கி வருகின்றன. இதன் விளைவுகளைப் புரிந்து கொள்ளும் அறிவார்ந்த தன்மைக்கு அவர்கள் தயார்ப்படும்வரைக்கும் இவர்களின் வேட்டை தொடர்ந்துகொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிபரமலிங்கம்

# ஆக்க இலக்கியமும் சிருஷ்டி இலக்கியமும்!

இலக்கியத்தைப் பல்வேறு வகைகளில் பகுத்து இனங் காணப்படுவதைக் காண்கின்றோம். இதிகாச, புராணது, சங்க இலக்கியங்கள் பழைமை வாய்ந்தவை. நவீன கலை, இலக்கியங்கள் என்பன காலத்தால் பிந்தியவையாக இருக்கின்றன. தமிழில் நவீன இலக்கியங்களை ஒரு நூறு ஆண்டுகளுக்கும் உட்பட்டனவாகவே கணிக்க முடியும் .

தமிழில் உரைநடை இலக்கியங்கள் பின்பாகவே வருகின்றன. கவிதை இலக்கியங்களும் நவீன கவிதையில் இல்லாமல் செய்யுள் நடையில் அமைந்ததாகவே பழந்தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டு இருந்தன.

நவீன படைப்புக்கள் எனப்படும் நாவல், சிறுகதை, நாடகம் என்பன ஆங்கில மொழி ஊடாகப் பிறபல மொழிகளில் இருந்து தமிழுக்கு அறிமுகமானதாக அறிகிறோம்.

**படைப்பிலக்கியக் கூறுகள்!**

அவற்றுள்ளும் பல்வேறு கூறுகள் அமைந்திருப்பதை நுகர்வின் மூலம் தெரிந்து கொண்டுள்ளோம். மிகச் சிறந்த இலக்கியமென நவீன விஞ்ஞான சோஷலிஸசப் படைப்புகளைக் கொள்ளலாம்.

அதற்கடுத்த தளத்தில் யதார்த்தவாதப் படைப்புக்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இவற்றுக்கு அப்பால் பொழுதுபோக்கு, நகைச்சுவை. அங்கதம் போன்ற படைப்புக்கள் காணப்படுகின்றன. மிக மட்டமான துப்பறியும், கற்பனாவாதப் படைப்புக்கள் இலக்கியக் குப்பைகள் என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், இலக்கியத்தில் முக்கிய அங்கமாக ஆக்க இலக்கியம், சிருஷ்டி இலக்கியம் என்னும் இருவேறு கூறுகள் இனங் காணப்பட்டுள்ளதையும் சுட்டலாம்.

ஆக்கம், சிருஷ்டி என்பவற்றில் அப்படி என்ன பெரிய வேறுபாடு உள்ளன வென்று மேலேழுந்த வாரியாகக் கருதி விடலாம். ஆக்கமும் சிருஷ்டியும் ஒன்று தானே எனவும் வினவலாம்.

அதற்கு மிக இலகுவான வாய்ப்பாடாக இப்படிக் குறிப்பிடுவர். ஆக்க இலக்கியம் என்பது இன்னொருவரால் சிருஷ்டிக்கப்பட்ட படைப்புகளை நூல்களாக, சஞ்சிகைகளாக வெளிக் கொணர்வது என்றும்–

சிருஷ்டி இலக்கியம் என்பது ஒரு படைப்பைச் சுயமாகச் சிருஷ்டித்து தருவதென்றும் இருவேறு இலக்கியங்களின் தன்மை, விருத்திகளையும் விவரிக்கப்படுவதை அறியலாம்.

ஆக்க இலக்கியங்கள் என்னும்போது நாடகம், திரைப்படம் போன்ற கலைத்துறைப் படைப்புகளையும் எடுத்துக் கொள்ளலாம். அதனாலே கலை, இலக்கியம் எனப்படுவதையும் சுட்டலாம். எனினும், சிருஷ்டி இலக்கியங்களில் ஆக்கத்தன்மையும் ஆக்க இலக்கியங்களிலே சிருஷ்டித் தன்மையும் இழையோடுவதை மிகத்தலை சிறந்த படைப்பாகக் கொள்ளமுடியும்.

எமது படைப்பாளிகள் மத்தியில் அத்தகையவர் களாக விரல் விட்டு எண்ணக் கூடியவர்களையே இனம் காணலாம். அவர்களில் கே.டானியல் மற்றும் டொமினிக் ஜீவா ஆகியோரை ஈழப் படைப்பாளிகளில் உடனடியாய் இனங்காணக் கூடியதாய் இருப்பதைக் கூறியே ஆக வேண்டும்.

இதனால்தானோ என்னவோ அமரர் கே.டானியல், "என்னுடைய படைப்புக்கள் ஒன்றும் எனக்குச் சொந்தமானவை அல்ல" என்பார். "மக்களிடம் கற்றதை மக்களிடமே அப்படியே திருப்பி வழங்குகிறேன். என்னுடைய பணியென்றால் அவற்றை ஒரு வடிவத்துள் வடித்துவிடுவதுதான்"–என்றார். அவருடைய படைப்பு ஆக்க இலக்கியக் கூறுக்குள் அடங்குவதைக் காணலாம்.

**கே.டானியல்-டொமினிக் ஜீவா**

அதேபோன்று மக்களிடம் இருந்து பெற்றதை அல்லது கற்றதை மக்களிடம் திருப்பி வழங்குவதில் அவர் கையாண்ட வடிவம் சிருஷ்டித் தன்மையைப் பெற்றுள்ளதையும் அவதானிக்கலாம்.

வெறுமனே ஒரு படைப்பு ஆக்கமாக அமைந்து மக்கள் மனங்களில் தைக்கும் அளவுக்குக் கொண்டு செல்லப்படாது விட்டால் தோல்வியைத் தழுவும் நிலைமையை அடையும்.

அவ்வாக்கம் ஒவ்வொரு பாத்திர வார்ப்புக்கள் மற்றும் சித்திரிக்கும் களவடிவம் என்பவற்றால் சிருஷ்டித்தன்மையைப் பெற்றுக்கொள்கையில் வெற்றிப் படைப்பாக அமைந்தும் விடுகின்றதை ஏற்றுக் கொள்கிறோம்.

ஆக்கம், சிருஷ்டிப்பு என்பவற்றின் நுணுக்கங்களைச் சரியாகக் கொண்டு செல்லும் படைப்பாளியும் படைப்புக்களும் உலகின் எந்த மூலையிலும் தோன்றினாலும், மக்களால் ஏற்றுப் போற்றுவதைக் காண்கிறோம்.

ஈழத்துப் படைப்பாளிகளில் அமரர் கே.டானியல் மற்றும் டொமினிக் ஜீவா இருவரையும் தவிர வேறு இன்னும் சிலரும் அடங்குவர். பிரபலம் பெற்ற எழுத்தாளர்கள் அனைவரும் ஆக்கத்திலும் சிருஷ்டியிலும் சமனான அளவுக்குத் துலங்கவில்லை என்பதும் கவலை தரும் விடயம்தான்.

இதுவரை ஈழத்தில் இலக்கியப் படைப்புக்களில் ஈடுபட்டவர்களாக ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளபோதும், திறமை வாய்ந்த சிருஷ்டியாளர்கள் என்று கைகளில் இருக்கும் விரல்களுக்குள் அடக்கிவிடக்கூடியதாகவே உள்ளதென்றால் படைப்பிலக்கியத் துறையில் ஈடுபட்டவர்களின் போதாமையே பெரிதாகத் தோன்றுகிறது.

**"அம்பக்" இலக்கியம்**

ஆயினும் விமர்சனத்துறையில் ஈடுபட்டுள்ள ஒருசிலர் இல்லாத ஒன்றை இருக்கிறது எனக்கூறும் நடுநிலையற்ற பார்வைகளால் சிலரைத் தூக்கலாகச் சொல்வதனால் தரமற்ற படைப்புகள் கூட அற்புதமென போலியாய்ப் போற்றப்படுகின்ற அம்பக் இலக்கியம் ஈழத்தில் அபரிமிதமாகக் காணப்படுகின்றன.

நான்குபேர் கூறினால் பரத்தையைக் கூடப் பத்தினியாக்கி விடலாம். அதையே மறுவளமாகப் போட்டுப் பார்க்கும் நிலைமை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில்; பயிருடன் கூடிய பதர்களைப் போன்று மலிந்து விட்டதால் ஈழத் தமிழ் இலக்கியம் ஆரோக்கியத்துடன் வளர்வதை தடுத்து நிறுத்தியுள்ளதெனலாம்.

அறுபதுகளில் நல்ல வளர்ச்சி நிலையில் இருந்த ஈழப்படைப்பு உலகம் பின்நோக்கிப் போய்விட்டதை இந்தக் கால கட்டத்தில் பரக்கக் காணவும் முடிகிறது. இதற்கெல்லாம் நல்லிலக்கியங்களை உரியமுறையில் கைகொடுத்துத் தூக்கி விடாத விமர்சனங்களும், விமர்சகர்களும் பொறுப்புக் கூறவேண்டும்.

ஈழத்துப்படைப்புலகில் ஆக்க இலக்கியம் மற்றும் சிருஷ்டி இலக்கியம் வளர்ந்துள்ளதைப் பார்க்கிலும், விமர்சனத்துறை வளர்ந்துள்ளதை அதானிக்கலாம். ஆரம்பத்தில் சிருஷ்டித்துறையில் கால்வைத்தோர் காலப்போக்கில் மெதுமெதுவாய் விமர்சனத்துள் நுழைந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஒன்றுக்கும் மேற்பட்டோரென்றால் ஐம்பது, நூறு பேர்வரை சேர்ந்து உருவாக்கும் படைப்பை ஆக்க இலக்கியம் எனப்படுகையில் நாடகங்கள் திரைப்படங்களைக்கூட ஆக்க இலக்கியத்துள் செலுத்த முடியும் என்பதால், மனித வாழ் வியலை இலக்குவைத்து உருவாகும் கலை இலக்கியங்கள் உள்வாங்கப்படுவதும் தவறேதுமில்லை.

**தமிழகமும், ஈழமும்!**

ஈழத்தைப் பொறுத்தமட்டில், ஆக்க இலக்கியம் தோன்றிய அளவுக்கு, சிருஷ்டி இலக்கியம் படைக்கப்படவில்லை. அதேவேளை தமிழிலக்கியத்தின் ஆரம்ப வேரைக்கொண்ட தமிழக இலக்கியப் பரப்பில் ஆக்க இலக்கியமும் சிருஷ்டி இலக்கியமும் நேர்கோட்டில் வளர்ந்துள்ளதையும்; வளர்ந்து கொண்டிருப்பதையும் மறுத்துவிட முடியாது.

சிறுகதை, நாவல், நாடகம், நடைச்சித்திரங்கள் போன்ற நவீன இலக்கியப் படைப்புகளில் பெரும்பாலானவை சிருஷ்டித் தன்மையற்ற ஆக்கங்களாகவே ஈழத்தமிழ் இலக்கியங்களில் தேறுவதைக் கண்டு கொள்ளலாம்.

> **ஈழத்தைப் பொறுத்த மட்டில் ஆக்க இலக்கியம் தோன்றிய அளவுக்கு, சிருஷ்டி இலக்கியம் படைக்கப்படவில்லை. அதேவேளை தமிழிலக்கியத்தின் ஆரம்ப வேரைக் கொண்ட தமிழக இலக்கியப் பரப்பில் ஆக்க இலக்கியமும் சிருஷ்டி இலக்கியமும் நேர்கோட்டில் வளர்ந்துள்ளதையும் வளர்ந்து கொண்டிருப்பதையும் மறுத்துவிட முடியாது.**

அறுபதுகளில் இலங்கையில் முதல் முதலாக சிருஷ்டி இலக்கிய நூல்களுக்கு இலங்கை அரசு சாகித்திய விருதுகள் வழங்கிக்கௌரவிக்க முன்வந்தது. அப்போது முதலில் தெரிவு செய்யப்பட்ட சிறுகதை நூல் டொமினிக் ஜீவாவின் "தண்ணீரும் கண்ணீரும்" என்பதாகும்.

அந்த மகுடத்தில் என்றில்லாமல் இன்னமும் பல்வேறு மகுடங்களில் பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் அந்த நூலில் அடங்கியுள்ளன. அத்தொகுதியில் இடம் பிடித்துள்ள பெரும்பாலான கதைகள் அசல் சிருஷ்டிகளாக அமைந்துள்ளதைத் தரிசிக்கலாம்.

அதேபோல கே.டானியலின் "பஞ்சமர்", ''டானியல் கதைகள்'', ''கானல்'', "கோவிந்தன்", "போராளிகள் காத்திருக்கின்றனர்", "அடிமைகள்", "தண்ணீர்" ஆகிய இன்னோரன்ன சிறுகதை மற்றும் நாவல்கள் அனைத்தும் அவரது ஆக்கமாய் விளைந்த சிருஷ்டிப் படைப்புகளாய் மிளிர்வதையும் வேறெந்தப் படைப்புகளும் மேலெழ முடியாமல் உள்ளதையும் காணமுடிகின்றது.

செ.கணேசலிங்கன், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன் ஆகியோரின் முதலெழுத்து ஒன்றாக இருப்பதால் சகோதரர் அல்லர். கனக செந்திநாதன், அ.செ.முருகானந்தன், இலங்கையர்க்கோன், வரதர், சொக்கன், துருவன், செம்பியன்செல்வன் "செங்கை ஆழியான், மா.பாலசிங்கம் ஆகியோருடன் புதியவர்களான தாட்சாயினி, ஜின்னாக் ரிபுதீன், சிவனு" மனோகரன், பதுளை சேனாதிராசா, சந்திரகாந்தா முருகானந்தன் ஆகிய இன்னும் சிலரது படைப்புக்களில் சிருஷ்டிப்பு கலைத்துவமாக அமைந்திருந்தமை அவதானிக்க முடிந்தது.

"ஜின்னாக், காப்பியக்கோ" எனப் புகழ் பெற்றபோதும், ஞானம் சஞ்சிகை 146 வது இதழ் எழுதிய "மங்கம்மா சபதம் சிறுகதை" சில வருடங்கள் ஓடிக் கழிந்தாலும் "பசுமரத்தாணியாய்" இன்றைக்கும் மனதில் நிற்க நேர்த்தி பிசகாமல் சிருஷ்டிக்கப்பட்டுள்ள படைப்பாய் கணிக்க முடிந்ததென் மிகைப்படுத்தப் பட்ட புகழ்ச்சியன்று.

அது போன்றே ஆக்கப்படுகின்ற இலக்கியங்கள் படைப்பாளிகளால் கஷ்டப் பட்டு உழைத்துச் சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்குமானால் நிச்சயம் தலை சிறந்த இலக்கியப் படைப்பாய் நுகர்வோரால் போற்றப்படும்.

அதேவேளை, பக்கச் சார்பான விமர்சனங்களால் நல்லிலக்கியங்கள் தோன்றி வளராமல் காயடிக்கப்படும் நிலைமையே முன்நிற்கும். ஆக்க இலக்கியம் எத்தகையது சிருஷ்டி இலக்கியம் எது என்பவற்றை இந்தச் சிறு கட்டுரை மூலமாய் பார்க்க முடிந்தமை ஈழத்துப் படைப்புலகில் சிறிதேனும் உணர்வுகளைக் கிளறி விட்டிருக்குமானால் பயனுள்ளதாக எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பூ கோலா உருண்டை



## செய்முறை

வாழைப்பூவை நரம்பு நீக்கி நறுக்கிக் கொள்ளவேண்டும். பொட்டுக்கடலையைத் தூளாக்கிக் கொள்ளவேண்டும். தேங்காய், சோம்பு, வெங்காயம், பூண்டு ஆகியவற்றை அரைத்துக்கொள்ள வேண்டும்.

வாழைப்பூவை அரைத்து சாறு பிழிந்துவிடவேண்டும். அரைத்தவற்றை எல்லாம் உப்புச்சேர்த்து, பிசைந்து உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் பொரித்து எடுக்க வேண்டும். வாழைப்பூ கோலா உருண்டை தயார்.

## தேவையான பொருள்கள்

வாழைப்பூ - ஒன்று
தேங்காய் - அரை மூடி
பொட்டுக்கடலை - 100 கிராம்
வெங்காயம் - 100 கிராம்
பூண்டு - 5 பல்
பெருஞ்சீரகம் - அரைத் தேக்கரண்டி
உப்பு - அரைத் தேக்கரண்டி
எண்ணெய் - 4 மேசைக்கரண்டி



## நேற்றைய கடலுணவு
### விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 600 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 250 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 800 | – |
| பாரை | 550 | 500 | 500 | 800 | 600 | 800 | 450 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 800 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 600 | – |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 600 | 650 |
| முரல் | 300 | 400 | 400 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | 800 | – |
| ஒரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | – | 150 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | 200 | 250 | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 200 | 200 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 300 | – | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | 300 | 400 | 600 | 150 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 40 | 250 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 100 | – |




அப்பிள் கட்டர் அறிமுகமாகியுள்ளது. அப் பிள் மாத்திரம் அல்லாமல், வத்தகைப்பழம், தோல் சீவிய அன்னாசி, பப்பாளிப் பழம் ஆகியவற்றையும் நொடியில் வெட்டிக் கொள்ள முடியும். இதன் மூலம் பழச்சாறு வீணாவது தடுப்பதுடன், சமனான துண்டுகளாக வெட்டிக் கொள்ளலாம். இது 250 ரூபா தொடக்கம் 350 ரூபா வரையில் விற்பனை செய்யப் படுகின்றது.



## நாளை

ஆவணி-16
வியாழக்கிழமை
-01.09.2016
திதி: அமாவாசை
பி.ப.03.06
நட்சத்திரம்: மகம்
பி.ப.12.14
ராகுகாலம்:
01.35-03.05 வரை
சுபநேரம்:07.35-09.05
வரை
அமாவாசை விரதம்

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | [illegible] | [illegible] | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 60 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 40 | 50 | 50 | 50 | 30–60 | 40 | 90 | 40 |
| கரட் | 80 | 120 | 160 | 120 | 100–120 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 60–70 | 60–80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 80 | 50 | 70 | 60 | 40–60 | 100 | 100 | 60 |
| பாகல் | 100 | 50 | 100 | 80 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 90 | – | 140 | 160 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 90–100 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 60 | 80 | 80 | 100 | 90 | 60 |
| பூசணி | 50 | 40 | 50 | 40 | 30 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 50 | 60 | 50 | 40 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 80 | 60 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 90 | 160 | 120 | 80 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 80 | 120 | 120 | 80–100 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 50 | 60 | 40–60 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 120 | 160 | 200 | 180 | 140 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 100 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 30–40 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 200 | 240 | 200 | 200 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 160 | 140 | 140 | 140 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 60 | 80 | 40 | 80 | 50 |



## உணவை ஆரோக்கியமாக எப்படி சாப்பிடலாம்?

- முளைவிட்ட தானியங்களுடன் பயறைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. இவை இரண்டிலும் புரோட்டீன் மிக அதிகமாக இருப்பதால், ஜீரணம் ஆக மிகவும் தாமதமாகும்.
- காய்கறிகளை ஒரு போதும் அதிகமான அளவு எண்ணெய் சேர்த்து வறுக்கக்கூடாது. காய்கறிகளில் தொடர்ச்சியாக ஏற்றப்படும் சூடு அவைகளில் இருக்கும் வைட்டமின், தாதுச்சத்துகளை போக்கிவிடும்.

தினமும் ஒவ்வொரு நேரமும் எவ்வளவு உணவு சாப்பிட வேண்டும் தெரியுமா?

- காலையில் பாதி வயிற்றுக்கு உணவும் அதாவது 50 சதவீதம், மதிய உணவு 30 சதவீதம், நான்கு மணிக்கு 10 சதவீதம், இரவில் 20 சதவீதம் என்ற அளவிற்கு உணவு உண்ணவேண்டும்.
- ஒரு சப்பாத்தி அல்லது ஓர் அகப்பை சாதம், பருப்பு, குழம்பு, காய்கறி போன்றவை மதிய உணவில் சேர்க்கப்படவேண்டும். இதிலிருந்து கார்போஹைட்ரேட், புரோட்டீன், வைட்டமின், கொழுப்பு, தாதுசத்துக்கள் போன்று உடலுக்கு தேவையான அனைத்தும் கிடைக்கின்றன.
- மதிய உணவிற்கும், இரவு உணவிற்கும் இடையில் 7-8 மணிநேரம் இடைவெளி இருந்தால் மாலை நேரத்தில் எலுமிச்சைச் சாறு, பழச்சாறு, வறுத்த வேர்க்கடலை, வறுத்த முந்திரிப் பருப்பு போன்றவைகளை சாப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி

தருபவர்: வித்யா



**மேடம்:** சுயநலத்துடன் பழகுபவர்களைத் தவிர்க்கவும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய மாற்றத்தில் ஈடுபடுவது நல்லது. வாகனப் பயணத்தில், மிதவேகத்தைப் பின்பற்றவும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** பேச்சில் உறுதி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். மேலதிக வருமானம் கிடைக்கும். தாயின் தேவைகளை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். அவப்பெயர் வராமல் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்:** தாமதமான பணி ஒன்று, எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை கொள்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் உள்ள குறைகளை, பிறரிடம் சொல்ல வேண்டாம். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரலாம். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**கன்னி:** பேச்சில் இனிமை மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பப் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு கிடைக்கும். மனைவியின் பாசம் கண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்:** முன்னேற்றத்திற்கான வாய்ப்புக் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்ல நேரிடும். வருமானம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் வளர்ச்சி கண்டு, சிலர் பொறாமை கொள்ளலாம். தொழிலில் விடாமுயற்சியால், ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**தனுசு:** செயலில் நிதானத்தைப் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை அதிகரிக்கலாம். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**மகரம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வியப்பூட்டும் விதத்தில் வருமானம் வரும். நிலுவைப் பணமும் வந்து சேரும். விலகிய உறவினர், சொந்தம் பாராட்டுவர்.

**கும்பம்:** நேர்மையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். இலாபம் அதிகரிக்கும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** எதிர்கால நலனில் கவனம் செலுத்துவது நல்லது. தொழிலில், குறையை சரி செய்வதால் வருமானம் சீராகும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மையளிக்கும்.



டாக்டர் அந்த ஆளு ஆபரேஷன் செய்யச் சொல்லி நாயா அலையறாரு, நீங்க என்னடான்னா எதுவும் பேசாமலயே இருக்கீங்களே?
ஆபரேஷன் செஞ்சா பேயா அலைவாரு பரவாயில்லியா?



அமீர் @ameerfaj
மூச்சு விட்ட இயந்திரத்தின் பாகங்களை ஒன்றாய் சேர்த்தான் பிணவறையில்.

7 3

# சூட்டிங்கை நிறுத்திய விஜய்



பரதன் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார் விஜய். இந்தப் படத்துக்கு 'தளபதி' என்று பெயர் வைக்கலாம் என முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதன் சூட்டிங் பொள்ளாச்சியில் உள்ள போக்குவரத்து நெரிசல் மிகுந்த ஒரு சாலையில் நடைபெற இருந்தது. விஜய் பட சூட்டிங் நடிப்பதை அறிந்த அவரது ரசிகர்கள் அங்கே ஆயிரக்கணக்கில் திரண்டுவிட்டனர். அப்போது கேரவனைவிட்டு வெளியே வந்த விஜய், கூட்டத்தைப் பார்த்து அதிர்ச்சியாகி விட்டாராம்.

"நிச்சயமாக இவ்வளவு கூட்டத்துக்கு நடுவே என்னால் நடிக்க முடியாது. சென்னையில் இதுபோன்று செட் போட்டு சூட்டிங் வைத்துக் கொள்ளலாம் என்று கூறி சூட்டிங்கை நிறுத்தி விட்டாராம். எனவே செப்ரெம்பர் 2 ஆம் திகதி இதன் தொடர்ச்சியான காட்சிகள் சென்னையில் படமாக்கப்பட உள்ளது" என சினிமா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



அடம் பிடிக்காமல் பள்ளிக்கூடம் போகனும் கண்ணா.

இவர்: அட்மிட் பண்ணும் போது டெலிவரி பீஸ் 500 ரூபா எண்டு சொன்னீங்க.. இப்போ 1000 ரூபாய் கேட்கிறீங்களே டாக்டர்...?
டாக்டர்: இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கே....!



புருசனைப் போட்டு மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சி மண்டயை உடைத்து விட்டு டாக்டர் கிட்ட ஊசி போடும் போது, "டாக்டர் பாத்துப் போடுங்க அவர் வலி தாங்க மாட்டார்"னு சொல்லுவா பாருங்க அவதான்யா பெண்டாட்டி



பஸ்ஸை விட்டு இறங்கியதும் ஆட்டோ வேணுமா எண்டு கேட்டார்.
ஆட்டோவை என்கிட்ட கொடுத்துவிட்டு சோத்துக்கு என்ன பண்ணுவீங்க எண்டு கேட்டன்.
முறைச்சிட்டு அசிங்கமா திட்டுறார்.
நான் அப்பிடி என்ன தப்பா கேட்டுட்டன்...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 7 | 9 | 6 | 8 | 3 | 2 | 5 |
| 2 | 6 | 8 | 3 | 5 | 4 | 7 | 1 | 9 |
| 3 | 5 | 9 | 7 | 2 | 1 | 6 | 4 | 8 |
| 1 | 7 | 6 | 2 | 3 | 9 | 5 | 8 | 4 |
| 9 | 2 | 3 | 8 | 4 | 5 | 1 | 6 | 7 |
| 8 | 4 | 5 | 6 | 1 | 7 | 2 | 9 | 3 |
| 7 | 8 | 1 | 5 | 9 | 2 | 4 | 3 | 6 |
| 6 | 9 | 2 | 4 | 7 | 3 | 8 | 5 | 1 |
| 5 | 3 | 4 | 1 | 8 | 6 | 9 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு....

கொஸ்டரிக்காவில் பன்னாட்டு காணாமற்போனோர் தினத்தைப் பிரகடனப் படுத்தியது. முதன்முதலாக லத்தின் அமெரிக்காவில் இரகசியமாகக் கைதுசெய்யப்பட்டு, காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் குறித்து எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இந்தத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இலங்கையிலும் காணாமற்போனவர்கள் தினம் நேற்று வடக்கு - கிழக்கு உட்படப் பல பகுதிகளில் எழுச்சியாகக் கடைப்பிடிக்கப் பட்டது.

இலங்கை இராணுவம் மற்றும் ஆயுதக்குழுக்களால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், உள்நாட்டுப் போரின்போது கையளிக்கப்பட்டு காணாமற்போனவர்களுக்கான தீர்வு இன்றுவரை கிடைக்கப்படாமையைக் கண்டித்தும், அவர்களை கண்டறிந்து தருமாறும் வலியுறுத்தியே நேற்றைய தினம் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன.

வடக்குப் பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும், கிழக்குப் பகுதியில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் காணாமற்போனோரின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளை முன்னெடுத்தன.

### யாழ்ப்பாணம்

காணாமற்போனோர் தொடர்பான அமைப்புக்களால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப் பட்ட பேரணி, கண்டி வீதியூடாக நல்லூரில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்தைச் சென்றடைந்தது. இந்தப் பேரணியில் ஈடுபட்டவர்கள் ஐ.நா. அலுவலகத்தில் மனுவொன்றையும் கையளித்தனர்.

இதன்போது தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற உண்மை கண்டறியப்படவேண்டும், வலிந்து காணாமற்போன எமது உறவுகள் எங்கே? வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டனர்? வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பன்னாட்டு நீதி முறையே அவசியம் என்பதை வலியுறுத்தி காணாமற்போனவர்களது உறவினர்கள் கோசங்களை எழுப்பினர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவினர்கள், சமூகவியலாளர்கள், பொது மக்கள் மற்றும் பொது அமைப்பினைச் சார்ந்த 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற்போனவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு-வட்டுவால் சந்தியிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி மாவட்ட செலகத்தைச் சென்றடைந்தது.

முல்லைத்தீவு மாவட்ட செலகம் முன்பாக ஒன்று கூடிய மக்கள், காணாமற்போன தங்கள் பிள்ளைகள், உறவினர்களுக்கான நீதியை வலியுறுத்தி ஆவேசத்துடன் கதறி அழுதனர். காணாமற்போனவர்கள் தொடர்பான தகவல்களை விரைவாக பெற்றுத் தரும்பபடி மாவட்ட நல்லிணக்க ஆணைக்குழுவிடமும் முல்லைத்தீவு மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெய்வேந்திரம் ரதீஸ்வரனிடம் கோரிக்கை மனுவையும் அவர்கள் கையளித்தனர்.

### வவுனியா

வவுனியா மாவட்டச் செயலகம் முனபாக நேற்றுக்காலை 10 மணியளவில் ஒன்று கூடிய காணாமற்போனவர்களுடைய உறவுகள், நிறுவனங்களைச் சார்ந்தோர், பொதுமக்கள், நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனை செயலணிக்கு ஒரு பகிரங்க சமர்ப்பித்தல், காணாமல் ஆக்கப்பட்டமைக்குப் பன்னாட்டு நீதியே தீர்வு என்ற விடயங்களை வலியுறுத்திப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் முடிவில் மனித உரிமை ஆணைக்குழுவினருக்குத் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்திய அறிக்கை ஒன்றையும் காணாமற்போனவர்களது உறவினர்கள் கையளித்தனர். 'இராணுவப் பிரசன்னமும் புலனாய்வுத் தரப்பும் சுதந்திரமாக இயங்கிக்கொண்டிருப்பதன் மூலம் பொதுமக்களின் உரிமைகள் இன்றுவரை அச்சுறுத்தலான தன்மைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? இலங்கையில் தற்போது சுயாதீன மனித உரிமைகள் ஆணையகம் அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. நீதித்துறை, பொலிஸ் ஆகியவற்றைச் சுயாதீனப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான அச்சுறுத்தல்கள் நிறைந்த சூழலில் சுயாதீனமும் நல்லிணக்கமும் கேள்விக்குறியாகியுள்ளன.

இலங்கையின் நிலைமாறு நீதி முன்னெடுப்புக்களில் ஐ.நா. இணைப்பங்காளியாக வேண்டும். இதன் மூலமே பன்னாட்டு நீதிப் பொறிமுறையின் கீழ் இந்த காணாமற்போன உறவுகளுக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்' என்ற மனுவை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர்கள் கையளித்தனர்.

### கிளிநொச்சி

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சார்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதன் போது தேசிய நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோனைகள் செயலணிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோனைகள் செயலணியால் 2016 ஓகஸ்ட் இல் முன்வைத்த இடைக்கால அறிக்கையில் பாதிக்கப்பட்டோரின் குரலையும் உள்ளடக்கி, அவர்களின் கோரிக்கைகளையும் உரிய முறையில் கவனத்தில் எடுத்து வெளிவந்தது. எமது துயரங்கள், இழப்புக்கள், மறுக்கப்பட்டுள்ள உரிமைகள், தொடர்ந்தும் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் என்பவற்றை உலகுக்கு எடுத்துரைக்கும் ஒரு பன்னாட்டு நியாயப் பத்திரிகையாகவே இந்த அறிக்கையை நாம் பார்க்கின்றோம் என அவர்கள் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டது.

### மன்னார்

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிளயவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் ஒன்று கூடிய காணாமற் போனோரின் உறவினர்கள் அமைதியான முறையில் கவன வீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

காணாமற்போன, கடத்தப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது மாவட்டத்தைச் சேர்ந்த காணாமற்போனவர்களுடைய உறவினர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். போராட்டத்தின் இறுதியில் காணாமற்போனோரின் உறவினர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரைத் தேசிய நல்லிணக்கப் பொறிமுறைக்கான வலய செயலணியின் செயலாளரிடம் கையளித்தனர்.

கிழக்கில் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள், படுகொலைகளுக்கும் வன் முறைகளுக்கும் உள்ளானோரின் குடும்பங்கள், கிராமியப் பெண்கள், கிராமிய சமூக அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் காணாமற்போனவர்களது உறவினர்கள், பொது அமைப்புக்கள் இணைந்து பேரணிகளை முன்னெடுத்தனர்.

(வ-21,106,101, 56,27,402)

---

## மரண அறிவித்தல்

### திருமதி புனிதவதி அன்னலிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி அன்னலிங்கம் 29.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் S.R.அன்னலிங்கத்தின் (பிரபல சுருட்டு வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் லலிதா (கொழும்பு), தற்பரன் ( S.R.A.கலக்சன் உரிமையாளர் யாழ்ப்பாணம்), லாவண்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் ரஞ்சித் (கொழும்பு), சுகந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் உமாசங்கரி, சிவசங்கரி, கரிகேஷன், விதுகேஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் கொக்குவில் மேற்கு ஆடியபாத வீதியில் உள்ள இல்லத்தில் இன்று (31.08.2016) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
S.R. அன்னலிங்கம்
குடும்பத்தினர்

**077 3305344, 021 222 5019**

---

### திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை



யாழ்.கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும்,லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை 24.08.2016 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - முத்தம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ் சென்றவர்களான பொன்னையா - தையல்முத்து தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், இராஜகுலேந்திரனின் பாசமிகு தாயாரும், இசைஞானியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ரட்ணதுரை, சின்னத்துரை, நேசதுரை ஆகியோரின் அருமை மைத்துனியும், ஷைறா - மார்க், நிரூபன் - வாஷினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிமானி, சுறேயா, ஈஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2016) வியாழக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். (1/4207) (11,18)

**இராஜகுலேந்திரன் - +4415 2537 8278**

---

### கபிஷன் ரசிகரன்



பிறப்பு 22 . 09 . 2011

இறப்பு 27 . 08 . 2016

கனடா, ரொறன்ரோ ஸ்ரோவீலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கபிஷன் ரசிகரன் 27.08.2016 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ரசிகரன்- சுபசீலா தம்பதியரின் தவப் புதல்வனும் லக்கீனின் அன்புத் தம்பியும் தம்பிரெட்ணம்-யோகம், நாகராசா- சந்திரா தம்பதியர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய். (68232)(12.18)

தகவல்:
குடும்பத்தினர்.

**றொபேட்- கனடா : 001 416 893 1784**
**சுபசீலன் - இலங்கை: 077 608 0843**
**கோபு - இலங்கை: 077 549 1239**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்காலில்

அளவீடு செய்யப்பட உள்ளன. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வட்டுவாகல் கடற்படை முகாம் அமைந்துள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணி நாளையதினம் கடற்படையினருடைய தேவைக்காக மீண்டும் சுவீகரிக்கப்பட உள்ளதாகவும், காணிகள் அளவீடு செய்யும் போது, அதன் உரிமையாளர்களை உரிய ஆவணங்களுடன் வருகைதருமாறும் காணி உரிமையாளர்களுக்கு நில அளவைத் திணைக்களத்தினரால் அண்மையில் அழைப்பு விடுக்கப்பட்டது.

கடந்த 3ஆம் திகதியும் குறித்த காணிகள் கடற்படையினருடைய தேவைக்காக அளவீடு செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், காணி உரிமையாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வட்டுவாகல் பாலத்தை மறித்து கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். பொதுமக்களது காணிகளை அளவீடு செய்ய வந்த நில அளவையாளர்களை காணிக்குள் செல்லவிடாது போராட்டத்தை மேற்கொண்டனர். இதனால் வட்டுவாகல் பாலத்தினூடான போக்குவரத்து சுமார் அரை மணி நேரம் பாதிக்கப்பட்டது.

போராட்டத்தில் மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதனால் அன்றையதினம் காணி அளவீடு செய்ய முடியாது நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

மாவட்டச் செயலாளர் காணி சுவீகரிப்பை முற்றாகத் தடை செய்வதாக நேரில் வந்து உறுதியளித்தாலே, இடத்தை விட்டு நகருவதாக மக்கள் தெரிவித்தமையை அடுத்து, மாவட்டச் செயலாளரின் பணிப்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோத்தர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர். போராட்டக்காரர்களிடம் இருந்து மனுவைப் பெற்றுக் கொண்டனர். மக்களுடைய காணிப்பிரச்சினை தொடர்பாக மாவட்டச்செயலாளர் ஊடாக அரசுக்குத் தெரியப்படுத்துவதாக மாவட்டச் செயலக கணக்காளர் மக்களுக்குத் தெரிவித்தார்.

இதனை அடுத்து போராட்டக்காரர்கள் பாலத்தை விட்டுக் கலைந்து சென்றனர்.

இந்த நிலையில் நாளையதினம் காணி அளவீடுசெய்யஉள்ளதாகநிலஅளைவைத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளமை மக்கள் மத்தியில் அரசு மீதும், அதிகாரிகள் மீதும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

'கடற்படைத்தளம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர்களான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் இருவரும், சீனக் குடிமகன் ஒருவம் தங்களுடைய காணிகளை கடற்படையினருக்கு வழங்குதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதன்பிரகாரம் காணி உரிமையாளர்களுக்கான இழப்பீடு வழங்குவதற்கான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. காணி உரிமையாளர்களின் சம்மதத்துடன் நாளை காணிகளை அளவீடு செய்வதற்கான ஏற்பாடுகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-21,101)

**காணி விற்பனைக்கு**

ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்
2 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.
திருநெல்வேலிச் சந்திக்கு அருகில்
3 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 7037058

## வட்டுக்கோட்டைத்...

ஆவணங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் பாடசாலைக்கான புதிய கட்டடம் கட்டுவதற்காக வேறொரு இடம் தெரிவு செய்யப்படும்.

இவ்வாறு நேற்று வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இணைத் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

வலி. மேற்குப் பிரதேச செயலக மட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுற்பகல் 9 மணியளவில் நடைபெற்றது. இதில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைத்தலைவர்களாகத் தலைமை வகித்தனர்.

இதன்போது கல்வி தொடர்பாக ஆராயப்பட்டது. பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கட்டட வசதிகள் போதுமானதாக இல்லை. வெளிநாட்டிலுள்ள பழைய மாணவர்களால் திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு கட்டடம் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இடமின்மையால் மிகவும் பழமைவாய்ந்த சுண்ணாம்புக் கட்டடமான கந்தையா மண்டபத்தை இடித்துக் கட்டுவதற்கு அனுமதி வழங்குமாறு நேற்றுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"பண்ணாகம் மெய்கண்டான் சம்பந்தமாக கல்வி அமைச்சருடன் பேசப்பட்டது. ஒவ்வொரு பாடசாலையிலும், அந்தப் பாடசாலையின் ஆரம்ப காலத்தில் இருந்த ஒன்றுக்கு சரித்திரம் இருகின்றது. அது பாதுகாக்கப்பட வேண்டும். புதிய கட்டடத்தை வேறு இடத்தில் கட்டவேண்டும்" என்று இணைத்தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.

இந்தக் கந்தையா மண்டபத்தின் கட்டடம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட கல்வி அமைச்சின் பொறியியல் பிரிவினர், அது மிகவும் பலமான நிலையில் இருப்பதாகத் தெரிவித்தனர். புதிய கட்டடத்தை பாடசாலையின் கிழக்குப் பகுதியில் அமைக்கலாம் என சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்தார். (வ-4,ரி7)

## விக்கியை...

தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பான் கீ மூனுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களையடுத்து, பிற்பகல் 2 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் பான் கீ மூனுக்கும் இடையில் சந்திப்பு இடம் பெறும் என்று இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி மைக்கலோலே நேற்று அறிவித்தார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் இலங்கைப் பயணத்துக்கான நிகழ்ச்சி நிரலில் வடக்கு மாகாண முதலமைச்சருடனான சந்திப்பு இடம்பெற்றிருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பான் கீ மூனைச் சந்திக்கும்போது, அதில் முதலமைச்சரும் இணைந்து கொள்ளலாம் என முதலமைச்சருக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்திருந்தபோதிலும், அதற்கு முதலமைச்சர் உரிய வகையில் பதிலளிக்கவில்லை.

இந்தப் பின்னணியிலேயே நேற்று முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையில் தொலைபேசியில் உரையாடல் இடம்பெற்றது.

இந்த உரையாடலின் பின் பான் கீ மூனை வடக்கு மாகாண முதலமைச்சரும், வடக்கு மாகாண அமைச்சர்களும் சந்திப்பதற்கான ஏற்பாடு தனியாகச் செய்யப்பட்டிருக்கின்றது என்று இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார். (வ-4)

## யாழ்.நகர...

கப்பட்டன. அதில் ஒரு கடையில் மட்டும் தங்க நகைகள் , வெள்ளிக் காற் சங்கிலிகள் என்பன களவாடப்பட்டன.

அந்தக் கடையின் கூரைப்பகுதிக்கு ஏறிய திருடர்கள், சீற்றை அகற்றி, அதன் பின்பு உள்ளே பொருத்தப்பட்டிருந்த தடையையும் விலக்கி கடையினுள் இறங்கித் திருடியுள்ளனர்.

இவ்வாறு கொள்ளையிட்ட திருடர்கள் அருகில் இருந்த கடை ஒன்றின் மேற்பகுதி பிளாட் என்பதனால் கொள்ளையிட்ட கடையின் ஊடாக செல்வதற்கு ஒரு துவாரத்தை ஏற்படுத்தியுள்ளனர். இருப்பினும் இரண்டாவது நகைக் கடையினுள் உட்செல்லவில்லை. இதனால் அந்தக் கடையின் எவையும் திருடப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நகைக் கடை உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ -101)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு நந்தகுமார்

பிறப்பு 16 . 02 . 1963



இறப்பு 29 . 08 . 2016

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், டென்மார்க் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நந்தகுமார் (29.08.2016) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் கீதாவின் அன்புக்கணவரும் சரஸ்வதி சத்தியகுமார் (கனடா) காலஞ்சென்றவர்களான சந்திரகுமார் பத்மாஜினி மற்றும் சிவகுமார் கனகரசி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் கனகரத்தினம் கங்காதேவி, மகேஸ்வரி, பால கிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் சிநேகா, மீனா, ஜோதிகா, அஜித்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் மயூதரனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2016) வியாழக்கிழமை மானிப்பாய் வீதி ஒட்டுமடத்திலுள்ள இன்பம் மலர்ச்சாலையில் மு.ப. 9 மணிமுதல் பி.ப. 3 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
சகோதரன் (கா. சத்தியகுமார்),
மனைவி (கீதா நந்தகுமார்),
076 621 5096

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

# மரண அறிவித்தல்

## தங்கராசா செந்வரன்

(வைத்தியர் யாழ். போதனா வைத்தியசாலை)



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், தாமரை குளத்தடி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா செந்வரன் கடந்த (29.08.2016) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தங்கராசா - சந்திராதேவி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும் காயத்திரியின் அன்புக்கணவரும் காருண்யாவின் பாசமிகு தந்தையும் சிவராம் (விவசாய போதனா ஆசிரியர், மன்னார்), தாட்சாயினி, ரகுராம் (வயம்ப பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரனும் சத்தியசீலன் (இளைப்பாறிய உதவி கல்விப்பணிப்பாளர்) - பாலசௌந்தி ஆகியோரின் மருமகனும் தர்ஷிகா (பிரான்ஸ்), ஆரபி (பிரான்ஸ்), ஆரூரா, கவியரசன் (பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2016) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமரை குளத்தடி,
துன்னாலை கரவெட்டி.

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. வடக்கு...

அறிவிப்பையும் விடுக்கவில்லை என்று அரச தரப்பிலிருந்து நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இது விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தன்னிச்சையாக செயற்படுவதாகக் குற்றச்சாட்டு அரச தரப்பில் எழுந்துள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் கூற்றும் அமைகின்றது. இழப்பீட்டுக் கடிதம் வழங்குமாறு எந்தவொரு அறிவிப்பையும் தான் இன்னும் விடுக்கவில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் நேற்றுக் கூறியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எஞ்சிய 171 குடும்பங்களுக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய, தேசிய பாதுகாப்புக் காரணமாக தங்களுடைய காணியில் தற்போது மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்க முடியாது. காணிக்குரிய பெறுமதி இழப்பீடாக வழங்கப்படும் எனக் குறிப்பிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை கடிதம் விநியோகிக் கப்பட்டது. மாவட்டச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட இதற்கான கடிதம், நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டது. கிராம அலுவலர்கள் இதனை கையளிக்கச் சென்ற போது, மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், அதை வாங்குவதற்கும் அவர்கள் மறுப்பும் தெரிவித்தனர். கடிதம் வாங்கவேண்டாம் என மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அறிவிப்பு விடுத்திருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி விடயம் சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றுக் காலை தொலைபேசியூடாகப் பேசியுள்ளார். இது பற்றித்தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் ஆராய்ந்து பார்ப்பதாகவும் பிரதமர் மாவையிடம் கூறியுள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடமும் இந்த விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பேசியுள்ளார். எனினும், ஜனாதிபதி இவ்வாறானதொரு அறிவிப்பை விடுக்கவில்லை என்பதை அவரும் ஒப்புக்கொண்டுள்ளார். மக்களின் அபிப்பிராயத்தைக் கோருமாறே ஜனாதிபதி கேட்டிருந்தார் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

"மக்களின் காணிப் பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்" என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்றுக் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (வ-4,5)

## நல்லூர்க்...

தரிசிப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாடு களிலிருந்தும் லட்சக் கணக்கான பக்தர்கள் வழமை போன்று ஒன்று கூடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். (வ)

## முன்னாள்...

(வயது - 26) என்பவரே இவ்வாறு இனந்தெரியாதோரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

முன்னாள் போராளியான அவர் கடந்த 4 ஆண்டுகளாக புனர்வாழ்வு பெற்று விடுதலையாகிய நிலையில் தொண்டமான் நகர் பகுதியில் உள்ள அவரது உறவினர் ஒருவருடைய வீட்டில் இருந்து முச்சக்கர வண்டி ஓட்டும் தொழிலை செய்து வந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்று மாலை 4 மணியளவில் தொண்டமனாறு ரவர் சந்தியில் வைத்து வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டார். வெள்ளை வானுடன் மோட்டார் சைக்கிளிலும் சிலர் வருகை தந்திருந்தனர். வந்தவர்கள் யார் என்பதை தெரியப்படுத்தாமலேயே, அவரை வாகனத்தில் ஏற்றி சென்றனர். கிளிநொச்சி பொலிஸாரிடம் சென்று இது தொடர்பில் கேட்டபோது, இதற்கும் தமக்கும் தொடர்பு இல்லை எனவும் வவுனியா பொலிஸாரிடம் சென்று கேட்குமாறும் தெரிவித்தனர் என முன்னாள் போராளியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் தகவலைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதும் பதில் எதுவும் கிடைக்கவில்லை. (வ-21)

## கொழும்புக்கு...

மற்றும் யாழ்ப்பாணம், காலி ஆகிய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமற் போனவர்களின் நிலமை குறித்து பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முஸ்லிம் மக்களைப் புறந்தள்ளாமல் பான் கீ மூன் கிழக்குக்கு வரவேண்டும் என்றும், கிழக்கின் மீள்குடியேற்றம் குறித்து கவனத்தில் கொள்ளாமை போன்ற விடயங்களை சுட்டிக்காட்டியும் ஐக்கிய சமாதான முன்னணி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

பன்னாட்டு விசாரணைக்கான ஆயத்தப் படுத்தல்களை முன்னெடுக்கவே பான் கீ மூன் இலங்கை வருகின்றார் எனத் தெரி வித்துள்ள பேரினவாத அமைப்புகள், ஐ. நா. சபையின் கொழும்பு அலுவலகத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கான இரண்டாவது உத்தியோக பூர்வ பயணத்தை இன்று மேற்கொள்கின்றார். 2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னர் மே மாதம் 22 திகதி ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இதேவேளை, பான் கீ மூனின் வருகையை முன்னிட்டு கொழும்பு காலி முகத்திடலில் இலங்கை மற்றும் ஐ.நா. அமைப்பின் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (வ-5,21)

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை சற்குணராசா (பாலு)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சற்குணராசா (பாலு) 29.08.2016 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவனொளி - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், வசந்தாவின் பாசமிகு கணவரும், கம்சிகா, கபில்டன், கஜிபன், கனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மராசா, பரமேஸ்வரன் மற்றும் பராசக்தி, தவராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாயல் கந்தோர் வீதி,
தெல்லிப்பழை.

தகவல்: குடும்பத்தினர்,
உடன் பிறப்புக்கள்.

(J/4210)
(11,17,18)

## மரண அறிவித்தல்கள்

### இராசு தியாகராசா (சின்னப்பவுன்)

(கட்டட ஒப்பந்தகாரர் -அரியாலை)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தியாகராசா நேற்று (30.08.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசு - சின்னத்தங்கம் தம்பதிகளின் மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரகலாதன் மற் றும் கிருபாகரன், சுரேஸ்கரன், பிரசன்னா, பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமளாநிதி, நவலட்சுமி, சித்திராதேவி, இராஜதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவானுயா (பல்கலைக் கழக கல்லூரி), அபிராமி, சங்கீர்த்தன், மதுஸ்கரன், பவிஷா, வெண்நிலவன், கலையரசி, இளங்கீரன், டிவேனிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக முருங்கை இந்து மயானத்துக்கு (நாவற்குழி தெற்கு) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துமனை,
நாவற்குழி கிழக்கு, நாவற்குழி.

தகவல்:
குடும்பத்தினர்.

நளினி - 077 489 7339,
பிரியா - +44 7448 818258

(J/4215)
(11,17,18)

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதம் நிமல்ராஜ் (நிமல்)



இல. 82/15, பருத்தித்துறைவீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் நிமல்ராஜ் (நிமல்) கடந்த (27.08.2016) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் இராசமணி தம்பதியரின் பாசமிகு புதல்வரும், தம்பிரட்ணம்-யோகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவநந்தினியின் (நிதா) பாசமிகு கணவரும், சுதேசனா, முகுந்தன் (லண்டன்), சோபனா, குகானந்தறாஜ் ஆகி யோரின் பாசமிகு சகோதரனும், கண்ணன், றேணுகா, தயா, சசி, தர்ஷா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், றெபேட், றஜனி, சுபா ஆகியோரின் சகலனும், தர்சனா, நர்மதா, சாருஜன், லக்ஷிகன் மற்றும் காலஞ் சென்ற கபிஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நவீன், அர்வின், ஹரிஸ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், பிறைடன், ஜெபர்ஷன், டிலன், டிலக்சியா, அனோஸ்க்கா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2016) வியாழக்கிழமை இல.82/07, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/07, பருத்தித்துறை வீதி,
3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 0517643 (சகோதரன்- குகானந்தறாஜ்).
14168931784 றெபேட்(சகலன்-கனடா)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி புனிதவதி கிருஷ்ணமூர்த்தி

பிறப்பு
16 . 04 . 1928



இறப்பு
30 . 08 . 2016

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் மாப்பாணவூரியை வதிவிடமாகவும் தற்பொழுது புன்னாலைக் கட்டுவன் வடக்கு குளத்தடி நாச்சிமார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி கிருஷ்ணமூர்த்தி நேற்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமநாதர் - சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் விக்கினேஸ்வரன் (வவுனியா), ஞானேஸ்வரன், ஞானேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் சந்தானலக்ஷ்மி, சத்தியதேவி, வல்லிபுரநாதன் ஆகியோரின் மாமியும் விதுரா, விபூசன், ரவி சங்கர், டினோஸ், டிலானி, சரண், சர்மிளா ஆகியோரின் பேர்த்தியும் ரேணுகா, நிதுர்சன், வினுசாந், கேம்சா, கஸ்விந், டிகாசினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2016) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் வடக்கு பிள்ளையான்கட்டு இந்துமயானத்தில் நண்பகல் 12 மணிக்குதகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
077 9216866

### திருமதி ராஜேஸ்வரி ராஜேஸ்வரன்

தோற்றம்
12 . 12 . 1952



மறைவு
30 . 08 . 2016

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி ராஜேஸ்வரன் நேற்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் ராஜேஸ்வரனின் அன்பு மனைவியும் துஸ்யந்தினி, திருநிறைச்செல்வி, கலைவாணி ஆகியோரின் அன்புத்தாயும் அருள்பரன், கோபிதாஸ், புஸ்பகுமார் ஆகியோரின் அன்புமாமியும் உமாகரன், சாகித்தியகருமாரி, வாகீஸ்வரன், கம்ஷாயினி, பூர்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கைலாயநாதன்(பொற்கொடி) மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் இராசேந்திரம், ராசேஸ்வரி, கோபாலம்மா ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2016) புதன்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.
077 2473201

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லா லிகா தொடர்

# பார்சிலோனாவுக்கு முதலாவது வெற்றி

நடப்பு வருடத்துக்கான லா லிகா தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது ஸ்பெய்னின் பார்சிலோனா வி. கழகம்.

பார்சிலோனாவின் மைதானத்தில் நேற்று இந்த ஆட்டம் நடைபெற்றது. அத்லெட்டிக்கோ பில்பாவோ எதிர்த்து மோதியது. ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் இவான், பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவு செய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்களில் மாற்றம் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)





# பதவி நீக்கம் வலித்தது

## டில்சான் வருத்தம்

இலங்கை அணியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை மிகுந்த வலி தந்ததாகத் தெரிவித்தார் திலகரட்ன டில்சான்.

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்துடன் டில்சான் பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களிலிருந்து விடைபெற்றார். இதனையடுத்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே டில்சான் இவ்வாறு தெரிவித்தார்.

நான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டபோது சில வீரர்கள் எனக்கு ஆதரவு தரவில்லை. குறிப்பாக ஏற்கனவே தலைவர்களாகச் செயற்பட்ட இருவரின் ஆதரவு எனக்குக் கிடைக்காதமை பெரும் பின்னடைவாக அமைந்தது. எனது தலைமையின் கீழ் நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது, முதலிரு ஒருநாள் ஆட்டங்களிலும் மத்தியூஸ் பந்துவீச ஏற்கவில்லை. காயத்தை அவர் காரணமாகக் குறிப்பிட்டார். இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் எனக்கும் காயம் ஏற்பட்டது. மூன்றாவது ஆட்டத்தில் நான் விளையாடவில்லை. அந்த ஆட்டத்துக்கு மகேல தலைமையேற்றார். அந்த ஆட்டத்தில் மத்தியூஸ் பந்து வீசினார். இது எனக்கு மிகவும் ஆச்சரியம் தந்தது. அனேகமாக அது மகேலவின் அதிர்ஷ்டம் என்றே கருதுகிறேன்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருடன் தலைமைப் பதவியிலிருந்து நான் நீக்கம் செய்யப்பட்டேன். இது எனக்கு மிகவும் வலித்தது. நான் தூக்கத்தைத் தொலைத்த நாள்கள் அவை. ஆனால், அடுத்த தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 500 ஓட்டங்களைக் குவித்து தொடராட்ட நாயகனாகத் தெரிவானேன்.

அடுத்த வருடம் வரை அணியில் இருக்கத்திட்டமிட்டேன். ஆனால், எனது ஓய்வு 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் இலங்கைக்குப் பின்னடைவாக இருக்கக்கூடாது. எனவேதான் இப்போதே ஓய்வு பெறுகிறேன். இளம் வீரர் ஒருவருக்குத் தாராளமான காலஅவகாசங்களை வழங்கியுள்ளதாக எண்ணுகிறேன். இதுவும் அணியின் நலனுக்கான முடிவே என டில்சான் மேலும் தெரிவித்தார். (ம)

# டோனி, பிரீத்வைட் இடையே இரு வேறுபட்ட கருத்துக்கள்

இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய இரண்டாவது ரி-20 ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில், இந்த ஆட்டம் தொடர்பாக இந்திய அணித் தலைவர் டோனியும், தீவுகளின் அணித் தலைவர் பிரீத்வைட்டும் முரணான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் 143 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 15-0 என்ற நிலையில் இருந்தபோது, மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. மழை ஓய்ந்ததும் நடுவர்கள் இரு தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியபோது, இருவரும் வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியமை தற்போது வெளிவந்துள்ளது.

மைதானத்தின் சில பகுதிகளில் சகதியிருந்ததாகத் தெரிவித்து, ஆட்டத்தைத் தொடர முடியாது எனத் தீவுகளின் தலைவரான பிரீத்வைட்டும், முக்கிய பகுதிகளில் உலர்வாக உள்ளதால் ஆட்டத்தைத் தொடர முடியும் என டோனியும் வெளிப்படுத்தியதாக தற்போது அறியவந்துள்ளது. (ம)




# பங்களாதேஷ் – ஆப்கான் அடுத்த மாதத்தில் தொடர்

பங்களாதேஷ் -ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் அடுத்த மாதத்தில் நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 25 ஆம், 28 ஆம் ஒக்ரோபர் முத லாம் திகதிகளில் முறையே மூன்று ஆட்டங்களும் நடைபெறவுள்ளன. பங்களாதேஷில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அந்த நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்ள சில நாடுகள் அச்சப்படும் நிலையில் இந்தத் தொடர் அந்த நாட்டைப் பொறுத்தவரை பாதுகாப்பு நிலவரங்களை உறுதிப்படுத்தும் விதமாக அமையும். ஆப்கானிஸ்தான், சிம்பாப்வேயைதவிர்த்த வேறெந்த டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளுக்கும் எதிராக இருதரப்புத் தொடரில் விளையாடவில்லை. எனவே அந்த அணிக்கும் இது முக்கியமான தொடராக அமைந்துள்ளது. (ம)

# இலங்கை கிரிக்கெட்சபை ரசிகர்களிடம் மன்னிப்பு

டில்சானின் இறுதி ஒருநாள் ஆட்டத்தில் ஏற்பட்ட பார்வையாளர் நெரிசலைச் சமாளிக்க முடியாமல் திணறியமைக்கு இலங்கை கிரிக்கெட் சபை மன்னிப்பு கேட்டுள்ளது.

இந்த ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் நடைபெற்றது. இந்த மைதானத்தின் பார்வையாளர் அரங்கில் கிட்டத்தட்ட 18 ஆயிரம் ரசிகர்களே இருக்கலாம். ஆனால், டில்சானின் இறுதியாட்டம் என்பதால் கிட்டத்தட்ட 45 ஆயிரம் ரசிகர்கள் குவிந்தனர். இதனால் இருக்கைகளை முன்பதிவு செய்தவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். இதனால் இந்தச் சம்பவத்துக்காக மன்னிப்புக் கேட்டுள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெறாது என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம)



# பதக்கம் வெல்லாத சிம்பாப்வே வீரர்களுக்கு சிறை?

ரியோ ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்லாத சிம்பாப்வே வீர, வீராங்கனைகளை எலிகளுக்குச் சமனானவர்கள் என்று வர்ணித்துள்ள அந்த நாட்டின் ஜனாதிபதி றொபேர்ட் முகாபே, அனைவரையும் கைதுசெய்து சிறையிடுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த 5ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. சிம்பாப்வேயிலிருந்து 31 வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இவர்களில் ஒருவர்கூட பதக்கம் வெல்லவில்லை. இதனாலேயே அவர்கள் அனைவரையும் சிறையிடுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்ததாக அறியவருகிறது.

இவர்கள் நாட்டின் பணத்தை வீணாக்கிவிட்டனர். இவர்கள் எலிகள். அவர்களை நாம் விளையாட்டு வீரர்கள் என அழைக்கிறோம். அவர்கள் நாட்டுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இல்லை. இவர்களால் செம்பு, பித்தளைப் பதக்கங்கள் கூட வெல்ல முடியவில்லை. ஆனால், நமது பக்கத்து நாடு போட்ஸ்வானாவால் முடிந்துள்ளது. இவர்களைச் சிறையில் அடைப்பதே சிறந்தது எனத் தெரிவித்தே முகாபே குறித்த உத்தரவை பிறப்பித்ததாக அறிய வருகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பாடசாலைகளின் கிரிக்கெட்; அபிவிருத்தி செய்ய சுமதிபால சம்மதம்

யாழ்ப்பாணம், ஓக. 31
மன்னார் மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் அண்மையில் சந்திப் பொன்று இடம் பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் பாடசாலைகளின் கிரிக்கெட் அபிவிருத்தி, மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி என இரு பிரிவாக கலந்துரையாடப்பட்டதாக அறியவருகிறது.

இலங்கை–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தின் பின்னர், தம்புள்ள மைதானத்தில் வைத்தே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. பாடசாலைகளின் கிரிக்கெட்டைப் பொறுத்த வரை மன்னார் மாவட்டத்தில், மன்னார் சித்தி விநாயகர் பாடசாலை, சென். சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை, அல் அசார் தேசிய பாடசாலை, புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயம், வங்காலை சென். ஆன்ஸ், புனித வளனார் பாடசாலை ஆகிய 6 பாடசாலைகள் கடினப் பந்து கிரிக்கெட்டில் ஈடுபடுகின்றன. ஆனால், பயிற்சியாளர்களும் வழங்களும் இல்லை. இது சுமதிபாலவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதனையடுத்து அவர், மன்னார் சித்தி விநாயகர் பாடசாலை, மன்னார் சென். சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை, அல் அசார் தேசிய பாடசாலை, புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயம் ஆகிய 4 பாடசாலைகளுக்கு வலைப் பயிற்சி செய்யக்கூடிய ஆடுதள வசதிகளையும், வங்காலை சென். ஆன்ஸ்பாடசாலை, புனித வளனார் பாடசாலை ஆகியவற்றுக்கு வலைப் பயிற்சி செய்யக்கூடிய வசதிகளுடன் பிரதான ஆடுகளமும் அமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பாக சுமதிபால எந்தவித திட்டங்களுக்கும் உடனடியாக உறுதியளிக்கவில்லை. ஆனால், மன்னாரின் தலைமைப் பயிற்சி நிலையமான நகர சபை மைதானத்தில் வலைப்பயிற்சி ஆடுகளம், உப பயிற்சி நிலையங்களான அடம்பன் பிரதேச சபை, மடு பிரதேச செயலக மைதானங்களில் பிரதான ஆடுகளத்துடன் பயிற்சி செய்வதற்கான ஆடுகளம் என்பன அமைத்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் அமல்ராஜ் உறுதிப்படுத்தினார். (ம-23)



சுமதிபாலவை மன்னார் கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்தபோது...

## அஞ்சலோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 31
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அழைக்கப்பட்ட பாடசாலைகள் பங்குபற்றும் அஞ்சலோட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இருபாலாருக்குமான 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 200 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 800 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கலப்பு அஞ்சலோட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. (ம-23)

## யாழ். மத்தியின் வர்ண விருதுகள்

யாழ்ப்பாணம், ஓக. 31
யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பாடசாலை மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கு வர்ண விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்லுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-23)

## வவுனியாவை வீழ்த்தியது மன்னார்

யாழ்ப்பாணம், ஓக. 31
டக்வேர்த் லூயிஸ் முறையின் மூலம் மூன்று ஓட்டங்களால் வவுனியா மாவட்ட அணியை வீழ்த்தியது மன்னார் மாவட்ட அணி.

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்பட்டுவரும் மாவட்டங்களின் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்றில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. வவுனியா நகரசபை மைதானத்தில் ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 32.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து, 137 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தனுபிரவின் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மன்னார் மாவட்ட அணியின் சார்பில் பரிஸ் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் மாவட்ட அணி 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. இதனால் டக்வேர்த் லூயிஸ் முறையின் மூலம் மூன்று ஓட்டங்களால் வெற்றிபெற்றது மன்னார் மாவட்ட அணி. (ம-23)



## மன்செஸ்டர் சிற்றிக்கு வெற்றி

இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் சிற்றியை எதிர்த்து வெஸ்ட் ஹோம் யுனைற்ரெட் மோதியது. மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றதால், அந்த அணிக்கு கூடுதல் சாதகமாகக் கருதப்பட்டது. 9 ஆவது நிமிடத்தில் சிற்றியின் முதல் கோலைப் பதிவு செய்தார் சேர்ஜியோ அக்ரோ. மாற்றங்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. 52 ஆவது நிமிடத்தில் அக்ரோ, தனதும் அணியினதும் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். 60 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது வெஸ்ட் ஹோம். ஸ்டேர்லிங், சிற்றியின் மூன்றாவது கோலைப் பதிவு செய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது மன்செஸ்டர் சிற்றி. (ம)

## கரவெட்டி பிரதேசம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 31
யாழ். மாவட்ட அரச செயலர் கிண்ணத்துக்காக, பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கரம் தொடரில் ஆண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. வே.சிவச்செல்வன், சி.நிர்மலன், செ.கார்த்திகேயன், ந.மயூரரூபன், ஜி.சசிக்குமார், எஸ்.சேந்தன், எஸ்.ஜெகஜிம்பன் ஆகியோரைக் கொண்ட கரவெட்டி அணி சம்பியனானது. (ம-422)

## ஒலிம்பிக் நாயகிகளுக்கு கேல் ரத்னா விருதுகள்

ரியோ ஒலிம்பிக் தொடரில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய பி.வி.சிந்து, சாக்சி மலிக், திபா கர்மகர், ஜித்து ராஜ் ஆகிய வீராங்கனைகளுக்கு 'கேல் ரத்னா' விருது வழங்கி கௌரவித்தது இந்திய அரசு. ரியோ ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை, வெண்கலப் பதக்கம் இந்திய மல்யுத்த வீராங்கனை இருவரும் கடந்த சில தினங்களாக வெகுவாகவே கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். ஏராளமான பரிசுப் பொருள்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் இந்திய அரசு தனது விருதுகளில் ஒன்றாக 'கேல் ரத்னா' விருதை வழங்கியுள்ளது. இவர்கள் இருவருக்கும் மட்டுமல்லாது, சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தீபா கர்மகர், துப்பாக்கி சுடுதல் வீராங்கனை ஜித்து ராஜ் ஆகியோருக்கும் குறித்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SECRETARY NEEDED**

A female secretary is needed for a general manager in Jaffna. Age between 25 - 45

Requirements: Min 2years experience English knowledge computer skills.

**Email your CV to hr@thethinnai.com**

THE THINNAI
86, Palaly road, Jaffna. Tel: 076 752 8628

FLC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"

FRENCH CLASSES

பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French

விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)

DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.

இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 12.09.16 Mon@ 3.30 pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

# நியூசிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலகுவாக வென்றது தெ. ஆபிரிக்கா

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 204 ஓட்டங்களால் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரையும் 1:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் ஏற்கனவே சமநிலையில் முடிந்த காரணத்தால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலை இருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 481-4 என்ற நிலையிலிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.



அதிகபட்சமாக பிளாசிஸ் 112 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் வாக்நெர் 5 இலக்குகளையும், பிரேஸ்வெல், சான்நெர், சவுத்தி மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 214 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 77 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் சார்பில் ரபாடா, ஸ்ரெய்ன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பிளன்டர் இரு இலக்குகளையும், பியட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

267 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா மூன்றாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் 105-6 என்றிருந்தது. பவுமா 25 ஓட்டங்களுடனும் பிளன்டர் 3 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். பவுமா சில பவுண்டரிகளைப் பதிவு செய்தார். பிளன்டர் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 132-7 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது தென்னாபிரிக்கா.

நியூசிலாந்துக்கு இலக்காக 400 ஓட்டங்கள். முதல் பந்துப்பரிமாற்றத்தில் லாதம், குப்ரில் இருவரையும் வீழ்த்தினார் ஸ்ரெய்ன். தென்னாபிரிக்காவின் வெற்றிக்கான அடித்தளம் முதல் பந்துப்பரிமாற்றத்தில் பலமாக அமைக்கப்பட்டது. ஓட்டமெதனையும் பெறவிடாது ரெய்லரையும் வீழ்த்தினார் ஸ்ரெய்ன். பிளன்டரிடம் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். 7 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது நியூசிலாந்து. நிக்கொல்ஸ் நிலைத்துநிற்க மறுமுனையில் சிறிய இணைப்பாட்டங்கள் வற்லிங், பிரேஸ்வெல் மூலமாக அரங்கேறின. இருப்பினும் நீடிக்கவில்லை. 76 ஓட்டங்களுடன் நிக்கொல்ஸும் ஆட்டமிழக்க 195 ஓட்டங்களில் சுருண்டது நியூசிலாந்து. 204 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. (ம)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இன்று (31.08.2016) புதன்கிழமை
ஐம்பதாவது அகவையினையும்
முப்பத்தேழாவது அகவையினையும்
கண்டுகளிக்கும்
யாழ்வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
அன்புச் சகோதரர்கள்
திரு.சுப்பிரமணியம் சிறீலிங்கம்,
திரு. சுப்பிரமணியம் ஜனார்த்தன் (ஆஸ்திரேலியா)
ஆகியோரை பல்லாண்டு காலம் பலசிறப்புக்களைப்பெற்று பார்போற்ற வாழ்க என பாங்குடனே வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திருமதி சு.அகிலாண்டநாயகி - அம்மா
திரு.திருமதி தவலிங்கம் விஜயகுமாரி - சகோதரன் குடும்பம்
திரு.திருமதி கிரிதரன் தயாபரி - சகோதரி குடும்பம்
திருமதி ரவீனா ஜனார்த்தன் - மனைவி, மைத்துனி
ஜ.ரேஷ்னி - மகள், பெறாமகள்
வரப்பிரகன், அகித்யா, சுபீட்ஷன் - மருமக்கள்

# வென்றேயாகவேண்டும்; இலங்கைக்கு நெருக்கடி



இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற கட்டாய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் முதலாவதிலும், மூன்றாவதிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. தற்போது 2:1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. மூன்று ஆட்டங்களில் வெற்றிபெறும் அணி தொடரைக் கைப்பற்றும் என்பதால் மீதமுள்ள இரு ஆட்டங்களில் ஒரு ஆட்டத்திலேனும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே எஞ்சிய இரு ஆட்டங்களிலும் வென்றேயாகவேண்டும் என்ற கட்டாய நிலை இலங்கைக்கு உள்ளது. (ம)

af வேலைவாய்ப்பு

Cleaning மற்றும் Garden வேலை.
நிறுவனம்: பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்,
ALLIANCE FRANÇAISE DE JAFFNA.
61, Kachcheri Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093

# கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி



கடந்த 04.08.2016 அன்று கொழும்பில் ஜேர்மன் தூதரகத்தால் நடத்தப்பட்ட டொச் A1 பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்கு எமது நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

* முதல் தடவையிலே அதிக மாணவர்கள் சித்தியடைவது
* தமிழ் மொழி பெயர்ப்புடன் கற்பிக்கப்படுகின்றது.
* யாழ்.மண்ணில் எங்குமில்லாத வாறு இலகுவான முறையில் S.கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது.

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, புத்தர் விகாரைக்கு எதிரில் 2 ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

தேவை

யாழ்ப்பாண முறையில் உணவு தயாரிக்கும் ஆண்கள் மற்றும் வெயிட்டர்கள்

த திண்ணை ஹோட்டல்
86, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
077 774 7929

(7.4712)
(14,17,18)

றெறாசோ சிப்ஸ் (இந்தியா)
மலிவு விற்பனை
சகல நிறங்களும் அளவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016

வாடிக்கையாளர் அனைவருக்கும் முருகப் பெருமானின்
அருட்கடாட்சம் கிடைக்க வாழ்த்துகின்றோம்.



## சிறி குமரன் ரெக்ஸ்

## Sri Kumaran Tex

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேடமாக Office Wear Sarees 690/= இலிருந்து



- பட்டுச் சாறி
- பன்சி சாறி
- கொட்டன் சாறி
- சல்வார்
- சல்வார் துணி
- TOP வகைகள்
- ரவுசர், சேட்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 6845

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்



## சிறி மதனா நகை மாளிகை

**Sri Mathana Nagai Malikai**
155M, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
Tel: 021 222 7772



கிளை நிறுவனம்:
**மதனா ஜுவல்லறி**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5526

நல்லூர் முருகனின் அருள் கிடைக்க தேர்த் திருநாளில் வாழ்த்துகின்றோம்



## பூரணி நகை மாடம்

**Purane Nakai Maadam**



Genuine 22kt Jewellery
Manufacturing Jewellery

1/4, Kasthuriar Road, Jaffna.
Tel : 021 222 3121

நல்லைக்கந்தனின் நற்கருணை அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்



## கன்னிஹா ஜுவல்ஸ்

யாழ் நகரில்
தன்நிகரில்லா
தங்க ஆபரணங்களின்
சாம்ராச்சியம்
**கன்னிஹா ஜுவல்ஸ்**



அதி நவீன டிசைன்களில்
22 கரட் தரம் குன்றா
தங்க நகைகள்
கண்கவர் புத்தம் புதிய
டிசைன்களுக்கு
முந்துங்கள்

இல. 99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4448
(c.24275) (13.18)

தேரேறி வரும் முருகா! உன் பக்தர்களுக்கு நல்லருள் பொழிக!



## செல்வி நகை அகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

**Chelvi**
**Nakai agam**
Manufacturers of Gold Jewels



22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.

1/3, Kasthuriar Road,
Jaffna. T.P: 021 222 9441
இல. 1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(c.24276) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016


## JAFFNA ELECTRICALS

Dealers in Quality Electrical & Electronic Items

ஆரம்பம் 1969

LG Authorized Dealer for Abans Ltd.

KTK KEVILTON USHA OSRAM :hager KML ORANGE HAVELLS KELANI CABLES

உலக முதற்தரம்வாய்ந்த மின்சாதனப் பொருள்கள் விற்பனையின் முன்னோடிகள்



சகலவிதமான மின்சாதனப் பொருள்கள் அனைத்தையும்
மிகக் குறைந்த விலைக்கழிவுடன் பெறுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

No.94(6), Stanley Road, Jaffna.
Tel : 021 222 2353, Fax : 021 222 4302

நல்லூர் முருகனின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்

## ஏகாம்பரம் புடவை மாளிகை

**A.EHAMPARAM**


Whole Sale & Retail Dealers in Textiles



74(7), Grand , Bazaar, Jaffna.

74(7), பெரியகடை, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 2151 , 021 222 5938



## Nivithra

Beauty Parlour & Training Academy

340, K.K.S Road, Jaffna

இலவச அழுகுக்கலைப்பயிற்சி
மற்றும் கேக் ஐசிங் வகுப்புகள்
புதிய இலவச அழகுக் கலை வகுப்புக்கள்
ஆரம்பிக்கப்படவுள்ளன.
நிபந்தனைக்குட்பட்டது

முதல் இணையும் 10 மாணவர்களுக்கு Cake Icing வகுப்புகள் முற்று முழுதாக இலவசம்

பயிற்சி வகுப்புகள்:
- Basic Beauty Course
- Advance in Beauty Therapy & Hair Dressing
- Diploma in Beauty Culture & Hair Dressing

பயிற்சியில் இணைய SMS 077 771 2604

340, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

உங்கள் பிள்ளைக்கு 2½ வயது நிறைவடைந்து விட்டதா ?
எந்தவொரு பாடசாலை நாட்களிலும்
Play Group இல் இணைந்து கொள்ளலாம்.

(British & National Curriculum)

உங்கள் பிள்ளைகளின் ஆங்கில அறிவுக்கு
ஆரம்பத்திலேயே அடித்தளம் இடுங்கள்

ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை

ADMISSIONS For Montessori



## BEEFORT INTERNATIONAL SCHOOL

# 136, Navalar Road, Jaffna | Tel: 0115925923
Colombo : #27, St.Lucia's Street, Colombo 13
Trinco : #59A, Green Road, Trincomalee
Manipay : #248, Jaffna Road, Manipay

## BEEFORT Engineering

யாழ் மண்ணில் காலடி பதித்திருக்கும்
எமது நிறுவனமானது தரமானதும்,
உறுதியானதும்,
நம்பிக்கை நிறைந்ததுமான உங்கள்
எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவகையில்
சிறந்த கட்டடங்களை
அமைத்துக் கொடுக்கின்றோம்.




BEEFORT Engineering
136, Navalar Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016

கருணை உள்ளம் கொண்ட கந்தனே
தேரேறி வந்திடுக

நாளைய தொழில்நுட்பங்களை இன்றே அறிமுகப்படுத்தி
தரம் குன்றாமல் அதனை வெளிப்படுத்தி தனக்கென
ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தி திகழும்

## தவம் போட்டோ & கலர்லாப்



362, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் முருகனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

## ரட்ணா ஜுவல்லர்ஸ்

தங்க நகை வியாபாரம்



உரிமையாளர் : வை.இரத்தினம்
கே.கே.எஸ். வீதி,
தாவடிச் சந்தி, யாழ்ப்பாணம்
Tel:021 205 3191

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

## யாழ் காலணியகம்

YARL TRADES CENTRE
Agents for:Bata
Yarl Bata யாழ் பாட்டா



11, Modern Market,
Hospital Road, Jaffna.
T.P: 021 222 3152

நல்லையின் நடுவிருந்து நலன்கள் யாவும் அளித்திடும்
நல்லைக்கந்தனே தேரேறி வாருமையா

## ஜெகன் களஞ்சியம் பல்பொருள் வாணிபம்



சகல விதமான
மளிகைப்பொருட்களையும்
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

T.P : 077 483 6923, 021 222 5035
477, K.K.S. ROAD, JAFFNA.

41 வருட காலமாக பாரம்பரிய நல்லெண்ணெய் உற்பத்தியில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்,
பாவனையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றது.

முதல்தரமாக விளங்கும்
வி.எஸ்.எஸ். சாப்பாட்டு நல்லெண்ணெய்





இல்லத்தரசிகளின் நன்மதிப்பினையும்
நம்பிக்கையினையும் பெற்றது. சுத்தமாக்கப்பட்ட
எள்ளிலிருந்து பாரம்பரிய முறையில்
தயாரிக்கப்பட்டது.

## V.S.S

சமையுங்கள்! சுவையுங்கள்!
ஆரோக்கியமாக வாழுங்கள்...

Special Lunch Gingelly Oil
(Sesame Oil)



| கொழும்பில்: | நியூவெள்ளவத்தை |
|---|---|
| சிவசக்தி | மாக்கற்கவுன்ஸ் |
| 41, சென்ஜோன்ஸ்வீதி, | 295, காலிறோட், |
| கொழும்பு 11 | வெள்ளவத்தை. |
| 011 233 8631 | 011 258 9372 |

உரிமையாளர்: வ.ச.சுந்தரலிங்கம்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
021 225 5675, 021 300 1285

## P.P.T Expressஇன் மற்றும் ஒரு விரிவாக்க சேவை






நல்லூர் தேர் சிறப்புற கந்தனை வேண்டி நிற்கின்றோம்

- ☑ பகல் இரவு சேவையாக விஸ்தரித்துள்ளது.
 காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ் நகர் வந்து, காலை 7.30 மணிக்கு கொழும்பு
- ☑ நோக்கிப் பயணிக்கும்.
 கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை செல்லும்.
- ☑ காங்கேசன்துறையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
- ☑ வழமைபோன்று இரவு சேவைகளும் நடைபெறுகின்றன.
 மேலும் இலங்கையின் முதற்தர துரித வெளிநாட்டு பொதிகள் சேவைகளூடாக உங்கள் உறவுகளின் இல்லங்களுக்கு பொதிகள் துரிதமாக கையளிக்கப்படும்.
- ☑ யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதிகள் சேவை நடைபெறுகின்றன.

இலங்கையில்
சுற்றுலா பயணத்துக்கு
உரிய பஸ்சேவைகளை
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

email : info@ppttravel.com web : www.ppttravel.com

| Colombo - 06 | Colombo - 13 | Jaffna | Point Pedro |
|---|---|---|---|
| #296 A1, Galle Road, Wellawatte, | #182, Central Road, | #183, K.K.S. Road, | Arasadi Lane, Point Pedro |
| Colombo - 06. | Colombo-12, | Jaffna. | 021 4923724 / |
| 076 6036204 / 011 2364999. Fax: 011 2361144 | 077 5755175 / 011 4375790 | 077 5731318 / 0214923240 | 077 573 6003 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016

## தரமான உடல் ஆரோக்கிய உபகரணங்கள் எம்மிடம் உண்டு



உங்கள் தேவைகளுக்கு எம்மை அனுகுங்கள்.

| | |
|---|---|
| Wheel Chair | 9,800.00 |
| Commode Wheel Chair | 14,900.00 |
| Commode Chair | 4,800.00 |
| Elbow Crutches | 1,240.00 |
| Feather Surgical Blades – 100's | 4200.00 |

மருந்தகங்களுக்கும் மருத்துவ நிலையங்களுக்கும்
**10%** விசேட கழிவு உண்டு.

## வனிக்கா சேஜிக்கல்ஸ்

203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel-0212220077, Hot-0774422367
E-mail-vanisurgi@sltnet.lk

## மிஹின் லங்கா
### விமான சேவை



- UK (லண்டன்), Canada, Paris, Swiss, Australia, USA (America) ஆகிய நாடுகளுக்கான VISA பெற்றுக்கொள்வதற்கான சகல ஆலோசனைகளும் எமது தலைமைக் காரியாலயம் Atlas Lanka (அட்லஸ் லங்கா) வில் வழங்கப்படுகிறது.
- சகல நாடுகளுக்குமான Airline டிக்கற்றுகளை சகல Airline சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து எமது யாழ் கிளை மிஹின் லங்காவிலும், தலைமைக் காரியாலயம் அட்லஸ் லங்காவிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்களின் பிரயாணச்சீட்டுக்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணத்தில் உள்ள எமது அலுவலகத்தை நாடுங்கள்

எமது சேவைகள்:
- ✓Re Issue Tickets
- ✓விசா ஒழுங்குகள்
- ✓விசா ஆலோசனைகள்
- ✓Airline டிக்கற்றுகள்

மதுரை மற்றும் சென்னைக்கு **தினசரி**
மிஹின் லங்கா விமான சேவையில் பயணிக்கலாம்.
மேலதிக விவரங்களுக்கு:

தலைமைக் காரியாலயம்:
ATLAS LANKA (Pvt) Ltd,
299, காலி வீதி, கொழும்பு-03.
071 53 697 15
071 87 360 61
077 73 697 15

கிளை அலுவலகம்: மிஹின் லங்கா (Pvt) (Ltd.
இல.40/21, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
071 873 60 64
www.mihinlanka.com


அனைவருக்கும் நல்லை முருகன் அருள் கிட்டட்டும்



# உதயா ஜீவல்லர்ஸ்



நீங்கள் தெரிவு செய்யும் அனைத்து தங்க நகைகளுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.



உதயாவின் தங்கப் பவுன் நகைகள்
உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும்



VISA MasterCard Maestro மூலம் தங்கம் கொள்வனவு செய்ய முடியும்
021 222 4434
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No: 81, Kasthuriar Road, Jaffna.

# NEWTONE ELECTRICAL

ACL Cable
Songke

Your Complete Electrical & Plumbing, Retail / Wholesale Supplier and Contractor

A.SRIBASKARAN
PROPRIETOR



169, Sir Pon Ramanathan Rd,
Thirunelveli South, Jaffna.
Phone : 021 222 2037,
Cell : 077 061 0280.

வேலையாள்கள் தேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016


# SHARMILA TRAVELS & TOURS (Pvt) LTD.

**எமது நிறுவனத்திற்கு கீழ்க் காணும் பதவிகளுக்கு ஊழியர்கள் தேவை.**

1. Ticketing Staff (3வருட அனுபவமுள்ளவர்கள்)
2. Administrative officer
3. Cashier (Female)

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்கள், திகதிமாற்றம், பல்வேறு நாடுகளுக்கான விசா சேவைகள் மற்றும் பயணக் காப்புறுதிகள் என்பவற்றை ஒரே இடத்தில் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்

**SHARMILA TRAVELS 'சர்மிளா ரவல்ஸ்'**



எமது நிறுவனத்தில் சர்வதேச விமானகற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். இக்கற்கை நெறி 3 மாதங்களை உள்ளடக்கியதாகும். கற்கைநெறி கட்டணம் 30,000/- மட்டுமே.

உங்களது சுயவிவரக் கோவையினை Pettah@sharmilatravels.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக அனுப்பி வைக்க முடியும். மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 077 788 1656 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**கீழ்க்காணும் நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படும்.**

LONDON
GERMANY
ROME
PARIS
AUSTRALIYA
CANADA
SWISS
NEWZELAND
NORWAY

* புலம்பெயர்ந்து இருக்கும் இலங்கையருக்கு இரட்டை விசா பெறுவதற்கான குடியுரிமை ஆலோசனைகள் வழங்கப்படும்.

**மேலதிக விவரங்களுக்கு**

**077 7881656**



**VISA Services**

INDIA
THAILAND
MALAYSIA
INDONESIA
CHINA
VIETNAM
QATAR
UAE
AND
MANY MORE

**மேலதிக தகவல்களுக்கு**

**289, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே 021 2220266, 077 7881656**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 31.08.2016

## உங்கள் கனவுகள் எங்கள் கைவண்ணத்தில்





- அதி நவீன இல்லங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியன நிர்மாணங்கள்
- அனைத்திற்குமான வரைபடங்கள்
- முப்பரிமாண வரைபடங்கள்
- உள்ளக அலங்கரிப்பு
- தளபாட வடிவமைப்பு
- நீச்சல் தடாக நிர்மாணம்

- பொறியியலாளர்களின் நேரடி வழிநடத்தல்
- தொழில்நுட்ப உதவியாளர்களின் பூரண மேற்பார்வை
- இலகுக் கொடுப்பனவு
- குறைவான நிர்மாண கால எல்லை
- அதிநவீன உள்ளக வடிவமைப்பு
- பூரண மேலைத்தேய வடிவினாலான கட்டட நிர்மாணம்

- கட்டடங்களுக்கான வரைபடங்கள் முற்றுமுழுதாக இலவசம்
- நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கான காப்புறுதி முற்றுமுழுதாக இலவசம்.

**AYUSHMAN**
CIVIL ENGINEERS & CONSTRUCTION
Palali Road, Urumpirai South, Urumpirai.
0765 747 666 / 0765 761 800

---

நல்லைக்கந்தன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## மணமக்கள் தேவை

★ 83 இல் பிறந்த 4 இல் சூரியன் செவ்வாய் 10 ½ பாவமுடைய அமெரிக்க பிரஜா உரிமை பெற்ற ஆக்கிரெக்காக பணிபுரியும் மணமகளுக்கு BSc M.Sc மணமகன் தேவை.
★ 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 39¼ பாவமுடைய Msc Bio கெமிஸ்ரி முடித்து ஜெனடிஸ்ற் ஆக பணிபுரியும் சைவபோசன மணமகளுக்கு இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை.
★ 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 42 ½ பாவமுடைய சித்தமெடிசின் டாக்டருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய சைவபோசன டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 81 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 32 பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★ 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 56¼ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 81 இல் பிறந்த 6 இல் சூரியன் செவ்வாய் 8 பாவமுடைய சட்டதரணி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 30 பாவமுடைய Msc இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 81இல் பிறந்த 8 இல் செவ்வாய் 47 ½ பாவமுடைய M.Sc IT முடித்த லண்டன் பிரஜா உரிமை பெற்ற சைவ மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற IT முடித்த மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

**தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை**
**இல 62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி.**

---

நல்லைக் கந்தனே அனைவருக்கும் நல்லருள் புரிந்திட தேரேறி வந்திடுக.

கண்வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும் கண்ணாடிகளை சரிவரப்பெற்றுக்கொள்ளவும், நவீன ரக Frame களையும் தரமான Lenses களையும் பெற்றுக்கொள்ள அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளிற்கு பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்



## எரிக்கணேஷ்

இல.566,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 2486

**கிளைகள்**

இல.107, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
தொடர்பு: 021 224 0255

கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
தொடர்பு: 021 222 5233

---

## நியூ லலிதாஸ் ஜுவல்லறி



மங்கையர் மனம் கொள்ளைகொள்ளும்
தங்க நகைகளை நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

*New Lalithas* Jewellery

No 30,32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். / Kasthuriyar Road, Jaffna. ☎ 021 222 5511
கிளை: No 111 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 222 4134

---


NUTRITION

## புரோட்டினெக்ஸ்®

புரத வல்லுனர்



50 ஆண்டுகளுக்கு மேலாக புன்னகையை பரப்பிவரும்...




MRP Rs.1050/=(180g)

1. 50% முன் சமிபாடடைந்த புரதம்
2. அத்தியாவசிய விட்டமின்களும் கனியுப்புக்களும்
3. கொலஸ்ரோல் அற்றது
4. குறைந்தளவு கொழுப்பு
5. தாவரப் புரதம் அடங்கியது

புரோட்டினெக்ஸ்
தேவையான சக்தியையும் புரதத்தையும் வழங்குகின்றது



அஸ்ரன் லிமிடெட், 688, காலி வீதி, இரத்மலானை. தொலைபேசி : 011 2148799

---

## நியூ நகுலா ஜுவல்லறி



*New Nagula* Jewellery

No 45 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். / Kasthuriyar Road, Jaffna. ☎ 021 222 4101
கிளை: No 109 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invest in Your Future @ICBT Jaffna Campus



Apply now for September Intake 2016

**Entry Criteria**

- G.C.E. A/L or Equivalent Qualification
- Certificate in related field

QUALITY ASSURED AND MODERATED BY
CARDIFF METROPOLITAN UNIVERSITY - UK

## HND CIVIL ENGINEERING

## HND QUANTITY SURVEYING

» Career Path
MSc
BSc
HND
A/L's

Duration 02 Years

DEGREE COMPLETION IN SRI LANKA

For registrations or more informations

**Thiru - 076 928 9810**
thiru@icbtcampus.edu.lk

**Roy - 077 074 6553**
merojan@icbtcampus.edu.lk

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org